Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 28 | விலை - 30 ரூபா  செய்தி: 021 493 0000  விளம்பரம்: 021 493 1111

சுடர் :35  கதிர் :81  மாசி 06ஆம் நாள் செவ்வாய்க்கிழமை  18 பெப்ரவரி 2020  வள்ளுவர் ஆண்டு 2051




# இலங்கை அரசு தப்பிக்க அமெரிக்கா அனுமதிக்காது

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் உறுதி கூறினார் அமி பேரா

கொழும்பு, பெப்ரவரி 18

இலங்கை அரசானது சர்வதேச சமூகத்துக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றியே ஆக வேண்டும். இந்தக் கடப்பாட்டிலிருந்து இலங்கை அரசு விலக முடியாது. இதை உறுதிசெய்யும் வகையில் ஐக்கிய அமெரிக்கா அனைத்து முயற்சிகளையும் எடுக்கும். இவ்வாறு உறுதிபடத் தெரிவித்தது அமெரிக்க காங்கிரஸ் சபை.

23



"இந்த நாட்டின் ஜனாதிபதி சம்பந்தன் அல்ல கோத்தாபய என்பதை அமெரிக்கா முதலில் கருத்தில் கொள்ள வேண்டும்."

## அமெரிக்க மிரட்டலுக்கு கோத்தா அரசு பணியாது

கொழும்பு, பெப்.18

சர்வதேச சமூகத்துக்கு இலங்கை அரசுகள் வழங்கிய வாக்குறுதிகளை வைத்துக்கொண்டு அமெரிக்கா எம்மை மிரட்ட முடியாது. இந்த மிரட்டலுக்கெல்லாம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு அடிபணியாது.

இவ்வாறு தெரிவித்தார் கோத்தாபய அரசின் பேச்சாளரும் இராஜாங்க அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல.

05

## சு.கட்சி, பெரமுன புதிய கூட்டணி!

கொழும்பு, பெப்.18

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், சிறிலங்கா பொதுஜன பெரமுனவும் கூட்டணி அமைத்துத் போட்டியிடவுள்

05

## இதயத்துக்கு 'மவுசு'

கொழும்பு, பெப்.17

இதயம் சின்னத்துக்கு தேசப்பற்றுள்ள ஐக்கிய தேசியக் கட்சி உரிமை கோரியுள்ளது என்று தெரிய வருகின்றது.

05

## தீ மூட்டி மூதாட்டி உயிரிழப்பு

யாழ்ப்பாணம், பெப்.18

தெல்லிப்பளை, வித்தகபுரத்தில் மூதாட்டி ஒருவர் தனக்குத் தானே தீ மூட்டி உயிரிழந்துள்ளார். 78 வயதுடைய கந்

05



கருத்தோவியம்



## புதிய அரச அதிபர் நேற்று பதவியேற்பு

யாழ்ப்பாணம், பெப்.18

யாழ்ப்பாணம் மாவட்ட அரச அதிபராக மட்டக்களப்பைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை மகேசன் தனது கடமைகளை நேற்றுப் பொறுப்பேற்றார். யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் காலை 9.45 மணிக்கு பதவியேற்பு நிகழ்வு நடைபெற்றது.

05

## உலகத் திருக்குறள் மாநாடு யாழ்ப்பாணத்தில் பெப்.21 இல்

யாழ்ப்பாணம், பெப்.18

உலகத் திருக்குறள் இரண்டாவது மாநாடு யாழ்ப்பாணம் பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில்

05

## மின்சாரத்தால் தாக்குண்டு 17 வயதுச் சிறுவன் சாவு

### யாழ்ப்பாணம் நகரில் துயரம்

யாழ்ப்பாணம், பெப்.18

யாழ்ப்பாணம் நகரத்தில் பணியாற்றிய 17 வயதுச் சிறுவன் ஒருவன் மின் தாக்கத்துக்கு இலக்காகி உயிரிழந்துள்ளான். இந்தச் சம்பவம் ஸ்ரான்லி வீதியில் உள்ள குளிர்பான விற்பனை நிலையம் ஒன்றில் நேற்று நடந்துள்ளது.

23

## யாழ்ப்பாணத்தை மிரட்டிய கொள்ளைக் கும்பல் கைது!

யாழ்ப்பாணம், பெப்.18

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரிவுகளில் அண்மைக் காலங்களில் நடைபெற்ற கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் நேற்று 5 பேர்

23

## சிவராத்திரிக்கு 6 லட்சம் பக்தர்கள்

மன்னார், பெப்.18

வரலாற்றுச் சிறப்பு மிக்க திருக்கேதீச்சரம் ஆலயத்தில், மகா சிவராத்திரி தினத்துக்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவரும் நிலையில், இந்தமுறை ஆறு லட்

05

## மகளைத் துஷ்பிரயோகம் செய்த சந்தேகத்தில் தந்தைக்கு மறியல்

முல்லைத்தீவு, பெப். 18

மகளைப் பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டி ஒருவர் முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கைது செய்யப்பட்டு, இன்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர் மூன்று பிள்ளைகளின்

23



# சவேந்திர சில்வாவுக்கு சகல நாடுகளும் தடை!

## கோருகிறார் சி.வி.விக்னேஸ்வரன்

*யாழ்ப்பாணம், பெப்.18*

**சில்வாக்கெதிரான அமெரிக்காவின் பயணத் தடை ஏனைய நாடுகளும் பின்பற்றக் கூடிய ஒரு காரியமாக அமைகின்றது. இலங்கையில் படையணிகளால் ஆற்றப்பட்ட போர்க்குற்றங்கள், மனித இனத்துக்கெதிரான குற்றங்கள், இனப்படுகொலைகள் சம்பந்தமாக சர்வதேச நாடுகள் வழக்குத் தொடர வேண்டிய அத்தியாவசிய கடப்பாட்டை இந்தக் காரியம் கோடிட்டுக் காட்டுகிறது.**

இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன்.

அவர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் அவர்மேலும் குறிப்பிட்டுள்ளதாவது அமெரிக்க அரசின் செயலாளர் மைக் பொம்பியோவின் தீர்மானமாக போதிய நம்பத்தகு சாட்சியங்களின் அடிப்படையில் கொடூரமான மனித உரிமை மீறல்களில் ஆணையிடும் பொறுப்பின் அடிப்படையில் சில்வா ஈடுபட்டிருந்தார் என்று கண்டு சில்வாவை மதிப்புக்குரியவரற்ற ஒருவராக அடையாளம் கண்டுள்ளதை நாம் மனப்பூர்வமாக மெச்சிப் பாராட்டுகின்றோம்.

2009ஆம் ஆண்டு ஆயுதப் போராட்டத்தின் இறுதிக் கட்டத்தில் சில்வா சட்டத்துக்குப் புறம்பான சாகடித்தல்களை நடத்துமாறு ஆணையிட்டார் என்பதற்கு ஆதாரபூர்வமான குற்றச்சாட்டுக்களை சனல் 4 ஆவணப்படுத்தியுள்ளது. தொலைக்காட்சி மூலம் தரப்பட்ட அதன் அறிக்கையில், அப்போதைய பாதுகாப்பு செயலாளர் கோத்தாபய ராஜபக்ச அனுப்பிய ஆணை.ப சில்வா இலங்கை இராணுவத்தின் 58ஆவது படையணி அலுவலர்களுக்கு மறு ஒலிபரப்பு செய்த போது பின்வரும் சில்வாவின் கட்டளையும் உள்ளடக்கப்பட்டுள்ளது "செய்யக் கூடியதைச் செய்க! எவ்வாறாறெனினும் செய்க!. (ஆனால்) முடிக்க வேண்டிய முறையில் அதை முடிவுக்குக் கொண்டு வரவும்!" சில்வாவின் இந்தக் கட்டளையானது தமிழ் மக்களின் பெரும் எண்ணிக்கையிலான படுகொலைகளுக்கு இடமளித்தது. அது அப்பாவி பொது மக்களையும் சரணடைந்த போராளிகளையும் (கெட்ட பெயரெடுத்த வெள்ளைக்கொடி நிகழ்வு) உள்ளடக்கியது.

சில்வாக்கெதிரான அமெரிக்காவின் பயணத் தடை ஏனைய நாடுகளும் பின்பற்றக் கூடிய ஒரு காரியமாக அமைகின்றது. இலங்கையில் படையணிகளால் ஆற்றப்பட்ட போர்க் குற்றங்கள், மனித இனத்துக்கெதிரான குற்றங்கள், இனப்படுகொலைகள் சம்பந்தமாக சர்வதேச நாடுகள் வழக்குத் தொடர வேண்டிய அத்தியாவசிய கடப்பாட்டை இந்தக் காரியம் கோடிட்டுக் காட்டுகிறது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தொடர் தீர்மானங்கள் பலவற்றை ஸ்ரீலங்கா தொடர்ந்து நடைமுறைப் படுத்த மறுத்து வந்துள்ளது. அந்தத் தீர்மானங்கள் கலப்பு முறையான நீதிமன்றங்களை உருவாக்கி போர்க்குற்றவாளிகளை விசாரித்து தீர்ப்பு வழங்க வலியுறுத்தி வந்துள்ளன. துல்லியமான குற்ற ரீதியான பொறுப்புகளை சுமப்பவர்கள் என்று தெளிவாகக் காணப்படும் படையணியினர் யாவரும் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தால் கட்டாயமாக விசாரிக்கப்பட வேண்டியவர்கள் அல்லது அவ்வாறு விசாரிக்க வல்ல நியாயாதிக்கத்தைக் கொண்ட மன்றமொன்றால் விசாரிக்கப்பட வேண்டியவர்கள்.

ஐ.நா. பட்டயத்தின் VIIஆவது அத்தியாயத்தின் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் உலகளாவிய நியாயாதிக்கக் கோட்பாட்டின் கீழ் மற்றும் ரோம் நியதிச்சட்ட வரைவில் கையெழுத்திடாத நாடுகளின் குடிமக்கள் சம்பந்தமாக இந்த நியதிச் சட்ட ஏற்பாடுகளை அவர்கள் மீது நடைமுறைப் படுத்த கையாள வேண்டிய நடைபடிமுறை போன்றவற்றின் கீழ் சர்வதேச சமூகம் வழக்குத் தொடர இருக்கும் அதிகாரம் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

தொடர்ந்து வந்த மூன்று இலங்கை அரசுகளும் பத்து வருடங்களுக்கு மேலாக குறித்த குற்றங்களை விசாரிப்பதைத் தட்டிக் கழித்து வந்ததில் இப்பொழுதாவது சட்டத்தின் அதிகாரம் கட்டாயமாக நிலைநிறுத்தப்பட வேண்டியுள்ளது. தமிழ் மக்களின் நீதிக்கான பயணத்தில் ஒரு முக்கிய கூட்டம் தற்பொது பரிணமித்துள்ளது. "கள களதே பள பளவே" என்பது ஒரு சிங்களப் பழமொழி. "முற்பகல் செய்த வினை பிற்பகல் விளையும்" என்பது அதன் அர்த்தம் - என்றுள்ளது. (ஏ)

# முதல் வாய்ப்பில் பொதுத் தேர்தல்!

## ஜனாதிபதியை கோருகிறார் பிரதமர்

கொழும்பு, பெப்.18

நாடாளுமன்றத்தைக் கலைத்து உடனடியாகப் பொதுத் தேர்தலுக்குரிய நடவடிக்கைகளை ஜனாதிபதி முன்னெடுக்க வேண்டும். அரசியல் பழிவாங்கல்கள், முரண்பாடான அரசியல் நிர்வாகம் ஆகியவற்றைக்கொண்டு நாட்டைச் சிறந்த முறையில் கட்டியெழுப்ப முடியாது என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

பதுளை, அதம்பிடிய பிரதேச நீர் வழங்கல் திட்டத்தைப் பிரதமர் மஹிந்த ராஜபக்ச நேற்று ஆரம்பித்து வைத்தார். அந்த நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாம் எதிர்க்கட்சியாகச் செயற்பட்ட கடந்த 5 வருட காலத்தில் பதவியில் இருந்த அரசு தொடர்பாக மகிழ்ச்சியடைய முடியாது. பெருமளவான அரச முறைக் கடன் சுமையை வைத்துவிட்டே அவர்கள் சென்றுள்ளனர். நாங்கள் அதிக கடன்களைப் பெற்றோம் என்று அவர்கள் எம்மீது குற்றஞ்சுமத்தினாலும் நாம் பெற்ற கடன்கள் ஊடாகவே அதிவேக நெடுஞ்சாலைகள், துறைமுகம், விமான நிலையம் போன்ற செயற்றிட்டங்களைக் கட்டியெழுப்பினோம்.

தற்போது புதிய அரசும், புதிய ஜனாதிபதியும், பிரதமரும் நியமிக்கப்பட்டுள்ளனர். ஆனால் நாடாளுமன்றத்தில் எங்களுக்குப் பெரும்பான்மை பலம் இல்லை. கடன்களை மீளச் செலுத்துவதற்கு நாம் சட்டமூலம் ஒன்றைக் கொண்டுவ நாம் தயாராகின்றோம். எதிரணி விரும்பினால் அதைத் தோற்கடிக்க முடியும். அவ்வாறு தோற்கடிக்கும் பட்சத்தில் நாட்டின் எதிர்கால அபிவிருத்திப்பயணம் பாதிப்படையும்.

ஆனால் நாட்டின் அபிவிருத்திக்கு எதிர்த் தரப்பினரால் மிகச் சொற்ப காலத்துக்கே இடையூறு விளைவிக்க முடியும். ஏனெனில் எதிர்வரும் மார்ச் மாதம் நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கான முதலாவது வாய்ப்புக் கிடைக்கும். அந்த முதல் வாய்ப்பிலேயே நாடாளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத் தேர்தலுக்குச் செல்வ வேண்டும் என்று ஜனாதிபதியைக் கேட்டுக்கொள்கின்றோம். என்றார். (ஏ)

# ஜனாதிபதி செயலகம் முன் நேற்று இரு ஆர்ப்பாட்டங்கள்

கொழும்பு, பெப்.18

ஜனாதிபதி செயலகம் முன்பாக நேற்று இரு தரப்பினர் தனித்தனியாகக் கோரிக்கைகளை முன்வைத்து ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டனர்.

வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தொழில் வாய்ப்பை இழந்த அதிகாரிகளும், இராணுவத்தினரின் உரிமைகளை பாதுகாப்பதற்கான தேசிய இயக்கத்தினருமே ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தொழில் வாய்ப்பை இழந்த அதிகாரிகளால் ஏற்பாடு செய்யப்பட்ட எதிர்ப்பு ஆர்பாட்டத்தில் 50க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். அவர்களில் சிலருக்கு ஜனாதிபதி செயலகத்துக்குள் சென்று கலந்துரையாடல் மேற்கொள்ள வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது.

அங்கவீனமடைந்த இராணுவத்தினருக்கு ஓய்வூதியத்துக்கு பின்னராக சம்பளத்துக்கு நிகரான தொகையை வழங்கக் கோரி இராணுவத்தினரின் உரிமைகளை பாதுகாப்பதற்கான தேசிய இயக்கமும் ஓய்வுபெற்ற விசேட தேவையுடைய இராணுவத்தினர் மற்றும் அவர்களுடைய மனைவிமார்களுடைய சங்கத்தினரும் இணைந்து ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் அங்கவீனமடைந்த இராணுவ வீரர்கள் கலந்துகொண்டனர். தேசிய கொடியை ஏந்தித் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிவர்களில் சிலருக்கு ஜனாதிபதி செயலகத்துக்குள் சென்று கலந்துரையாட வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (ஏ)

# சாரணர் தின நிகழ்வு

சாரணர் இயக்க தின நிகழ்வுகள் எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 2.30 மணிக்கு பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலயத்தில் நடத்தப்படவுள்ளன. சாரணர் மாவட்ட ஆணையாளர் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுகளுக்கு முதன்மை விருந்தினராக வலிகாமம் கல்வி வலய கல்வி அபிவிருத்தி அலகின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ந.காண்டீபன் கலந்து கொள்வார். நிகழ்வுக்கு சாரணர் மாவட்டங்களின் தலைமை ஆணையாளர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரியின் பழைய மாணவன் சு.ரவிசங்கரின் அனுசரணையுடன் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. (ப-9)



# புத்தகப் பைகள் கையளிப்பு

வவுனியா,பெப்.18

வவுனியா பிரமண்டு வித்தியாலயத்தில் கல்விகற்கும் 15 மாணவர்களுக்கு புத்தகக் பைகள் அண்மையில் வழங்கப்பட்டன.


கனடா வாழ் கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவி திருமதி நந்தினி சபேசன் தனது தாயாரின் நினைவாக இந்த உதவியை வழங்கியிருந்தார்.

கல்லூரி அதிபர் திருமதி இ. மோகன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வவுனியா மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் செ.ஸ்ரீநிவாசன் கலந்து கொண்டார். (ஐ-222)



அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலய ஆசிரியர் திருமதி செல்வராணி பரமேஸ்வரனுக்கான மணிவிழா நிகழ்வு நேற்று திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் ஐ.தேவஈஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. (ஐ-159)

# குடாநாட்டில் முதலாவது 'நெற்வேர்க்' கண்காட்சி



யாழ்ப்பாணம், பெப். 18

'நெற்வேர்க்' தகவல் தொழில் நுட்பக் கண்காட்சியும், செயலமர்வுகளும் கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் ரில்கோ விருந்தினர் விடுதியில் இடம்பெற்றன. யாழ்ப்பாணக்குடாநாட்டில்முதன்முதலாக இந்தக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம், றோட்டறிக் கழகமும், வடக்குதகவல்தொழில்நுட்பநிறுவனமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்தக் கண்காட்சியில் இந்தியாவின் சென்னை, பெங்களூர், மும்பை போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். நிறுவனத்தினர் தங்களுடைய சேவைகளை விஸ்தரிக்கும் நோக்குடனும், தங்களுக்கான ஆளணிகளை உருவாக்குவதற்காகவும் இந்தக் கண்காட்சியில் கலந்துகொண்டிருந்தன. புதிய தகவல் தொழில்நுட்பத்துக்கான முயற்சிகள் இந்தக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. தென்பகுதியைச் சேர்ந்த தகவல் தொழில் நுட்ப நிறுவனங்களும், தங்களுடய செயற்பாடுகளை கண்காட்சியின்போது காட்சிப்படுத்தியிருந்தன.

இதில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் நாடாளுமன்ற உறுப்பினர், ஈ.சரவணபவன், நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், இந்திய துணைத்தூதுவர் பாலச்சந்திரன், யாழ்ப்பாண மாநகர முதல்வர் இ.ஆனல்ட் ஆகியோர் விருந்தி னர்களாகக் கலந்து கொண்டு கண்காட்சிக் கூடத்தைத் திறந்து வைத்தனர். யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த தகவல் தொழில்நுட்ப மாணவர்கள், தகவல் தொழில் நுட்ப அறிவுசார்ந்தோர், றொட்டறிக் கழகத்தினர் எனப் பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (ப)

# 'கொங்கிறீற்' பொருத்து வீடுகள் மீண்டும் யாழ்ப்பாணத்துக்கு!

## தலா 13 லட்சத்தில் 30 வீடுகள் என்று திட்டம் 21ஆம் திகதி அமைச்சர் அடிக்கல்

*யாழ்ப்பாணம், பெப். 18*

*யாழ்ப்பாணத்தில் மீண்டும் 'கொங்கிறீற் பொருத்து வீடுகள்' அமைக்கப்படவுள்ளன. அதற்காக அடிக்கல் நடும் நிகழ்வு எதிர்வரும் 21ஆம் திகதி தெல்லிப்பழையில் நடைபெறவுள்ளது.*

அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் அடிக்கல் நடுவார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த அரசில் பிரதமரின் செயலாளராகப் பணியாற்றிய சிவஞானசோதி ஒதுக்கிய நிதியிலிருந்து 30 வீடுகளை அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வே அன்று இடம்பெறவுள்ளது.

அன்றைய தினம் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கல்விபயிலும் தென் பகுதி மாணவர்களில் தெரிவு செய்யப்பட்ட 300 பேருக்கு அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் சைக்கிள்கள் வழங்கவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

இதுதவிர, 'கொங்கிறீற்' பொருத்து வீடுகள் பதுளையில் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றை வடக்கிலுள்ள பிரதேச செயலர்கள் சிலர் சென்று பார்வையிட்டிருந்தனர். சில மாற்றங்களை ஏற்படுத்தினால் வடக்கிலும் இத்தகைய வீடுகளை அமைக்கலாம் என்று கூறியிருந்தனர். இந்த நிலையில் தலா 13 லட்சம் ரூபாவில் 'கொங்கிறீற்' பொருத்து வீடுகள் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படவுள்ளன.

ஆனால் பிரதேச செயலர்கள் கூறிய பரிந்துரைகள் அல்லது மாற்றங்களுடன்தான் இத்தகைய வீடுகள் இங்கு அமைக்கப்படவிருந்தன என்பது பற்றித் தெரியவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

முன்னைய அரசில் இத்தகைய பொருத்துவீடுகள் 26 லட்சம் ரூபாவில் அமைக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. அதற்கு வடக்கிலுள்ளவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். குறிப்பாக கூட்டமைப்பினரும் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர். காரணம், அந்த வீடு வடக்கிலுள்ள காலநிலைக்குப் பொருத்தமில்லை என்றும் வெயில் காலங்களில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியதாக உள்ளன என்றும் கூறப்பட்டது. தவிர, பொருத்துவீடுகள் கல்வீடுகளைப் போன்று உறுதியானதாக இல்லை என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டது.

இவைமட்டுமன்றி ஒவ்வொரு வீட்டினதும் பெறுமதி பற்றிய விடயத்தில் கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. முதலில் 26 லட்சம் என்று கூறப்பட்டது. பின்னர் 20 லட்சம் ரூபா என்று கூறப்பட்டது.

இறுதியில் 13 லட்சம் ரூபாவுக்கு அமைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இறுதியில் அந்த வீடுகள் அமைக்கப்படவில்லை. மாதிரி வீடுகளே யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (த-105)

# போட்டி நிகழ்வுகள்

மானிப்பாய்,பெப்.18

மானிப்பாய் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சுதுமலை தெற்கில் கிராம ஒற்றுமையை நோக்கமாகக் கொண்டு பல்வேறு போட்டி நிகழ்வுகள் நேற்று முன்தினம் நடைபெற்றன.

சுதுமலை தெற்கு யுவசக்தி சனசமூக நிலையம், ஞானவைரவர் ஆலயம்,மற்றும் சுதுமலை தெற்கு இளைஞர் கழகம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் நிகழ்வுகள் நடைபெற்றன.

எதிர்வரும் மகா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட இந்த போட்டி நிகழ்வுகள் ஆலய முன்றிலில் நடைபெற்றன.

வீதி ஓட்டம் ,மெதுவான சைக்கிள் ஓட்டம்,கோலம் போடுதல்,தோரணம் பின்னுதல்,பொது அறிவு பரீட்சை ,கிறீஸ் மரம் ஏறுதல், உறி அடித்தல்,கயிறு இழுத்தல் ,வர்ணம் தீட்டுதல் போன்ற பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்றன.

போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்கள் எதிர்வரும் சிவராத்திரி அன்று வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-7)



# மாலை 5 மணியுடன் கல்விச் செயற்பாடு நிறுத்தம்

சாவகச்சேரி, பெப். 18

சாவகச்சேரி நகரப்பகுதியில் உள்ள அனைத்து தனியார் கல்வி நிறுவனங்களும் தமது கற்பித்தல் செயற்பாடுகளை மாலை 5 மணியுடன் நிறுத்தியுள்ளன. சாவகச்சேரி நகரசபையின் அறிவிப்பின் பிரகாரம் இந்த நடைமுறை பின்பற்றப்படுகின்றது.

பாடசாலை மாணவர்கள் கல்விச் செயற்பாடுகளால் பெரும் இக்கட்டான நிலைக்குத்தள்ளப்பட்டுவருகின்றமையால் சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இயங்கும் தனியார் கல்வி நிறுவனங்கள், பிரத்தியேக வகுப்புகள் அனைத்தும் மாலை 5 மணியுடன் நிறைவடைய வேண்டும்என்றுதீர்மானம்எடுக்கப்பட்டது.

இதன்படி நகரசபைத் தவிசாளரால் தனியார் கல்வி நிறுவனங்களுக்கும் பிரத்தியேக வகுப்புகளை நடத்துவோருக்கும் அறிவித்தல் கடிதம் அனுப்பப்பட்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. (ஐ-9)



# சர்வாதிகார ராணுவ ஆட்சிக்கு தற்போதைய அரசு முயற்சியா?

## சிவமோகன் எம்.பி. கேட்கின்றார்

மன்னார், பெப். 18
"சர்வாதிகார இராணுவ ஆட்சியை நிலைநிறுத்தும் நகர்வுகளில் புதிய அரசு ஈடுபடுகிறதா?" என்று கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
சில நாள்களுக்கு முன்னர் நீர்கொழும்பில் நடைபெற்ற தேசிய மாநாட்டில் உரையாற்றிய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ, சட்டமன்றத்திலும் நிர்வாகத்திலும் நீதித்துறை தலையிடக்கூடாது என்று கூறியுள்ளார்.
நிறைவேற்று அதிகாரத்தை மக்கள் சார்பாக மேற்கொள்ளும்போது நீதித்துறை தலையிடக் கூடாது என்றும் கூறியுள்ளதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. அவருடைய அந்தக் கருத்து சர்வாதிகாரப் போக்கின் ஆரம்பமாகவே கருதப்படக் கூடியதாகவுள்ளது.
ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைக்கும் முயற்சிகளில் புதிய அரசு ஈடுபட்டு வருகின்றது என்பது கவலைக்குரிய விடயம். சிவில் நிர்வாகத்தில் வட பகுதி எங்கும் இராணுவம் மற்றும் புலனாய்வுத் துறையினரின் தலையீடு ஆங்காங்கே வெளிப்பட்டு வருகின்றது.

**ராணுவத்திடம் முடங்கும் பொலிஸ்**

பொலிஸார் இராணுவத்தினரின் கீழ் கட்டுப்பட்டுச் செயற்பட முற்படுகிறார்கள். இது சிவில் நிர்வாகத்தின் சீர்குலைவாகவே கருதப்படவேண்டியது.
நாட்டின் பாதுகாப்பு என்ற போர்வையில் அதிகப்படியான இராணுவத் தடை முகாம்களை ஆங்காங்கே ஏற்படுத்தி தமிழ் மக்களை இராணுவ முற்றுகைக்குள் வைத்திருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.
மீண்டும் பயப்பீதி கொண்ட தமிழ் மக்கள் அமைதியாக அடக்குமுறைக்குள் அடங்கிப் போகும் நிலையே காணப்படுகின்றது. இந்த நிலை மாற்றப்பட வேண்டும். மக்களின் சமூக வாழ்வில் இராணுவத்தினரின் தலையீடுகள் நேரடியாக இருக்கக் கூடாது என்று மக்கள் விரும்புகிறார்கள்.
நீதித்துறையை செயலிழக்கச் செய்யும் நடவடிக்கையில் புதிய அரசு இறங்கப் போகின்றது என்பது வெட்ட வெளிச்சமாகியுள்ளது.
இவற்றுக்குத் தலைசாய்க்க சிங்கள தேசம் தயாராகி வருகிறது. இதன் மூலம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வழங்கி சர்வாதிகாரப் போக்கை மீண்டும் நிலைநாட்ட சிங்கள தேசம் தயாராகி வருகிறதா? என்ற கேள்வி எழுகிறது.
ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைகளின் செயற்பாடுகள்கூட சந்தேகத்துக்கிடமாகவே காணப்படுகின்றது. ஒட்டு மொத்தத்தில் இலங்கை மக்களின் வாழ்வுரிமையைக் குலைத்து விட்டு எதிர்காலத்தில் இலங்கை மக்கள் அனைவரும் அவதியுறும் நிலையே ஏற்படும். என்று மேலும் தெரிவித்தார். (கு-213)



# வறிய மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள்

வவுனியா, பெப்.18
வவுனியா சிதம்பரபுரம் நாகாராஜா வித்தியாலத்தில் கல்வி பயிலும் 18 வறிய மாணவர்களுக்கு சுவிஸ் தமிழ் கல்விச் சேவையின் ஊடாக துவிச்சக்கர வண்டிகள் நேற்றுத் திங்கட்கிழமை வழங்கப்பட்டன.
இந்த உதவித்திட்டத்துக்கான ஒழுங்கமைப்பை வவுனியா நகரசபையின் உறுப்பினரும் பாடசாலையின் ஆசிரியருமான சுந்தரலிங்கம் காண்டீபன் ஏற்பாடு செய்திருந்தார்.
பாடசாலையின் அதிபர் இ.தமிழழகன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா தெற்கு கல்வி வலய விஞ்ஞான பாட ஆசிரிய ஆலோசகர் இ.மாதவன் கலந்து கொண்டு துவிச்சக்கர வண்டிகளை வழங்கி வைத்தார்.
நிகழ்வில் தமிழ் கல்வி சேவையின் இணைப்பாளர் புஸ்பலதா, பிரதி அதிபர் ம.ஜெயபிரகாஷ், மாணவர்கள் பெற்றோர்கள் கலந்துகொண்டனர். (ஜ-110)

# கமநல திணைக்களத்துக்கு அழைப்பு விடுக்கவில்லை

யாழ்ப்பாணம், பெப். 18
கமநல சேவைத் திணைக்களத்தின் ஆளுகையில் உள்ள ஆயிரத்து 421குளங்களில் 333 குளங்களை வனவளத் திணைக்களம் ஆக்கிரமித்துள்ள நிலையில், நில அபகரிப்பு உள்ளிட்ட விடயங்கள் பற்றிய திணைக்கள அதிகாரிகளுடனான கூட்டத்துக்கு கமநல சேவைத் திணைக்களத்துக்கு அழைப்பு விடுக்கவில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.
வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் நிலவும் வனவளத் திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்தின் அதிகாரிகள் மற்றும் மாவட்ட அதிகாரிகளுக்கிடையிலான கலந்துரையாடல் வவுனியா மாவட்டச் செயலகத்தில் இன்று நடைபெறவுள்ளது.
இதற்கு மக்கள் பிரதிநிதிகளான எமக்கும் அறிவிக்கவில்லை. அந்தத் திணைக்களங்கள் மக்களின் வாழ்விடம் வாழ்வாதார நிலம் மட்டுமன்றி திணக்களங்களின் நிலங்களையும் ஆக்கிரமித்துள்ளன.
அவற்றில், கமநல சேவைத் திணைக்களத்தின் ஆளுகையில் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் 333 குளங்களை வனவளத் திணைக்களத்தினர் ஆக்கிரமித்துள்ளனர். இதனால் கமநலசேவைத் திணைக்களத்தால் எட்டியும் பார்க்க முடியவில்லை.
வவுனியாவில் 780 குளங்கள் உளபோதும், 157 குளங்கள் வனவளத் திணைக்களத்தின் பிடியில் உள்ளன. மன்னார் மாவட்டத்தில் 368 குளங்கள் உள்ளன. அவற்றில் 98 குளங்கள் வனவளத் திணைக்களத்தின் பிடியில் உள்ளன. முல்லைத்தீவு மாவட்டத்தில் 273 குளங்கள் உள்ளன. 78 குளங்கள் வனவளத் திணைக்களத்தின் ஆக்கிரமிப்பில் உள்ளன.
மாவட்டங்களின் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றும் விவசாய நடவடிக்கைகளுக்குரிய குளங்களே ஆக்கிரமிப்பில் உள்ளன.
இவற்றை விடுவிப்பது தொடர்பில் பல தடவைகள் கூட்டம் நடத்தியபோதும் பயன் இன்னும் இல்லை என்று மேலும் தெரிவித்தார். (கு-105)

# உடையார்கட்டில் வங்கிச் சேவையை ஆரம்பிக்கக் கோரி ஆளுநரிடம் மனு



முல்லைத்தீவு, பெப். 18
முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு உடையார் கட்டுப் பகுதியில் வங்கிச் சேவையை ஆரம்பித்து தருமாறு கோரி அந்தப் பகுதி விவசாயிகள் வடக்கு மாகாண ஆளுநர் பி.எச்.எம். சாள்ஸிடம் மனு ஒன்றைக் கையளித்தனர்.
முல்லைத்தீவு மாவட்டத்துக்கு நேற்று பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ள வடக்கு மாகாண ஆளுநர் பி.எச்.எம். சாள்ஸ் ஒட்டுசுட்டான் பகுதியில் அமையப்பெற்ற முத்துஜயன்கட்டு நீர்பாசன பொறியிலாளர் அலுவலகத்தை திறந்து வைத்தார்.
இதன்போது முல்லைத்தீவு மாவட்டத்தின் உடையார் கட்டு விவசாயிகள் சார்பிலான கோரிக்கை ஒன்றை கமக்கார அமைப்பின் தலைவர் வடக்கு மாகாண ஆளுநரிடம் கையளித்தார்.
அந்த மனுவில் மேலும் உள்ளதாவது;
"உடையார் கட்டு குளத்துக்கு கீழ் நான்காயிரத்துக்கும் அதிகமான விவசாய நிலப்பரப்பில் விவசாயம் செய்துவரும் விவசாயிகள் ஒரு போகத்துக்கு பத்துக்கோடி ரூபாவுக்கும் அதிகளவில் நெல்லை விற்பனை செய்து வருகின்றார்கள். எனினும் இந்த விவாசாயிகள் வங்கி நடவடிக்கைகளை மேற்கொள்வதாக இருந்தால் புதுக்குடியிருப்புக்குத்தான் செல்ல வேண்டியுள்ளது, கடந்த ஐந்து ஆண்டுகளாக உடையார் கட்டுப்பகுதிக்கு வங்கியும் எரிபொருள் நிரப்பு நிலையமும் பெற்று தருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் ஏமாற்றிவிட்டார். இனியாவது மக்களின் நிலை அறிந்து உடையார்கட்டுப் பகுதியில், விவசாயிகளின் நன்மை கருதி வங்கிச் சேவை ஒன்றை அமைத்துத் தாருங்கள் என்று அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-19)

# மஹிந்த - மைத்திரிபால இன்று முக்கிய சந்திப்பு!

கொழும்பு, பெப்.18
ஶ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவரான பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்கும் ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையிலான முக்கிய சந்திப்பு இன்று அலரி மாளிகையில் நடைபெறவுள்ளது.
எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் இருதரப்பினரையும் (ஶ்ரீலங்கா பொதுஜன முன்னணி + ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி) ஒன்றுபடுத்திய உத்தேச கூட்டணி அமைத்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்வதற்கான சின்னம் தொடர்பில் இன்றைய சந்திப்பில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என்று ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார். (எ-22)

# அரச காணிப்பிரச்சினைகளை ஆராய துரித நடவடிக்கைகள்

மூளாய்,பெப்.18

வடக்கு மாகாணத்தில் உள்ள அரச காணிகள் தொடர்பான பிரச்சினைகளை ஆராய்ந்து, அவற்றுக்கான தீர்வுகளைத் துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான அனைத்து நடவடிக்கைகளையும், வடக்கு ஆளுநர் செயலகம் ஏற்கனவே ஆரம்பித்துள்ளது.

வடக்கு மாகாணத்தில் காணப்படும் இவ்வாறான பிணக்குகளைத் தீர்ப்பதற்காக வடக்கு ஆளுநரால் ஏற்கனவே விசாரணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த விசாரணைக்குழுவுக்குப் பொதுமக்கள் மற்றும் பொது அமைப்புக்கள் காணி பிணக்குகள் தொடர்பான முறைப்பாடுகளைத் தெரிவிக்க முடியும்.

குழுவுக்கு முறைப்பாடுகள் அதிகம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும், குறைந்த எண்ணிக்கையில் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அதனால் விசாரணைக் குழுவின் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவதற்கு ஆளுநர் செயலகம் மீண்டும் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக பொதுமக்களுக்கு உரிய அறிவித்தல்களை வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (க-121)

# துணைவேந்தர் தெரிவு பொறிமுறைக்குக் குழு

யாழ்ப்பாணம், பெப்.19

பல்கலைக் கழங்களுக்குத் துணைவேந்தர்களை நியமிக்கும் பொறிமுறையைத் தயாரிக்கும் குழுவின் இணைத் தலைவர்களாக மானியங்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களான பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், பேராசிரியர் ஆனந்த ஜெயவர்த்தன உட்பட 5 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். ஏனைய 3 பேரும் ஆணைக்குழுவுக்கு வெளியே இருந்து உள்வாங்கப்பட்டுள்ளனர்.

பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர் பதவிக்கு விண்ணப்பிப்போரில் அனுபவமும், செயற்றிறனும் உள்ளவர்களை தெரிவு செய்யும் வகையில் புதிய பொறிமுறை ஒன்றை உருவாக்க வேண்டும் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு ஆலோசனை வழங்கியிருந்தார்.

இந்தப் பொறிமுறையை உருவாக்குதவற்கே 5 பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு, துணைவேந்தர்களைத் தெரிவு செய்வதற்கான பொறிமுறையைத் தயாரித்து பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்குப் பரிந்துரை செய்யும். (எ-105)

# வர்த்தகர் ஒருவர் கைது

மட்டக்களப்பு, காத்தான்குடியைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் காங்கேசன்துறை விசேட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால் மந்திகையில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை மந்திகையில் உள்ள அவரின் புடவைக்கடையில் வைத்தே குறித்த வர்த்தகரைத் தாம் கடந்த சனிக்கிழமை மாலை கைது செய்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

புடவைக்கடையில் கஞ்சா வியாபாரம் இடம் பெறுவதாக கிடைத்த இரகசியத்தகவலின் அடிப்படையில் கடையினை சோதனையிட்ட போது 55 கிராம் கஞ்சா கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும், சந்தேகத்தின் பேரில் ஒருவரைத் தாம் கைது செய்துள்ளதாகவும் மேலதிக விசாரணைக்காக அவரை பருத்தித்துறைப் பொலிஸிடம் பாரப்படுத்தியுள்ளதாகவும் காங்கேசன்துறைப் பொலிஸார் தெரிவித்தனர். (ந-173 26)

## அமெரிக்க...

இலங்கை அரசானது சர்வதேச சமூகத்துக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றியே ஆக வேண்டும் எனவும், இந்தக் கடப்பாட்டிலிருந்து இலங்கை அரசு விலக முடியாதவாறு அமெரிக்கா அனைத்து முயற்சிகளையும் எடுக்கும் எனவும் கொழும்பில் நேற்று மாலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுடனான சந்திப்பில் அமெரிக்க காங்கிரஸ் சபை உறுப்பினரும் ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியங்களின் வெளிவிவகார உபகுழுவின் தலைவருமான அமி பேரா தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் நேற்றிரவு இராஜாங்க அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தாளத்துக்கேற்ப அமெரிக்கா ஆடுகின்றதோ அல்லது அமெரிக்காவின் தாளத்துக்கேற்ப தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆடுகின்றதோ என எமக்குத் தெரியவில்லை. ஆனால், இந்த நாட்டின் ஜனாதிபதி சம்பந்தன் அல்ல கோத்தாபய என்பதை அமெரிக்கா முதலில் கருத்தில்கொள்ள வேண்டும்.

கோத்தாபய அரசுடன் பேசாமல் சம்பந்தன் குழுவினர் மற்றும் புலம்பெயர் தமிழர் அமைப்புகளின் கதைகளைக் கேட்டுக்கொண்டு இலங்கை தொடர்பில் அமெரிக்கா அநாவசியமான முடிவுகளை எடுப்பதுடன் விசமத்தனமான கருத்துக்களையும் வெளியிட்டு வருகின்றது-என்றார். (எ-22)

## சு.கட்சி...

என. இந்தக் கூட்டணி தொடர்பாக அவை தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளன.

சிறிலங்கா சுதந்திர பொது மக்கள் முன்னணி என்ற புதிய கூட்டணி ஊடாகவே அவை போட்டியிடவுள்ளன.

அதேவேளை, சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் சிறிலங்கா பொதுஜன பெரமுன இடையே தேர்தல் சின்னம் தொடர்பாக முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன.

மகிந்த ராஜபக்ச தலைமையிலான பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் மொட்டுச் சின்னத்தில் பொதுத் தேர்தலில் போட்டியிட வேண்டும் என்று கூறி வருகின்றனர்.

எனினும் மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்கள் பொதுச் சின்னம் ஒன்றில் தேர்தலில் போட்டியிட வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றனர். (எ)

## இதயத்துக்கு...

நேற்றுத் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குச் சென்ற அதன் செயலாளர் சுகத் ஹேவாபத்திரன இதயம் சின்னத்தைத் தாங்கள் பதிவு செய்துள்ளதால் யாரும் உரிமை கோர முடியாது என்று தெரிவித்துள்ளார் என்று அறிய முடிகின்றது.

அதேவேளை சஜித் பிரேமதாச அணியினரின் இதயம் சின்னத்தைப் பயன்படுத்தும் கோரிக்கைக்கு தேர்தல்கள் ஆணைக்குழு இதுவரை ஒப்புதல் வழங்கவில்லை. இந்த நிலையிலேயே அந்தச் சின்னத்துக்கு தேசப்பற்றுள்ள ஐக்கிய தேசியக் கட்சி உரிமை கோரியுள்ளது.

இந்தச் சர்ச்சைகளை அடுத்து யானைச் சின்னத்திலோ அல்லது அன்னம் சின்னத்திலோ போட்டியிடும் முடிவை சஜித் அணியினர் எடுக்கலாம் என்று கூறப்படுகின்றது. (எ)

## உலகத்...

எதிர்வரும் எதிர்வரும் 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை மற்றும் மறுநாள் 22ஆம் திகதி சனிக்கிழமை மற்றும் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடை பெறவுள்ளது.

இந்த மாநாட்டுக்காகத் திருக்குறள் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகளை அனுப்ப முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை கட்டுரைகளை அனுப்பாத இலங்கை வாழ், பல்கலைக் கழக, கல்லூரிப் பேராசிரியர்களும், ஆய்வு மாணவர்களும், தமிழறிஞர்களும் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆய்வுக் கட்டுரைகளை மாநாட்டில் வெள்ளி மற்றும் சனி ஆகிய நாள்களில் அமர்வில் உரிய நேரம் இருந்தால் வாசிக்க முடியும். அல்லது கட்டுரைப் பிரதி ஒன்றை வழங்க முடியும்.

இது தொடர்பான மேலதிக விவரங்களை 0778572972 என்ற தொலைபேசி இலக்கம் ஊடாகவோ, thamilthaitrust@gmail.com என்ற மின்னஞ்சல் ஊடாகவே பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, இந்த மாநாட்டில் பார்வையாளர்களாகக் கலந்து கொள்வோருக்கு கட்டணம் எதுவும் அறவிடப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## புதிய...

பாரியார் மற்றும் புதல்வனுடன் வந்த புதிய அரச அதிபரை யாழ்ப்பாணம் மேலதிக அரச அதிபர் ம.பிரதீபன் தலைமையில் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் இணைந்து வரவேற்றனர். மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் நீக்கிலஸ்பிள்ளை மற்றும் மேலதிக அரச அதிபர் இணைந்து மலர்க் கொத்து கொடுத்து வரவேற்றனர்.

புதிய அரச அதிபர் அலுவலகத்தில் கடமைகளைப் பொறுப்பேற்றுப் பதிவேட்டில் கையொப்பமிட்டுத் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார். அதன்பின்னர் மத தலைவர்களின் ஆசியுரைகள் இடம்பெற்றன. புதிய அரச அதிபரின் உரையும் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டிருந்தனர். (எ-106)

## சிவராத்திரிக்கு..

சம் பக்தர்கள் எதிர்பார்க்கப்படுகின்றனர் என்று ஆலய திருப்பணிச் சபையின் இணைச் செயலாளர் எஸ்.இராமகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

சிவராத்திரி தின ஏற்பாடுகள் தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

வரலாற்றுச் சிறப்புமிக்க, பாடல் பெற்ற திருத்தலமான திருக்கேதீச்சரத்தின் மகா சிவராத்திரி விழாவானது வழமையை விட இந்த முறை மிகவும் சிறப்பாக நடத்துவதற்கு மன்னார் சிவபூமி சைவ மக்களும் திருக்கேதீச்சர திருப் பணிச் சபை மற்றும் சைவ அமைப்புகள் தீர்மானித்துள்ளன.

திருவிழாவுக்கான பூர்வாங்க ஏற்பாடுகள் அனைத்தும் மிகவும் வேகமாக நடைபெற்று வருகிறன. இம்முறை ஆறு லட்சத்துக்கும் அதிகமான பக்தர்கள் சிவராத்திரிக்கு வருகை தருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வாகனத் தரிப்பிடங்கள், கடைகள் போன்றவைக்கான இடங்களில் துப்புரவுப் பணிகள் நடைபெற்றுவருகின்றன. இரவு முழுவதும் கலை நிகழ்வுகள் நடத்துவதற்காக 200அடி நீளம் 50 அடி அகலம் கொண்ட இராட்சத பந்தல் அமைக்கும் பணி நடைபெறுகிறது.

திருவிழாக் கடைகளை அமைக்க ஆலயத்துக்கு அருகில் உள்ள மைதானத்தில் இடம் வழங்கப்பட மாட்டாது. கடைகளுக்கு அம்பாள் வீதியில் இருந்து மயானம் செல்லும் வீதியிலேயே இடம் வழங்கப்படவுள்ளது. சிவராத்திரி மடம், அன்னபூரணி மடம், நடராஜர் மடம், திருவாசக மடம் போன்றவற்றினூடாக அன்னதானங்கள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் சேவைகள் மற்றும் பாடசாலை மாணவர்களின் சாரணர்களின் சேவைகளும் இடம்பெறும். அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஒழுங்கமைப்பு வேலைகளும் மிகவேகமாக நடைபெற்று வருகின்றன. சிவராத்திரி தினத்தன்று அடியவர்கள் ஆலயச் சூழலில் அமைதியையும் சுத்தத்தையும் பேணவேண்டும்-என்றார். (ஜ-213)

## தீ...

தையா இராஜேஸ்வரி என்பவரே உயிரிழந்துள்ளார்.

மூதாட்டி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். மூதாட்டியின் உடல் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டது. இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் மேற்கொண்டார்.

இந்தச் சம்பவம் நேற்று நடந்துள்ளது. திருமணமாகாது தனித்து வாழ்ந்த இந்த மூதாட்டி கோயில் வழிபாடுகளில் தீவிர பற்றுடையவர் என்றும், அண்மைக்காலமாக வயது மூப்பின் காரணமாக கோயில்களுக்குச் செல்லமுடியாது மன உளைச்சலில் இருந்தார் என்றும் விசாரணைகளின்போது உறவினர்கள் தெரிவித்துள்ளனர். (எ-26)

## தேவை

மில் வேலையில் அனுபவமுள்ளவர், பயிலுனர், பொதியிடல், உதவியாளர் என்பவற்றிற்கு பெண் வேலையாட்கள் தேவை.
**தொடர்பு: 077 174 6101**
(பிருந்தாமில் 179, சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம்)

## சேவிஸ் நிலையம் வாடகைக்கு விடப்படும்

புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான சேவிஸ் நிலையம் வாடகைக்கு விடப்படவுள்ளது. இதனை வாடகைக்கு எடுக்க விரும்புபவர்கள் தலைமை அலுவலகத்தில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை நேரிலோ, பதிவுத் தபாலிலோ கீழ்க்காணும் முகவரிக்கு 28.02.2020 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

**குறிப்பு:- மேலதிக தகவல்களுக்காக அலுவலகத்துக்கு தொடர்பு கொள்ளவும். 021 226 3275**

**தலைவர்,**
**புலோலி பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம்,**
**புலோலி கிழக்கு, பருத்தித்துறை.**
(IN/12599)911,17)

## தேவை

### 01) விற்பனை உதவியாளர்

நல்லூர் குறுக்கு வீதியில் அமைந்துள்ள **R.V.G** கம்பனிக்கு விற்பனை உதவியாளர் தேவை. வயதெல்லை 21 - 35 இற்கு இடைப்பட்ட ஆண்களாகவும், க.பொ.த.உயர்தரத்தில் சித்தி அடைந்தவராகவும் இருத்தல் வேண்டும்.

### 02)சமையல் உதவியாளர் (ஆண்)

யாழ்ப்பாணத்தில் உள்ள **ASR Hotel** இற்கு சமையல் உதவியாளர் தேவை. சமையல் துறையில் அனுபவமுள்ளவர் விரும்பத்தக்கது.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:-
**R.V.G. கம்பனி,**
**இல.58,நல்லூர் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.**

## நல்லூர் பிரதேச சபை
## பகிரங்க ஏல விற்பனை

நல்லூர் பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் பாவித்த தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள், கூரைத்தகடுகள், இலத்திரனியல் பொருள்கள், பழைய பனைமரங்கள், இரும்புகள், பாவித்த ரயர்கள் போன்ற பொருள்கள் பகிரங்க ஏலத்தில் விடப்படவுள்ளன. எனவே ஏலத்தில் கலந்துகொண்டு சித்தி பெறும் ஏலதாரர்கள் அப்பொருள்களுக்கான பணத்தினை உடன் செலுத்தி அவ்விடத்தினைவிட்டுப் பொருள்களை அப்புறப்படுத்த வேண்டும்.

**இடம் :- தலைமை அலுவலகம்,**
**14/5, கருவப்புலம் வீதி,**
**கொக்குவில்.**
**காலம்:- 25-02-2020 (செவ்வாய்) காலை 09.30 மணி**

ஆர்வமுள்ளோர் ஏலப்பொருள்களை அலுவலக நாள்களில் 24.02.2020 வரை மு.ப9.00-பி.ப3.00 மணிவரை பார்வையிடலாம் என்பதுடன் விண்ணப்ப படிவம் ரூபா 100.00, மீளப் பெறக்கூடிய பாதுகாப்பு வைப்புபணம் ரூபா 1000.00 செலுத்தி ஏலத்தில் கலந்து கொள்ளலாம். பாதுகாப்பு வைப்புபணத்தை 14 நாள்களுள் கோரிக்கையை சமர்ப்பித்து மீளப்பெறப்படல் வேண்டும். தவறுமிடத்து சபை வருமானமாக மாற்றப் படும்.

**தா.தியாகமூர்த்தி**
**தவிசாளர்,**
**நல்லூர் பிரதேச சபை.**
**கொக்குவில்**
(IN/12600)(11,17)

## மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் சுந்தரமூர்த்தி
### (குஞ்சுராசா)




கச்சாய் வடக்கு கொடிகாமத்தை பிறப்பிடமாகவும் மாசார் பளையை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சுந்தரமூர்த்தி கடந்த (16.02.2020) ஞாயிற்றுக் கிழமை இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.02.2020) செவ்வாய்க் கிழமை மு.ப 09.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முடங்கன் தீவு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இ[illegible] ந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

# கசிப்புடன் ஒருவர் கைது

அச்சுவேலி ,பெப்.18

அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நவக்கிரிப் பகுதியில் 3 லீற்றர் கசிப்பை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவரைக் காங்கேசன்துறை விசேட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர். தமக்கு கிடைத்த தகவலையடுத்து ஒருவரைத் தாம் கைது செய்துள்ளதாகவும் அவரை மேலதிக விசாரணைக்காக அச்சுவேலிப் பொலிஸிடம் பாரிப்படுத்தியுள்ளதாகவும் இன்று மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் அவரை முன்னிலைப்படுத்த உள்ளதாகவும் பொலிசார் தெரிவித்தனர். (ந-26)

# கண்ணி வெடி மீட்பு

வேலணை ,பெப்.18

பற்றைக் காணி ஒன்றைத்துப்பரவு செய்யும் போது நிலக்கண்ணி வெடி ஒன்று மீட்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் வேலணை சரவணைப் பகுதியில் நேற்று இடம்பெற்றுள்ளது. சரவணை மேற்கு ஜே/21கிராம சேவையாளர் பிரிவில் வேலி அமைப்பதற்காக துப்பரவு செய்யப்பட்ட காணி ஒன்றிலேயே இந்த நிலக்கண்ணிவெடி இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. ஊர்காவற்றுறை பொலிஸார் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பித்ததையடுத்து குறித்த கண்ணிவெடியை அகற்ற விசேட அதிரடிப்படையினருக்கு நீதிவான் உத்தரவு பிறப்பித்தார். இதனையடுத்து அந்தக் கண்ணிவெடி செயலிழக்கச் செய்யப்பட்டது. (ந-26)

# 8ஆவது நாடாளுமன்றின் கடைசிக் கூட்டத்தொடர்!

கொழும்பு, பெப்.18

எட்டாவது நாடாளுமன்றத்தின் கடைசிக் கூட்டத்தொடர் இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி 20ஆம் திகதி வரை நடைபெறும். மார்ச் 2 ஆம் திகதி நள்ளிரவு நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத்தேர்தலுக்கான அழைப்பு விடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டத்தின்படி நான்கரை வருடங்கள் முடிந்த பின்னரே நாடாளுமன்றத்தை கலைக்கும் அதிகாரம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்குக் கிடைக்கின்றது. அதற்கு முன்னர் நாடாளுமன்றத்தைக் கலைக்க வேண்டுமெனில் நாடாளுமன்றத்தின் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும்.

அதற்குரிய நடவடிக்கையை கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசு ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்த பின்னர் முன்னெடுத்தாலும் அதற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மறுப்புத் தெரிவித்துவிட்டார். எட்டாவது நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வு நடைபெற்று எதிர்வரும் முதலாம் திகதியுடன் நான்கரை வருடங்கள் நிறைவடைகின்றன. அதன்பின்னர் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்குக் கிடைக்கும். அன்று நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கான சிறப்பு வர்த்தமானி அறிவித்தலை விடுத்து - பொதுத்தேர்தலுக்கான அறிவிப்பை ஜனாதிபதி விடுப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அரசமைப்பின் பிரகாரம் கிடைக்கும் முதல் வாய்ப்பிலேயே நாடாளுமன்றம் கலைக்கப்படும் என ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அறிவித்திருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

ஏழாவது நாடாளுமன்றம் 2015ஆம் ஆண்டு ஜுன் மாதம் 26 ஆம் திகதி கலைக்கப்பட்டது. 2015ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி பொதுத்தேர்தல் நடத்தப்பட்டது. எட்டாவது நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர் 2015 செப்ரெம்பர் முதலாம் திகதி நடைபெற்றது. மார்ச் 2 ஆம் திகதி நாடாளுமன்றம் கலைக்கப்படாவிட்டால், கலைக்கப்படும் வரையில் வழமை போல் சபை நடவடிக்கைகள் இடம்பெறும். (எ-22)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் உடுத்துறை, மருதங்கேணி வத்திராயன் கிராம அலுவலகத்துக்கு அருகில் 10 ஏக்கர் காணி விற்பனைக்குண்டு.
**075 593 5814**

## மணிவிழா வாழ்த்துக்கள்

**யா/ அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலய ஆசிரியர்**
**திருமதி**
**செல்வராணி பரமேஸ்வரன்**
**(SLTS - 1)**



**சேவை விவரம்**
1990 - 1997 - கிளி/ இயக்கச்சி அ.த.க.பா
1997 - 2003 - கிளி/ வேம்பொடுகேணி சி.சி.த.க.பா
2003 - 2015 - யா/சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி
2015 - 2020 - யா/ அல்லாரை அ.த.வி

18.02.2020 இல் அறுபதை அடைந்து மணிவிழாக் காணும் நாயகியை மனதார வாழ்த்திடுவோம்.
வாழிய நீவிர் வாழியவே!
**பாடசாலை சமூகம்,**
**யா/ அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலயம்.**

## மூன்றாம் ஆண்டு நினைவு தினம்

**அமரர் கந்தையா திருநாவுக்காசு**

உரிமையாளர் - உழவு இயந்திரம் (36சிறி 6354)
திதி :- தசமி தேய்பிறை 18.02.2020 செவ்வாய்க்கிழமை

நீங்கள் இவ்வுலகை விட்டுப் பிரிந்தாலும்
எங்கள் மனதை விட்டுப்பிரியவில்லை
உங்கள் நினைவுடனே எங்கள் கடமைகள்
தங்கள் வழிநடத்தலின்படி செய்கின்றோம்

தோற்றம் 04.03.1934



மறைவு 21.02.2017

சப்பச்சிமாவடி, சங்கத்தானை. மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## ஈர விழிகளுடன் கழிந்த ஈராறு மாதங்கள் நினைவாக

மண் மகிழ 28 . 12 . 1946



கண் நெகிழ 01 . 03 . 2019

## அமரர் கணபதிப்பிள்ளை மாணிக்கம்

(A.V.K மாணிக்கம் – சமாதான நீதவான்)

திதி: அபரபக்கதசமி 18.02.2020 செவ்வாய்க்கிழமை

கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகி போனாலும்
எம் முன்னே நீங்கள் எந்நாளும் உயிர் வாழ்கின்றீர்கள்
இனிய நினைவுகளும் உளம் இழந்த வலியும் வேதனையும்
இறுதி மூச்சு வரை எம்முள் சுமப்போம்.


உம் மறைவால் உயிரிழந்த உள்ளங்களில்
உமை நிறுத்தி இருகரம் கூப்பி
ஆண்டவன் அடி பணிந்து வேண்டுகின்றோம்
அடைய வேண்டும் உம் ஆத்மா சாந்தி

நிழலாடும் நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்

விளையாட்டரங்க வீதி,
கோப்பாய் தெற்கு, கட்டப்பிராய்.

" சுனேதாலயம்
வல்லை வீதி, அச்சுவேலி

## கண்ணீர் அஞ்சலி



எமது ஊழியரான


## நல்லதம்பி நிஷாந்தன்

17.02.2020 நேற்று இறைவனடி சேர்ந்துவிட்டார்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

**லிங்கன் கிறீம் கவுஸ்**
**உரிமையாளர், ஊழியர்கள்**

## மரண அறிவித்தல்

தோற்றம் 24 . 07 . 1948



மறைவு 14 . 02 . 2020

### வல்லிபுரம் நாகரத்தினம்

அல்வாய் மேற்கு அல்வாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் நாகரத்தினம் அவர்கள் கடந்த **(14.02.2020)** வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் திலதம்மா தம்பதிகளின் அன்பு மகனும். இராதாகிருஸ்ணகுமாரி (பிரான்ஸ்) அவர்களின் அன்புக் கணவரும். தாரணி (கனடா). தினேஸ் (உதவி முகாமையாளர் இலங்கை வங்கி.கிளிநொச்சி). வெங்கடேஸ்வரா (கல்வி அமைச்சு வடமாகாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும். அகிலன். வாசுகி ஆகியோரின் அன்பு மாமனாரும். சிதம்பரம். நவரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும். அஸ்வின். ரசிதன். அனுஸ்கா. ஆதிரை. அப்ஷரா ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று **(18.02.2020)** செவ்வாய்க்கிழமை முற்பகல் **10.30** மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திக்கம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர்கள். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :- குடும்பத்தினர்
தொடர்புகளுக்கு:-0778457198/ 0775387640

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com,
021 493 1111

## மரண அறிவித்தல்

### கோயிலான் அம்மா (நாகம்மா்)



பிறப்பு 10.01.1941 இறப்பு 17.02.2020

வரணி வடக்கு வரணியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கோயிலான் அம்மா (நாகம்மா) நேற்று (17.02.2020) திங்கட்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரன் - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற கோயிலானின் பாசமிகு மனைவியும் பத்மாவதி (பவா) இரஞ்சிதமலர் (வேவி). தவராசா (துவம்). சிறிகலா (கலா). ரேவதிராசா (காந்தன்). சாந்தினிதேவி (சாந்தி). ஜெயந்தினிதேவி (செல்லா) சற்குணதேவி (சித்திரா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (18.02.2020) செவ்வாய்க்கிழமை காலை நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 11.00 மணியளவில் முள்ளி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வரணி வடக்கு, வரணி

தகவல்: குடும்பத்தினர்
077 578 5728, 076 606 8705

## மரண அறிவித்தல்

### திருமதி முத்துலிங்கம் கமலாதேவி

(கிளி/ இராமநாதபுரம் மேற்கு அ.த. க பாடசாலை- ஓய்வுபெற்ற பிரதி அதிபர்)



கோப்பாய் தெற்கு, இருபாலையை பிறப்பிடமாகவும். இல.**359**, **6**ஆம் யூனிற் இராமநாதபுரம். கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முத்துலிங்கம் கமலாதேவி நேற்று **(17.02.2020)** திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ராசையா - நல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான் சிவப்பிரகாசம் - செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற முத்துலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சரோஜினிதேவி. சற்குணதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் கந்தசாமி. கிருஸ்ணாதேவி ஆகியோரின் மைத்துனியும் துஷாயினி. சுதாகரன் ஆகியோரின் சிறியதாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை **(19.02.2020)** புதன்கிழமை காலை **9.00** மணியளவில் நடைபெற்று பூதவுடல் மம்மில் இந்துமயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.359,6ஆம் யூனிற்,
இராமநாதபுரம், கிளிநொச்சி.

தகவல்:-
குடும்பத்தினர்.

தொடர்பு:- 0777 439 169, 0777 514 327

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



அமரர் செல்வி **குகநேசமலர் பொன்னுத்துரை**
(மலர் ரீச்சர்)

அன்னை மடியில் 30.12.1943
ஆண்டவன் அடியில் 20.01.2020

கடந்த 20.01.2020 அன்று சிவபதமடைந்த எங்கள் சகோதரியின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (19.02.2020) புதன்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்விலும் இதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு இந்த நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

(CS/31331)(11,17)

வேம்பன் வீதி,
உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.

சகோதரர்கள்.

## மரண அறிவித்தல்

பிறப்பு 11 . 08 . 1934



இறப்பு 15 . 02 . 2020

### வீரவாகு மயில்வாகனம்

(ஓய்வுபெற்ற மின்சாரசபை ஊழியர் SBO)

யாழ்ப்பாணம் புங்கங்குளம் வீதியை பிறப்பிடமாகவும், கச்சேரி ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட வீரவாகு மயில்வாகனம் கடந்த 15.02.2020 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரவாகு - விசாலாட்சி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராசையா - சிவகாமி (பாக்கியம்) தம்பதிகளின் மருமகனும், அன்னரெட்னத்தின் அன்புக் கணவரும், பிரபாகரன் (ஜேர்மனி), கீதா (நோர்வே), சகீலா (நோர்வே), யதுஷா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், லோகேஸ்வரி (ஜேர்மனி), சுரேஷ் (நோர்வே), ரமேஷ் (நோர்வே), விஜயகுமார் ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான இரத்தினசபாபதி (நடராசா), சரஸ்வதி, பாக்கியம், மகாலிங்கம் மற்றும் ஐயாத்துரை (கருணானந்தன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற தர்மராசா மற்றும் செல்வராசா, தவராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இ.தவராசா**
**25, கச்சேரி ஒழுங்கை,**
**யாழ்ப்பாணம்.**

(CS/31330)(11,17)

**தகவல்:-**
**குடும்பத்தினர்.**


**021 222 5775**

ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமஹ

## மரண அறிவித்தல்

# நடராசா தவேந்திரம்

### உத்தரவு பெற்ற கட்டட படவரைஞர், சோதிடர்



தோற்றம் 16.06.1954
மறைவு 17.02.2020

யாழ்ப்பாணம் தட்டாதெருவை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா தவேந்திரம் நேற்று (17.02.2020) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா (சாஸ்திரி) பரமேஸ்வரி தம்பதிகளின் மகனும் காலஞ்சென்றவர்களான துரைராசா - செல்வரட்ணம் தம்பதிகளின் மருமகனும் பவானியின் கணவரும் கஜரீதன், ஜீவதாரணி ஆகியோரின் தந்தையும் காலஞ்சென்றவர்களான சாந்தகுமாரி, ஸ்ரீதேவி மற்றும் வசந்தகுமாரி கமலகுமாரி, ராஜவனி, சுபாசினி ஆகியோரின் சகோதரனும் ஸ்ரீரங்கனாத், ஸ்ரீரவீந்திரன், புஸ்பராணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.02.2020) செவ்வாய்க்கிழமை பி.ப 1.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்

பழனித்துரை தர்மகுமாரன்
ஆசிரியர், உடுவில் மகளிர் கல்லூரி



# பொசுங்கிப்போன பொதுநலம்

எமது அன்றாட தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் வகையில் நாம் பல்வேறு தேவைகளை சூழலில் பெற்றுக் கொள்கிறோம். தேவைகளை சேவைகளாகப் பெற்றுக்கொள்ளும் நாம் அதனைப் பாதுகாக்கத் தவறுகின்றோம். எதிர்கால சந்ததியினரும் பயன்படுத்த வேண்டும் என்று அக்கறைப்படாது; தமது தேவை நிறை வடைந்தால் போதும் என்ற மனநிலைக்குச் செல்கின்றோம்.

**கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதை**

பொது நோக்குச் சிந்தனையில் உயர்ந்த இடத்தையும், உன்னத கொள்கையையும் கொண்ட இனம், இன்று கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதை போல தேய்ந்து விட்டது. இதனால் சமூக அமைப்பு பல்வேறுபட்ட பாதிப்புக்கு உள்ளாவதுடன், எமது பௌதீக வளங்களும், பௌதீக சூழலும் சின்னாபின்னமாக்கப்பட்டுள்ளன. ஒரு நாட்டின் வளங்களுள் மிகவும் பெறுமதி வாய்ந்த வளம் மனித வளமாகும். மனித இருப்பின் அத்திபாரமும் கூட. அதாவது நாகரிகமடைந்த அபிவிருத்தியை நோக்கி பயணிக்கின்ற இனம் மனித வளத்தை முழுமையாகப் பயன்படுத்த தவறுவதில்லை. அதற்கு ஏற்ற வகையில், பொது நிலையாளர்கள்உருவெடுத்துசமூகமுன்னேற்றத்தின் சக்தியாக விளங்குவார்கள். இதற்குக் கல்வி அறிவு என்பது இன்றியமையாததொன்றாகும். கல்வி கற்ற சமூக அமைப்பு என்பது ஒரு காலத்தில் உயர்ந்த நிலையிலும், மதிக்கத்தக்க வகையிலும், மற்றவர்களுக்கு அறிவுசார் கருத்துக்களையும், அறிவுரைகளையும் வழங்குபவர்களாகவும், பொது நிலையாளராகவும் பொதுச் சேவைகளை வழங்கிப் பொதுச் சொத்துக்களைப் பாதுகாப்பவர்களாகவும், கடமை வீரர்களாகவும் இருந்து சமூகத்தைப் பாதுகாப்பர்.

**பெறுமதியை உணராத சமுதாயம்**

இன்றைய காலகட்டத்தில் பொதுச்சேவையின் முக்கியத்துவம் தன்னிலை இழந்து தள்ளாடுகின்றது. அதனது உயர்ந்த சேவையை மதிக்கத் தவறுகின்றோம். இதனது தாற்பரியம் என்னவென்று தெரியாது வாழ்ந்து வருகின்றது ஒரு சமூகம்.

பொது நிலையாளரின் சேவை என்பது மக்களின் நாளாந்த வாழ்க்கை நடவடிக்கைகளை இலகுபடுத்தல், வாழ்க்கைத் தரத்தை முன்னேறுதல், பிரதேசங்களிடையே உறவு நிலையையும், தொடர்பாடலையும் மேற்கொள்ளல், மனித உரிமைகளைப் பாதுகாத்தல், சமூக நீதியை நிலைநாட்டல், பௌதீக வளங்களைப் பாதுகாத்தல், பொதுச்சொத்துக்களைப் பராமரித்தல், பாதுகாத்தல் போன்ற பல்வேறுபட்ட விடயங்களைச் செயற்படுத்தி வந்தனர். ஆனால் தொழில் நுட்ப சாதனங்களின் வளர்ச்சியாலும், பொருளாதார நெருக்கடி மற்றும் நாகரிக மோகத்தாலும் போட்டிபோட்டு வாழும் நிலையில் மனிதன் தனிமைப்படுத்தப்பட்டு, சுயநலமாக தான் வாழ்ந்தால் போதும், மற்றவர்கள் பற்றி எந்தவித சிந்தனையும் அற்றவனாக வாழத் துணிகிறான். இது சமூக வளர்ச்சியையோ, இன மேலாதிக்கத்தையோ ஏற்படுத்தாது. மிக முக்கியமாக இன்றைய காலகட்டத்தில் பௌதீக சூழலையும், பொதுச்சொத்துக்களையும் பாதுகாப்பாகவும் அழகாகவும் சுத்தமாகவும் எல்லோரும் பயன்பெறக்கூடிய வகையிலும் வைத்திருக்க வேண்டும்.

**செயற்கைக்குள் சிக்குண்ட மனிதன்**


மனிதன் சுற்றாடலின் ஓர் உறுப்பினராவான். மனிதன் சுற்றாடலைப் பாதுகாக்கும்போது சுற்றாடல் மனிதனைப் பாதுகாக்கும். சுற்றாடலின் இயல்பான தன்மையை உறுதிசெய்வதன் மூலம், மாசற்ற சூழலில் வாழ்வதற்கான உரிமையை மனிதன் பெற்றுக்கொள்கிறான். வடமாகாண சூழலைப் பாதுகாப்பதில் சமுதாயம் பின்னோக்கியே உள்ளது. இதற்கு பொது நிலையாளர்களின் சிந்தனைச் செயல் அற்றுப்போனமை, கழிவுமுகாமைத்துவம் கடைப்பிடிக்காமை, மீள் சுழற்சி பயன்பாடு அற்றுப்போனமை, செயற்கைக்குள் சிக்கியுள்ளமை உள்ளிட்ட காரணங்களாகும். உலக நாடுகள் செயற்கைக்கு முக்கியத்துவம் கொடுத்தாலும், இயற்கையைப் பாதுகாத்து வருகின்றன. இதனால் சூழல் பாதுகாக்கப்பட்டு நாடுகள் தன்னிறைவாக உள்ளன. இலங்கையைப் பொறுத்த வரையில், இயல்பாகவே இயற்கையைக் கொண்டமைந்த நாடாக உள்ளதால்செயற்கைக்காக இயற்கையை அழிப்பதனால், புவி சமநிலை இழந்து காலநிலைகளில் கூட மாற்றம் ஏற்பட்டுள்ளது.

> “தொழில் நுட்ப சாதனங்களின் வளர்ச்சியாலும், பொருளாதார நெருக்கடி மற்றும் நாகரீக மோகத்திலும் போட்டிபோட்டு வாழும் நிலையில் மனிதன் தனிமைப்படுத்தப்பட்டு, சுயநலமாக தான் வாழ்ந்தால் போதும், மற்றவர்கள் பற்றி எந்தவித சிந்தனையும் அற்றவனாக வாழத் துணிகிறான். இது சமூக வர்ச்சியோ,இன மேலாதிக்கத்தையோ ஏற்படுத்தாது. மிக முக்கியமாக இன்றைய காலகட்டத்தில் பௌதீக சூழலையும், பொதுச்சொத்துக்களையும் பாதுகாப்பாகவும் அழகாகவும் சுத்தமாகவும் எல்லோரும் பயன் பெறக்கூடிய வகையிலும் வைத்திருக்க வேண்டும்.”

**ஆரோக்கியம் வேண்டுமா?**

இதனைச் சாதாரண விடயமாக எடுத்துக் கொள்ளக் கூடாது. அடுத்த தலைமுறையினரும் மகிழ்ச்சிகரமாக ஆரோக்கியமாக வாழவேண்டுமென்றால் சூழலைப் பாதுகாக்கவேண்டும். பாடசாலை மாணவர்களைக் கொண்டு சமூகத்தை விழிப்படைய வைக்கவேண்டும். இதற்காக பாடசாலைகளில் சூழலியல் கழகம் ஒன்றை உருவாக்கி சூழலியல் பற்றிய கருத்துக்களைத் தெளிவுபடுத்தி சமூக மக்களுக்குக் கொண்டு செல்ல வேண்டும். இந்த நடைமுறை [illegible]லங்கைப் பாடசாலைகளில் நடைமுறையில் உள்ளது. சிறப்பாகச் செயற்படும் பாடசாலைகளை வெளிநாடுகளுக்கும் அனுப்பி வருகின்றன. இந்த விடயத்தை வடமாகாணமும் செயற்படுத்த முனைய வேண்டும். இதன் மூலம் சூழலியல் பற்றிய போட்டித்தன்மை உருவாகி சூழலில் மாற்றங்கள் ஏற்படும். ஓர் இனம் ஆரோக்கியமாக, மீண்டு எழவேண்டுமானால் சுகாதாரம் முக்கியமானதாகும். இதில் மிகவும் முக்கியமானது சூழலியல் சுகாதாரம் இங்கு மனித நடவடிக்கையின் பேன்தகு தன்மையும், மேலாதிக்க சிந்தனையும் குறைந்து செல்கின்றது. இதனாலேயே வீதிகள் தோறும் கழிவுகள் தேங்கி தேடுவாரற்றுக்கிடக்கும் அளவுக்கு மக்கள் மத்தியில் பொதுநிலை தன்மை அற்றுப்போகின்றது. இங்கு கல்வி கற்றவர்கள், கற்காதவர்கள் என்ற வேறுபாடின்றி திண்மக் கழிவுகளைப் பொதி செய்து வாகனங்களில் செல்லும்போது வீசிவிட்டுச் செல்கிறார்கள். இதுமட்டுமன்றி மக்கள் பரந்து வாழும் குடிமனைகளின் வீதிகளிலும் கோழிக் கழிவும், பிள்ளைகளின் பம்பஸ், பொலித்தீன், பிளாஸ்ரிக் பொருள்கள் வீசப்பட்டுள்ளன. இவற்றை நாய்கள் வீதி முழுக்கச் சிதறிவிடுகின்றன. போக்குவரத்துக்குப் பயன்படுத்த வேண்டிய வீதிகள் நாய்களின் போர்க்களமாக உருவெடுத்து, பாதசாரிகள் பயணிப்பதில் நெருக்கீடுகளை ஏற்படுத்துகின்றன.

இதன்மூலம் தொற்று நோய்கள் ஏற்படும் அபாயம் ஏற்படுவதுடன், பாதசாரிகள் உளநெருக்கீட்டுக்கு உள்ளாகின்றனர். அன்றாட கருமங்களை ஆற்றுவதற்கு அசுத்தத்தை அருவருப்புடன் கடந்து செல்லும் நிலை உருவாகியுள்ளது. இதற்கு உள்ளூராட்சி சபைகள் திட்டமிடலை மேற்கொள்வதுடன், பொலிஸாரும் அதிரடி நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.



உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## சட்டம் போட்டால் மட்டும் போதுமா?

போக்குவரத்துவிதிகளை மீறுவோர் மீது பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்குமாறு வடக்கு ஆளுநர் திருமதி பி.எஸ்.எம் சார்ள்ஸ் கண்டிப்பான உத்தரவொன்றைப் பிறப்பித்துள்ளார். உண்மையில் இந்த உத்தரவு வரவேற்கப்படவேண்டியதே. ஏனெனில் போக்குவரத்துவிதிகள் சரிவரப் பேணப்பட்டால், இலங்கையில் நடக்கும் விபத்துக்களின் எண்ணிக்கை சரிபாதியாகக் குறைந்துவிடும் என்பதே யதார்த்தம்.

முன்னரெல்லாம் வீட்டுக்கு ஒரு மோட்டார் சைக்கிள் இருப்பதே அரிதாக இருந்தது. பெரும்பாலும் ஊரில் ஒரு சிலர் தான் மோட்டார் சைக்கிள் வைத்திருப்பார்கள்.அதனால் அநேகரின் 'தேசிய' வாகனம் சைக்கிள் தான். அதைப் போன்றே ஊருக்கு ஒரு சிலரே கார், பஸ் போன்றவற்றின் உரிமையாளர்களாக இருந்தனர். இதனால் வீதி விபத்துக்கள் எப்போதாவது நிகழும் அபூர்வ நிகழ்வாகவே இருந்தது. ஆனால் இப்போதோ, பாடசாலைக்குக்கூட மோட்டார் சைக்கிளில் மாணவர் வந்துபோகுமளவுக்கு, இயந்திர வாகனங்களின் பயன்பாடு அதிகரித்துவிட்டது. வீட்டுக்கு வீடு மோட்டார் சைக்கிள் என்ற நிலை கூட மாற்றமடைந்து, வீட்டுக்கு வீடு கார் என்றளவுக்கு முன்னேறிவிட்டோம். இதைப் பொருளாதார வளர்ச்சி என்பதை விடவும், இயந்திரத்தனமாக நம் வாழ்வியல் மாறியதன் குறியீடாகக் கொள்வதே பொருத்தமானது. ஏனெனில் வீட்டில் கஞ்சிக்கு கூட வழியில்லாவிட்டாலும் பிள்ளைகள், 'கேரிஎம்', 'பேஸர்', 'என். எஸ் 200' , 'வி3' என்று பல லட்சங்கள் பெறுமதியான மோட்டார் சைக்கிள்களில் பவனி வருகிறார்கள். அதுவும் சும்மா வருவதில்லை. வாயு வேகம், மனோ வேகத்தில் , காற்றைக் கிழித்துக்கொண்டு, வெட்டி வெட்டி ஓடிக் கொண்டு , நடுவீதியில் வித்தை காட்டியபடி தான் இவர்களின் சாதாரண பயணம் இருக்கும். இப்படி அதிவேகமும், விதிகளை மதிக்காத போக்கும் கடைசியில் விபத்திலேயே முடிவதுண்டு.

அதைவிட, வடக்கின் இன்னொரு போக்குவரத்து அடையாளமான 'மினிபஸ்களை' பற்றிச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. எங்கெல்லாம் இடைவெளியுண்டோ அங்கெல்லாம் ஆட்களை அடைந்து கொண்டு, கர்ப்பிணிப் பெண் போல அசைந்தாடும் மினிபஸ்கள் , இ.போ.ச பஸ்களைக் கண்டவுடன் ரோசம் வந்தது போல மின்னலாகப் பறக்கத் தொடங்கிவிடுவது வழமை. அப்படியான ஏட்டிக்குப் போட்டியான ஓட்டங்கள் விபத்துக்களுக்கு ஏதுவாகின்றன.

இவை மட்டுமென்றில்லை. பொதுவாகவே இலங்கை முழுதும் சேவையில் ஈடுபடும் முச்சக்கர வண்டிகள், மீட்டர் பொருத்தப்பட்ட பின்னரே சேவையில் ஈடுபடுத்தப்பட வேண்டும். ஆனால் வடக்கில் , எங்கேனும் ஒரு சில முச்சக்கரவண்டிகள்மட்டுமே மீட்டர்பூட்டிக்கொண்டு திரிகின்றன. ஏனையவற்றில் ஏறிப் பயணித்தால், ஓட்டுநரின் மனம் போன போக்கில் சொல்லும் தொகையைக் கொடுக்கவேண்டும் என்ற நிலையே தொடர்கின்றது. புகைப்பரிசோதனை செய்தபின்னே வாகன வரிப்பத்திரம் எடுக்க முடியும் என்ற நிலை இருந்தாலும் கூட, வடக்கில் ஓடித் திரியும் பெரிய வாகனங்கள் சாம்பிராணி போல புகை கக்காமல் ஓடுவதும் அரிது. டிப்பர் போன்ற கனரக வாகனங்களுக்கென வரையறை செய்யப்பட்ட உச்ச வேகத்தை தாண்டிப் பயணிப்பதும் சர்வசாதாரணம். இவையெல்லாம் ஒரு உதாரணத்துக்காகச் சொல்லப்படும் விதிமீறல்களே. இவற்றை விட ஏராளமான விதி மீறல்களை நிகழ்த்தியபடியே தான் எங்கள் பயணம் தொடர்கிறது.

வடக்கு மாகாண சபை இயங்கியபோது, ஏ9 வீதியில் கரையோரங்களில் வெள்ளைக் கோட்டினைத் தாண்டி வாகனங்கள் தரிக்கக்கூடாது என்னும் தீர்மானத்தை நிறைவேற்றியிருந்தது. வீதியோரமாக வெள்ளைக்கோட்டையும் தாண்டி போக்குவரத்துக்கு இடையூறாக நிற்கும் வாகனங்கள் விபத்துகள் அடிக்கடி நேர்ந்தமையாலேயே அப்படி ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது. ஆனால் ஒரு சில வாரங்களிலேயே மீண்டும் பழையபல்லவி. நடுவீதியை மறைத்தபடியும் நீண்டநேரம் வாகனங்கள் தரிக்கும் நிலை உருவானது. இப்படி ஆளுநர் போன்ற உயர் அதிகாரிகள் இடுகின்ற உத்தரவுகளை உதாசீனம் செய்வதே இதுவரை வடக்கின் சாரதிகளின் இலட்சியமாக இருந்துவந்தது. இந்த நிலையை மாற்ற, தான் இட்ட உத்தரவு சரிவர நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதி செய்ய வேண்டியதும் ஆளுநரின் கடமையாகும். அப்போது தான் போக்குவரத்து விதி மீறல்களால் ஏற்படும் விபத்துக்களை ஓரளவேனும் குறைக்க முடியும். என்றாலும் சட்டம் போட்டுத் தடுக்கிற கூட்டம் தடுத்தாலும், திட்டம் போட்டு மீறுகின்ற கூட்டம் தாமாக உணர்ந்து திருந்தினால் மாத்திரமே மாற்றத்தை உணர முடியும்.



# சவேந்திர மீதான தடை பொதுத்தேர்தல் பகடை

## ஹிருணிகா தெரிவிப்பு



**கொழும்பு, பெப். 18**

**இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவுக்கும், அவரது குடும்பத்தினருக்கும் அமெரிக்காவுக்குள் பிரவேசிக்க விதிக்கப்பட்டுள்ள தடையை ஆளும் தரப்பினர் பொதுத்தேர்தல் பிரசாரத்துக்கு பயன்படுத்திக் கொள்வார்கள் என்று ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்தார்.**

சிறந்த அரசாங்கத்தை உருவாக்க தனக்கு வாய்ப்பளிக்கவில்லை என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் ஒருபோதும் குறிப்பிடமுடியாது. நல்லாட்சியின் நோக்கத்தை இவரே இல்லாதொழித்தார் எனவும் அவர் குற்றஞ்சாட்டினார். எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக பொதுஜன பெரமுனவினர் ஜனாதிபதி தேர்தல் காலத்தில் குறிப்பிட்ட விடயங்கள் அனைத்தும் இன்று பொய்யாக்கப்பட்டுள்ளன. ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதலை முழுமையாக தங்களின் அரசியல் தேவைகளுக்காக பயன்படுத்திக் கொண்டார்கள். ஆட்சிக்கு வந்து ஒரு மாத காலத்தில் குண்டுத்தாக்குதலின் குற்றவாளிகளை கைது செய்வதாகவும் குறிப்பிட்டார்கள். ஆனால் மூன்று மாத காலத்தில் எவரும் கைது செய்யப்படவில்லை.

மத்திய வங்கியின் பிணைமுறிகொடுக்கல்வாங்கல்களையும் அரசியல் பிரசாரமாக்கினார்கள். தடயவியல் கணக்கறிக்கையில் கடந்த அரசாங்கத்தில் பங்குச்சந்தையில் அதிகளவில் மோசடி இடம்பெற்றுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளமையினால் இன்று பிணைமுறியை அரசியல் பிரசாரமாக்க ஆளும் தரப்பினர் விரும்பவில்லை.

இராணுவ தளபதி சவேந்திர சில்வா மற்றும் அவரது குடும்பத்தினர்கள் அமெரிக்காவுக்குச் செல்ல விதிக்கப்பட்டுள்ள தடையினை அரசாங்கம் இராஜதந்திர மட்டத்தில் மாத்திரம் திருத்திக் கொள்ள வேண்டும். பொதுத்தேர்தலில் இதனை ஆளும் தரப்பினர் முழுமையாக தங்களின் அரசியல் தேவைகளுக்காக பிரசாரமாக்கிக் கொள்வார்கள்.

சிறந்த அரசாங்கத்தை கட்டியெழுப்ப முடியாமைக்கு வாய்ப்பு வழங்கவில்லை என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிடுகின்றமையை ஏற்றுக் கொள்ள முடியாது. அவராலேயே நல்லாட்சி அரசாங்கம் பலவீனமடைந்தது. தேவையற்ற விடயங்களுக்காக அரசாங்கத்துடன் முரண்பட்டுக் கொண்டார். அதனை எதிர்த் தரப்பினர் முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டு ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டார்கள் - என்றார். (ம)

## பிடியுங்கள் சமரவீரவை!



நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீரவை கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றில் நேற்றுத் திங்கட்கிழமை முன்னிலையாகத் தவறிய நிலையில், கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் இந்த பிடியாணை உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

அரச வாகனங்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்தியமை மற்றும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவராக செயற்பட்ட காலத்தில் இடம்பெற்ற முறைகேடுகள் குறித்து அவருக்கு எதிராக குற்றச் சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பி... ...தக்கது. (ம)


## புதிய கட்சிகளுக்கான பதிவுக்காலம் நிறைவு

கொழும்பு, பெப். 18

புதிய அரசியல் கட்சிகளை பதிவு செய்வதற்கான விண்ணப்ப காலம் நேற்றுத் திங்கட்கிழமையுடன் நிறைவடைந்தது.

2020ஆம் ஆண்டுக்கான புதிய அரசியல் கட்சிகளை பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் அண்மையில் கோரப்பட்டிருந்தன.

1981ஆம் ஆண்டின் முதலாம் இலக்க நாடாளுமன்ற தேர்தல்கள் சட்டத்தின் கீழ், 2009ஆம் ஆண்டின் 58 இலக்க நாடாளுமன்ற தேர்தல்கள் திருத்தச் சட்டத்தின் அடிப்படையிலும் இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன.




இந்த நிலையில், புதிய அரசியல் கட்சிகளைப் பதிவு செய்வதற்காக இதுவரையில் 77க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன என தேர்தல்கள் ஆணைக்குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். இதற்கமைய ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெற்ற புதிய கட்சிகளைப் பதிவு செய்யும் விண்ணப்பங்கள் தொடர்பாக ஆராய்ந்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார். குறித்த ஓர் அரசியல் கட்சியானது 4 வருடங்கள் தமது அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்... ...தா என்பது குறித்தும் இதன்போது அவதானம் செலுத்தப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ம)

# பெண்களும் பொருளாதார அபிவிருத்தியும்



பி.துலக்ஷா
ஊடகக் கற்கைகள் துறை
யாழ். பல்கலைக்கழகம்.

கடந்த இரு தசாப்தங்களாக பெண்களை அபிவிருத்தி நிகழ்வுப்போக்கில் பங்காளிகளாக்குவதில் பெரும்பாலான மூன்றாம் உலக நாடுகளும் சர்வதேச நிறுவனங்களும் கவனம் செலுத்தி வந்துள்ளன. உலகின் பெரும்பாலான நாடுகள், அபிவிருத்தியில்பெண்களின்விசேடதேவையை மதிப்பீடு செய்யும் வழிமுறையை அபிவிருத்தி செய்யும் அவசியத்தை உணர்த்தி உள்ளன.



ஆணாதிக்கம் நிலவி வரும் ஒரு சமூக அமைப்பில் அபிவிருத்தி நடவடிக்கை தொடர்பாக பெண்கள் சமூகம் கணிசமான அளவிலான சுமைகளை ஏற்றுவருகின்றது.

சமூகத்தில் பெண்களுக்குரிய சரியான இடம் வழங்கப்பட வேண்டும் என உலகளாவிய ரீதியில் குரல்கள் எழுப்பப்பட்டு வந்தபோதிலும் இன்றும் அவர்கள் இரண்டாம் இடத்திலேயே இருந்து வருகின்றனர். எனினும் ஒரு நாட்டின் அபிவிருத்தி என்பது கணிசமான அளவு பெண்களின் அபிவிருத்தியை உள்ளடக்கியதாகவே அமைய வேண்டும்.

### அபிவிருத்தியின் அவசியம்

அபிவிருத்தி என்ற பதம் மனித நலனில் எல்லாக் கோணங்களையும் உள்ளடக்கியதாகும். பொருளாதார நலன் என்பது இதன் ஒரு கூறு மட்டுமேயாகும்.

முழுமையான அபிவிருத்தி என்பது சமூக, கலாசார மற்றும் பொருளியல் பரிமாணத்தை உள்ளடக்கிய ஒரு பன்முக வரன்முறையாகும். சிறந்த அபிவிருத்தி கோட்பாடு மக்களையும் சமூகத்தையும் முழுமையாக நோக்குவது. எனவே அபிவிருத்தி என்பது மக்கள், சமூகம், அவர்களின் வாழ்க்கைத்தரம், ஆற்றல்களை வளர்த்தல், மற்றும் தெரிவுகள் என்பனவாகும். தேசியமட்டத்தில் மகளிர் பங்களிப்பின்அளவினைப் பொறுத்தே ஒரு சமூகத்தின் நாகரிகத்தன்மை நிர்ணயிக்கப்படுகிறது என பொதுவாகக் கருதப்படுகின்றது. நவீன சமூகத்தின் நாகரிக தன்மை சிறப்பம்சம் அவற்றில் மகளிர் எல்லா முக்கிய துறைகளிலும் சேவையிலும் பங்கேற்பதாகும்.

நாடுகளின் அபிவிருத்தி பொருளியல் ஏறக்குறைய ஐந்து தசாப்தங்களாக அபிவிருத்தி அடைந்து வருவதைக் காணலாம்.

எனினும் அபிவிருத்திப் பொருளியலில் ஆரம்ப தசாப்தத்தில் (1960களில்) பெண்களின் பங்கு மதிப்பிடப்படவில்லை. 1970களிலும், 1980களிலும் மற்றும் அண்மை காலங்களிலும் அபிவிருத்தியில் பெண்களின் பங்கு வலியுறுத்தப்படுவதைக் காணலாம்.

### ஊழியச் சந்தையில் தொடரும் பாகுபாடு

மகளிரின் எழுத்தறிவு விகிதமும் கல்வி மட்டமும் உயர்வாக இருந்த போதிலும் ஊழியச்சந்தையில் இன்னமும் கூட பால் வேறுபாடுகள் நிலவி வருகின்றன. பெண்களுக்கு பொருத்தமானவை என கருதப்படும் தொழில்களிலேயே பெண்கள் செறிந்து காணப்படுகின்றனர்.

பெரும்பாலான மகளிர் பாடசாலைகளிலும், பல்கலைக்கழகத்திலும் கலைத்துறை சார்ந்த பாடநெறியை பயின்று வருகின்றனர். கிராம புறத்தில் வளர்ந்து வரும் பிள்ளைகள் உயர் கல்வியில் பங்கேற்பதற்கான வாய்ப்புகள் வரையறுக்கப்பட்ட அளவிலேயே உள்ளன.

பெண் பிள்ளைகள் நீண்ட காலத்துக்கு வீட்டை விட்டு வெளியே செல்வதனை சமூக, கலாசார விழுமியங்கள் தடுத்து இருக்கின்றமையால் பெண்கள் ஆண்களிலும் பார்க்க அதிகளவில் பாதிப்பினை அடையக் கூடியவர்களாக உள்ளனர்.

இன்று மாறி வரும் சூழ்நிலையில் பெண்களின் அபிலாஷைகள் மற்றும் ஆற்றல்கள் என்பவற்றுக்கு பொருந்தும் வகையில் சித்தரிக்கப்படுவது அவசியமாகும்.

பெண்களுக்கு சம அந்தஸ்து வழங்கும் நோக்கில் பல செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இவ்வகையில் இன்று ஆண், பெண் சமத்துவ அமைப்புகள் பல்கலைக்கழக மட்டங்களிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### பொதுவான தொழில்கள்

பெண்களில் மிகப் பெரும் தொகையானோர் விவசாயம், பெரும்தோட்டக் கைத்தொழில், கல்வி, கலை மற்றும் வீட்டு சேவைகளினை புரிந்து வருகின்றனர். 1990இல் வேலை வாய்ப்பு தொகை மதிப்பீட்டின் படி இலங்கையில் தாதிமாரில் 90 வீதம் பெண்களாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. அபிவிருத்தி என்னும் செயற்பாட்டில் சமூக அபிவிருத்தி பண்பாடு காரணியுடன் பெண்களை புறக்கணித்த நிலையில் அபிவிருத்தியை ஆராய முடியாது.

அதனால் தான் 1967 நவம்பர் 7ஆம் திகதியை ஐ.நா பொதுச்சபை பிரகடனம் ஒன்றை நிறைவேற்றி ஆண்களுடன் சரிசமமாக பெண்கள் கருதப்படும் அடிப்படையை விதந்துரைத்தது.

எனினும் ஏறக்குறைய பத்து ஆண்டுகள் கழிந்த பின்பே 1975ஆம் ஆண்டு சர்வதேச மகளிர் ஆண்டு பிரகடனப்ப டுத்தப்பட்டு பெண்கள் மீது கூடிய கவனம் செலுத்தப்பட்டது. 1970களின் பிற்பகுதியிலிருந்து உலகப் பெண்களின் வளம் பற்றிய இரு முக்கிய செயற்பாடுகள் முன்வைக்கப்படுகின்றன. அவையாவன பெண்ணிலை வாதம் மற்றும் பெண்களின் அபிவிருத்தி என்பனவாகும். இவ்வகையில் இவற்றின் அடிப்படையில் பெண்களை குடும்ப தேவையிலிருந்து மீட்டெடுத்து அபிவிருத்தியில் ஒழுங்கு செய்வதனை நாம் காணலாம்.

வளர்முக நாடுகளை பொறுத்தவரை இவர்களின் பங்கு மிகவும் பொருத்தமானது. எனவே நிறைவாக நோக்கும் போது பெண்களின் அபிவிருத்தி என்பது தேசியத்தின் அபிவிருத்தியாக அமைவதைக் காணலாம். ■

*பெரும்பாலான மகளிர் பாடசாலைகளிலும், பல்கலைக்கழகத்திலும் கலைத்துறை சார்ந்த பாடநெறியைப் பயின்று வருகின்றனர்.*

*கிராம புறத்தில் வளர்ந்து வரும் பிள்ளைகள் உயர் கல்வியில் பங்கேற்பதற்கான வாய்ப்புகள் வரையறுக்கப்பட்ட அளவிலேயே உள்ளன.*

*பெண் பிள்ளைகள் நீண்ட காலத்துக்கு வீட்டை விட்டு வெளியே செல்வதனை சமூக, கலாசார விழுமியங்கள் தடுத்து நிற்பகின்றமையால் பெண்கள் ஆண்களிலும் பார்க்க அதிகளவில் பாதிப்பினை அடையக் கூடியவர்களாக உள்ளனர்.*

*இன்று மாறி வரும் சூழ்நிலையில் பெண்களின் அபிலாஷைகள் மற்றும் ஆற்றல்கள் என்பவற்றுக்கு பொருந்தும் வகையில் சித்தரிக்கப்படுவது அவசியமாகும்.*

# இனப்படுகொலையை ஒப்புக்கொண்டது அரசு

## பிரிட்டன் தமிழர் பேரவை அறிக்கை

கொழும்பு,பெப்.18

கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக இறுதிக் கட்டப் போரில் காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் மக்களையும், சரணடைந்த போராளிகளையும் விடுதலை செய்யக் கோரி அவர்களது குடும்பத்தினரும், உறவினர்களும், மனித உரிமை ஆர்வலர்களும் போராடி வருகின்றனர். இந்த நிலையில் இலங்கை ஜனாதிபதியின் அறிவிப்பு உறவினர் மற்றும் நீதிக்காகப் போராடுவோர் உள்ளங்களில் இடியென இறங்கியுள்ளது.

இவ்வாறு பிரிட்டன் தமிழர் பேரவை அறிக்கை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இறுதிக் கட்டப் போரில் காணாமற்போனவர்களின் நிலை குறித்தறிய ஐ.நா.வரை சென்று தமிழ்ச்சமூகம் போராடி வருகின்றது. இது குறித்து வாய் திறக்காது மௌனம் சாதித்து வந்த இலங்கை இனவாத அரசு, தற்போது அவர்கள் இறந்து விட்டனர் என்று அறிவித்திருப்பதன் மூலம், ஈழத்தில் தாங்கள் நடத்திய இனப்படுகொலையை மீண்டும் ஒருமுறை ஒப்புக் கொண்டுள்ளது.

இலங்கையில் நீதிக்காகப் போராடுபவர்கள், ஊடகவியலாளர்கள், பாதிக்கப்பட்ட உறவினர்கள் எந்த வித எதிர்ப்புத் தெரிவித்தாலும், நசுக்கப்படும் தற்போதைய நிலைமை எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் முடிந்த பின்பு மோசமான நிலைக்குச் செல்லும். எமது மக்கள் கண்காணிப்புக்குட்படுத்தப்பட்டு பெரும் பாதிப்புக்கு உள்ளாக்கப்படுவார்கள். போராடும் மக்களை அச்சுறுத்தி, செயல் இழக்கச் செய்வதுடன், குற்றவியல் நீதி விசாரணைக்குத் தேவைப்படும் ஆதாரங்கள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்படும்.

எனவே இலங்கைக்கான சர்வதேச நீதிப்பொறிமுறை உருவாக்கப்பட்டு குற்றவியல் நீதி விசாரணை செயல்படத் தொடங்கினாலும் கூட, பூரணமான சாட்சியங்கள் மற்றும் ஆதாரங்கள் இன்றி நீதியை வெளிக் கொண்டு வருவது அசாத்தியமாக்கப்படும். தமிழர்களால் - தொடர்ந்தும் வலியுறுத்தப்பட்டு வருகின்ற சர்வதேச நீதி விசாரணைப் பொறிமுறைக்கான வழித்தடங்களை ஆராய்ந்து, பிரிட்டனர் தமிழர் பேரவை (BTF) மற்றும் புலம்பெயர் சகோதர அமைப்புகள் தொடர்ந்தும் குரல் கொடுத்து வருகின்றன.

இந்த வேளையில் சரணடைந்தவர்கள், கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் கொல்லப்பட்டு விட்டனர் என்ற ஜனாதிபதியின் கூற்றானது தமிழர்களுக்கு வழங்க வேண்டிய நீதி, இலங்கையிடமிருந்து வரப் போவது இல்லை என்பதனை உலக நாடுகளுக்கு எடுத்துச் சென்று நீதிக்கான முன்னெடுப்புகளை வலுப்படுத்த வேண்டியது தமிழ் மக்களின் கடமை - என்றுள்ளது. (க)



போரால் பாதிக்கப்பட்டு இரு கால்களையும் இழந்த முல்லைத்தீவைச் சேர்ந்த பிரேமதாஸ் பிரேம்குமாருக்கு ஊன்றுகோல் வழங்கப்பட்டது. கைதடி உதவும் கரங்கள் அமைப்பால் இந்த உதவி நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டது. (ஜ -159)

## சிவராத்திரிப் பெருவிழா

முல்லைத்தீவு.பெப்.18

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் தான்தோன்றீச்சரர் ஆலயத்தில் மகா சிவராத்திரிப் பெருவிழா எதிர்வரும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிறப்புற நடைபெறவுள்ளது.

பிற்பகல் 3.மணிக்கு அபிசேஷம் நடைபெற்று மாலை 6.30 மணிக்கு முதலாம் கால பூசையும், இரவு 8 மணிக்கு இரண்டாம் கால பூசையும், இரவு 9.30 மணிக்கு மூன்றாம் கால பூசையும், நள்ளிரவு 12.15 மணிக்கு லிங்கோற்பவ தரிசனமும் தொடர்ந்து 4 மணிக்கு நான்காம் கால பூசையும் நடைபெறவுள்ளன.

தொடர்ந்து எம்பெருமான் உள்வீதி,வெளிவீதி வலம் வந்து அடியவர்களுக்கு அருள்பாலிக்கவுள்ளார்.

பாறணை பூசையைத் தொடர்ந்து அன்னதானம் வழங்கப்படும்.

சிவராத்திரி விரதத்தை சிறப்பிக்கும் வகையில் இரவு இசை மற்றும் நடன நிகழ்வுகள்,பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள்,சிறப்புப் பட்டிமன்றம் என்பன நடைபெறவுள்ளன என ஆலய முகாமைத்து சபையினர் அறிவித்துள்ளனர். (ஜ-19)

## சிவராத்திரியை முன்னிட்டு சிறப்பு சொற்பொழிவுகள்

வேலணை.பெப்.18

மகா சிவராத்திரி விரதத்தை முன்னிட்டு இரு ஆலயங்களில் சிவநெறிச்செம்மல் இளம்சைவப்புலவர் ச .நவநீதனால் சிறப்பு சொற்பொழிவுகள் நிகழ்த்தப்படவுள்ளன.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை இந்து ஆலயங்களில் சிவராத்திரி விரதம் சிறப்பாக கடைப்பிடிக்கப்படவுள்ளது.

அன்றையதினம் இரவு 8 மணிக்கு யாழ்ப்பாணம் நாரந்தனை சரவணை கர்ணந்தோட்டம் ஸ்ரீ சிவ சுப்பிரமணிய சுவாமி கோவில் "சிவசிவ சிவகதி தானே" என்ற தலைப்பில் இரவு 10 மணிக்கு யாழ்ப்பாணம் நாரந்தனை வடக்கு தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் கோவிலில் "லிங்கோற்பவ மகிமை " என்ற தலைப்பிலும் சொற்பொழிவுகள் நடைபெறவுள்ளன.

நடத்தப்படும் சிறப்புச்சொற்பொழிவுகளில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பரிசுகள் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ)

## மட்டக்களப்பில் இருவாரங்களில் 189 பேருக்கு டெங்குத் தொற்று

மட்டக்களப்பு, பெப். 18

மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு நுளம்புத் தாக்கம் அதிகரித்து வருகின்றது. கடந்த ஜனவரி 31 ஆம் திகதி தொடக்கம் கடந்த வாரம் வரை 189 பேர் டெங்கு நோய்த் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மண்முனை வடக்கு சுகாதார மருத்துவ அதிகாரிப் பிரிவில் இந்தவாரம் 26 பேர் டெங்கு நோயாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதுபோன்று ஆரையம்பதி சுகாதார மருத்துவ அதிகாரிப் பிரிவில் 23 பேர், களுவாஞ்சிக்குடி சுகாதார மருத்துவ அதிகாரிப் பிரிவில் 31பேர், வாழைச்சேனை சுகாதார மருத்துவ அதிகாரிப் பிரிவில் 24 பேர், செங்கலடி சுகாதார மருத்துவ அதிகாரிப் பிரிவில் 7 பேர், காத்தான்குடி சுகாதார மருத்துவ அதிகாரிப் பிரிவில் 10 பேர், ஏறாவூர் சுகாதார மருத்துவ அதிகாரிப் பிரிவில் 10 பேர், வெல்லாவெளி சுகாதார மருத்துவ அதிகாரிப் பிரிவில் 6 பேர், வவுணதீவு சுகாதார மருத்துவ அதிகாரிப் பிரிவில் 6 பேர், பட்டிப்பளை சுகாதார மருத்துவ அதிகாரிப் பிரிவில் 4 பேர், ஓட்டமாவடி சுகாதார மருத்துவ அதிகாரிப் பிரிவில் 9 பேர், கோறளைப்பற்று மத்தி சுகாதார மருத்துவ அதிகாரிப் பிரிவில் 9 பேர், கிரான் சுகாதார மருத்துவ அதிகாரிப் பிரிவில் 6 பேர், வாகரை சுகாதார மருத்துவ அதிகாரிப் பிரிவில் 2பேர் ஆகியோர் இனங் காணப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

டெங்கால் இந்த வருடம் மட்டக்களப்பில் ஒருவரும் களுவாஞ்சிக்குடியில் ஒருவரும் உயிரிழந்துள்ளனர் என்று மருத்துவர் வே.குணராஜசேகரம் தெரிவித்தார். (து-150)



## பாடசாலைக்கு நீர்ப்பம்பி

கொடிகாமம் பெப் 18

சாவகச்சேரி மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலய மாணவர்களின் தண்ணீர் வசதி கருதி நீர்ப்பம்பி வழங்கப்பட்டது. பாடசாலை அதிபர் யோ.ஜெயகாந்தனிடம் கடந்த 10 ஆம் திகதி நீர்ப்பம்பி கையளிக்கப்பட்டது.

அப்பாடசாலை ஆசிரியர் ஒருவரும், அவரது உறவினரான சுவிஸ் நாட்டில் வசிக்கும் திருமதி ஆர். றோகினி, ஆசிரியர் செ.பரணீதரன் ஆகியோர் இணைந்து தமது கனகன் வள்ளி பரம்பரை உறவுப்பாலம் சார்பாக இந்த உதவியை வழங்கினர். (ஜ-159)

# தமிழரின் வாக்குகளை சிதறடிக்க 32 கட்சிகள்

## கூறுகின்றார் பச்சிலைப்பள்ளி தவிசாளர்

கிளிநொச்சி, பெப். 18

வடக்கு - கிழக்கில் தமிழ் மக்களின் வாக்குப் பலத்தைச் சிதறடிப்பதற்காக 32 கட்சிகள் உதயமாகியுள்ளன என்று பச்சிலைப்பள்ளி தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் தெரிவித்துள்ளார்.

தமிழர்களின் வாக்குப் பலத்தைச் சிதறடிப்பதற்காக வடக்கு கிழக்கின் 32ஆவது கட்சியாக மக்கள் மேம்பாட்டு ஐக்கிய முன்னணி எனும் கட்சி அண்மையில் முளைத்துள்ளது. வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளுக்கும், சுயநிர்ணய உரிமைகளுக்காகவும் காலம் காலமாக பல்வேறு வகையான போராட்டங்களையும், அரசியல் ரீதியான அழுத்தங்களையும் முன்னெடுத்துவரும் பழம்பெரும் அரசியற் கட்சிகளால் செயற்படுத்த முடியாதவற்றைக்கூட, நேற்றுப்பெய்த மழைக்கு முளைத்த காளான்களாக ஆங்காங்கே தோன்றி மறையும் சில கட்சிகள் தம்மால் சாதித்துவிட முடியும் எனக்கூறி மக்களை தம்வசப்படுத்த முனைவது வேடிக்கை தருகிறது.

இனவிடுதலைக்கும், உரிமை பெறுவதற்குமாக கட்சிகள் உருவாகிய அல்லது உருவாக்கப்பட்ட காலங்களெல்லாம் கடந்து ஆளுக்கும், பேருக்கும் ஒவ்வொரு கட்சியை ஆரம்பித்து வைக்கலாம் என்ற அடிப்படையில் தற்போது வடக்கு, கிழக்கு மக்களையும் அவர்களின் வாக்குகளையும் கூறுபோடும் இலக்கோடு புதுப்புதுக் கட்சிகள் உதிக்கின்றமை சாதாரணமாகி விட்டது.

1. இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, 2. தமிழீழ விடுதலை இயக்கம், 3. தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், 4. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, 5. ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, 6. தமிழர் விடுதலைக் கூட்டணி

7. ஈழவர் ஜனநாயக முன்னணி, 8. தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் (ஐங்கரநேசன்), 9. தமிழ் மக்கள் கூட்டணி (விக்னேஸ்வரன்), 10. தமிழ்த் தேசியக் கட்சி (சிறீகாந்தா, சிவாஜிலிங்கம்), 11. ஈழத்தமிழர் சுயாட்சிக் கழகம் (அனந்தி சசிதரன்), 12. தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி (வரதராஜப்பெருமாள்)

13. முற்போக்கு தமிழ்த் தேசியக் கட்சி (விஜயகாந்), 14. ஜனநாயக மக்கள் காங்கிரஸ் (பிரபா கணேசன்), 15. தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் (பிள்ளையான்), 16. தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணி (கருணா)

17. கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு (கோபாலகிருஷ்ணன்), 18. கிழக்குத் தமிழர் கூட்டணி (வியாழேந்திரன்), 19. கிழக்குத் தமிழர் ஒன்றியம் (சிவநாதன்) .

20. இலங்கைத் தமிழர் முற்போக்கு முன்னணி (கணேசமூர்த்தி), 21. ஜனநாயகப் போராளிகள் கட்சி, 22. மறுவாழ்வளிக்கப்பட்ட போராளிகள் கட்சி, 23. விடுதலைப் புலிகள் மக்கள் பேரவை, 24. மறத் தமிழர் கட்சி (வேலப்பு அன்புமணி), 25. ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, 26. ஐக்கிய தேசியக் கட்சி, 27. சிறீலங்கா சுதந்திரக் கட்சி, 28. மக்கள் விடுதலை முன்னணி

29. பொதுஜன பெரமுன, 30. சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பு (சந்திரகுமார்), 31. சிறீரெலோ (உதயராசா), 32. மக்கள் மேம்பாட்டு ஐக்கிய முன்னணி ஆகிய 32 கட்சிகளும், 16க்கும் மேற்பட்ட சுயேச்சைக் குழுக்களுமாக மொத்தம் 48 கட்சிகள் தமிழர்களின் வாக்குகளைப் பிரித்து அவர்களின் பேரம் பேசும் சக்தியை உடைத்து, தமிழர்களைத் தெருவுக்குக் கொண்டுவர கங்கணம் கட்டிநிற்கின்றன. என்றார். (த-6)



# விபத்தில் ஒருவர் பலி!

மட்டக்களப்பு, பெப். 18

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரைப் பொலிஸ் பிரிவில் திருகோணமலை மட்டக்களப்பு பிரதான வீதியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். மற்றுமொருவர் காயமடைந்தார்.

வாழைச்சேனையிலிருந்து மோட்டார் சைக்கிளில் திருகோணமலைக்குச் செல்லும் போது வாகரைப் பகுதியில் வைத்து உழவு இயந்திரத்தில் மோட்டார் சைக்கிள் மோதியதிலே இவ்விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் இருவர் பயணித்தனர். மோட்டார் சைக்கிளின் பின் பக்கத்திலிருந்து சென்றவரே விபத்தில் உயிரிழந்தார். வாகனம் செலுத்தியவர் படுகாயங்களுடன் வாழைச்சேனை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ம)

# இலங்கையில் மற்றொரு சீனருக்குக் கொரோனா?

கொழும்பு, பெப். 18

மாத்தறையில் ஹம்பாந்தோட்டை அதிவேக நெடுஞ்சாலை அமைப்பு பணியில் ஈடுபடும் சீன நாட்டவர் ஒருவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அவருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சீன நாட்டவருக்கு சூரியவெவ நவதகஸ்வெவப் பகுதியில் சேவை செய்யும் போது திடீரென காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. அவருக்குத் தனியான அறை ஒதுக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது. (ம)




# மட்டக்களப்பில் விபத்து தந்தை, தனயன் இறப்பு

மட்டக்களப்பு, பெப். 18

மட்டக்களப்பு சந்திவெளியில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் தந்தையும் மகனும் உயிரிழந்தனர். இருவர் படுகாயமடைந்த நிலையில், மட்டக்களப்பு போதனா மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு திருகோணமலை பிரதான வீதியில் உள்ள சந்திவெளியில், மட்டக்களப்பில் இருந்து கிரான் நோக்கிப் பயணித்த ஓட்டோவும் கொழும்பில் இருந்து மட்டக்களப்பு நோக்கிப் பயணித்த சிறிய ரக லொறியொன்றும் நேருக்கு நேர் மோதியதில், இந்த விபத்து சம்பவித்துள்ளது. கிரான், காளி கோவில் வீதியைச் சேர்ந்த 71 வயதுடைய ரங்கன் ராமசாமி அவருடைய மகனான 41 வயதுடைய ராமசாமி விஜயபாஸ்கர் ஆகிய இருவருமே உயிரிழந்தனர். (ம)

# 200அடி பள்ளத்தில் பாய்ந்தது ஓட்டோ

ஹற்றன், பெப். 18

தலவாக்கலைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் முச்சக்கரவண்டி ஒன்று வீதியை விட்டு விலகி சுமார் 200 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளானதில் மூவர் படுகாயமடைந்தனர்.

தலவாக்கலை ட்ரூப் தோட்டப் பகுதியிலிருந்து தலவாக்கலை நகரத்துக்குச் சென்று கொண்டிருந்த குறித்த முச்சக்கர வண்டியே இவ்வாறு விபத்துத்தில் சிக்கியது. எதிரேவந்த வாகனம் ஒன்றுக்கு இடமளிக்கும் போதே இவ்விபத்து நேர்ந்துள்ளதாக விசாரணைகளை மேற்கொள்ளும் பொலிஸார் தெரிவித்தனர். முச்சக்கர வண்டியில் சாரதி உட்பட மூவர் பயணித்தனர். மூவரும் பலத்த காயங்களுக்குள்ளாகி நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ம)



# கொரோனாவால் விரிசல் விழாது


கொழும்பு, பெப். 18

கொரோனா வைரஸ் தொற்று நோயால் சீனா பாதிக்கப்பட்டிருக்கின்ற போதிலும் இலங்கைக்கும் அந்த நாட்டுக்கும் இடையிலான பொருளாதார உறவுகளில் எந்தப் பாதிப்பும் இல்லை என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, ஊடகவியலாளர்களுடன் பேசுகையில்: இரு நாடுகளுக்கும் இடையிலான தற்போதைய பொருளாதார உறவுகள் மீது கொரோனா வைரஸ் எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை - என்று மேலும் தெரிவித்தார். (ம)

# அரசியல் எதிர்காலம் ஐ.தே.கவுக்கு இல்லை

## அநுரகுமார சாட்டை



**கொழும்பு, பெப். 18**

**ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஐக்கியமும் இல்லை, தேசியமும் இல்லை, கட்சியும் இல்லை. இப்படியே சென்றால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு அரசியல் எதிர்காலம் இல்லை இவ்வாறு தெரிவித்தார் ஜே.வி.பியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க.**

காலியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், அங்கு மேலும் தெரிவித்ததாவது:

'15 வருடங்களாக ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பிரச்சினைகள்தான் இருந்து கொண்டிருக்கின்றன. கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஒன்றைக் கூறுகிறார். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இன்னொன்றைக் கூறுகிறார். இவ்வாறு நீடித்தால் கட்சியொன்று எப்படி நிலைக்கும்? நாட்டில் இப்போது ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கான பொறுப்பை ஐக்கிய தேசியக் கட்சி ஏற்றுக்கொண்டே ஆக வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சிக்கு அரசியலில் நீடிக்க முடியாது. அத்தோடு, பிர தமர் மஹிந்த ராஜபக்ஷ கூறுகின்றமையைப் போன்று, பொதுத் தேர்தலில் அரசாங்கத் தரப்புக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்காது. 2010 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து 20 பேரளவில் மஹிந்த அரசுக்கு ஆதரவளித்த காரணத்தால், அப்போது மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைத்தது.

இப்போதும், சிலர் கட்சித்தாவ தயார் நிலையிலேயே இருக்கிறார்கள். ஆனால், இவர்களை ஏற்றுக்கொள்ள மஹிந்த தரப்பினர் தயாராக இல்லை. ஏனெனில், வேட்புமனுப் பிரச்சினை அங்கும் நிலவிக்கொண்டிருக்கிறது.

எனவே, தேர்தலில் போட்டியிட்டு, உறுப்பினர் அந்தஸ்துடன் வருமாறுதான் கூறப்பட்டுள்ளது. இந்த நிலையில், பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களிப்பதானது, மஹிந்த அரசுக்கு வாக்களிப்பதற்கு சமமான ஒரு செயற்பாடாகவே கருதப்படுகிறது. வெலிக்கடை சிறைச்சாலைக்கு நிகரான ஒன்றாகவே இலங்கை நாடாளுமன்றம் இருக்கிறது. சொல்லப்போனால், வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு மார்க்கம் அளிக்கும் இடமாகவே நாடாளுமன்றம் காணப்படுகிறது. இதனைச் சுத்தம் செய்ய வேண்டியது எமது கடமையாகும்' என்றார். (ம)

# மலையக மக்களுக்கான உரிமைகள் வெல்லப்படும்

## பத்திரண அறிவிப்பு



கொழும்பு, பெப். 18

மலையக மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அனைத்து உரிமைகளையும் வழங்குவதற்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் தலைமையிலான அரசு அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது என அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார்.

அத்துடன், அடுத்த ஐந்தாண்டு காலப்பகுதியில் தோட்டத் தொழிலாளர்களின் பங்களிப்புடன் தேயிலை மூலமான வருமானத்தை இரட்டிப்பாக்குவதற்கும், அதன் பலன் தோட்டத் தொழிலாளர்களுக்கே சென்றடையவும் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய அரசாங்கத்தின் நிதிப் பங்களிப்புடன் மலையக மக்களுக்காக நிர்மாணிக்கப்படவுள்ள 10 ஆயிரம் தனி வீடமைப்பு வேலைத் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'நான் சிறுவனாக இருக்கும்போது, மலையக மக்களின் பொருளாதாரம் மற்றும் சமூக வாழ்க்கை நிலை மேம்பாடு தொடர்பாகக் கதைக்கும் போது சௌமியமூர்த்தி தொண்டமான் என்பவர் தவிர்க்கமுடியாத இடத்தைப்பிடிப்பார். எனவே, சௌமியமூர்த்தி தொண்டமான் மற்றும் மலையக மக்கள் தொடர்பாக எனது தந்தையான அமரர் ரிஷட் பத்திரணவின் மனதில் சிறந்த நன்மதிப்பு, கௌரவம் இருந்தது. அவர் கல்வி அமைச்சராக இருந்தபோது இப்பகுதியிலுள்ள மக்களின் கல்வி மேம்பாட்டுக்காக தன்னால் முடிந்த நடவடிக்கைகளை அன்று முன்னெடுத்தார். இன்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ அரசாங்கத்தில் பெருந்தோட்டத்துறை அமைச்சராக இருக்கும் நான் மலையக மக்களுக்கு வழங்கவேண்டிய அனைத்துவித ஒத்துழைப்புகளையும் அமைச்சர் தொண்டமானுடன் இணைந்து வழங்குவேன்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாள் சம்பளமாக ஆயிரம் ரூபாவை வழங்குவது தொடர்பாக எமது அரசாங்கம் சாதகமான பதிலை வழங்கியது. நிச்சயம் அந்தத் தொகை கிடைக்கும். அதுமட்டுமல்லாது உங்களுக்குக் கிடைக்கவேண்டிய அனைத்து உரிமைகளையும் வழங்குவதற்கு இந்த அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படும்' - என்றார். (ம)

# மஹிந்த - சு.க இன்று சந்திப்பு!

யாழ்ப்பாணம், பெப். 18

பிரதமர் மஹிந்த ராஜபக் ஷவுக்கும் சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் சந்திப்பொன்று இன்று இடம்பெறவுள்ளது. சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலர் தயாசிறி ஜயசேகர இந்தத் தகவலை உறுதிப்படுத்தியுள்ளார்.

இதன்போது பொதுத்தேர்தலில் பொதுமக்கள் முன்னணி (பெரமுன), சுதந்திரக் கட்சி இணைந்து உருவாக்கவுள்ள கூட்டணி தொடர்பில் அதிகம் கவனம் செலுத்தப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

'பொதுக் கூட்டணி ஒன்றின் கீழ் எதிர்வரும் தேர்தலில் போட்டியிடுவதற்கு எதிர்பார்க்கின்றோம். சின்னம் குறித்து நாம் சிந்திக்கப் போவதில்லை. இந்த விடயத்தில் அனைவரும் ஒன்றிணைந்து பயணிக்க வேண்டிய தேவையுள்ளது' என்று தயாசிறி முன்னதாகத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# காதலர்கள் களியாட்டம் 200 மாணவர்கள் கைது

கொழும்பு, பெப். 18

காதலர் தினத்தை முன்னிட்டு கண்டியில் உள்ள பிரபல விடுதியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பேஸ்புக் விருந்து நிகழ்வில் கலந்து கொள்ளவிருந்த 200 பல்கலைக்கழக மாணவர்கள் கைது செய்யப்பட்ட நிலையில், அவர்களில் 18 பேரைத் தவிர ஏனைய அனைவரும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.


மதுவரி திணைக்கள அதிகாரிகள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மேற்கொண்ட விசேட சோதனை நடவடிக்கையின்போதே பல்கலைக்கழக மாணவர்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டனர். இவர்களில் 18 நபர்களிடமிருந்து போதைப் பொருள்கள் கைப்பற்றப்பட்டதையடுத்தே, சந்தேகநபர்கள் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. குறித்த 18 பேரிடமிருந்து ஹெரோயின், கஞ்சா, ஐஸ்ரக போதைப்பொருள் மற்றும் வேறு சில போதைப்பொருள்களையும் பறிமுதல் செய்துள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ம)

# நோர்வூட் பகுதியில் 7 வீடுகள் தீக்கிரை!

யாழ்ப்பாணம், பெப். 18

நோர்வூட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இன்ஜஸ்ட்ரி குரூப் பிளிங்போனி தோட்டத்தில் நேற்றுமுன்தினம் இரவு 7 மணியளவில் பெரும் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்தத் தீ விபத்து காரணமாக லயன் தொகுதியில் அமைந்திருந்த 7 வீடுகள் முற்றாகத் தீக்கிரையாகியுள்ளமையுடன் அந்த வீடுகளில் குடியிருந்த 40 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.



தீ பற்றியதைத் தொடர்ந்து, நோர்வூட் பொலிஸார் மற்றும் ஹற்றன் டிக்கோயா நகர சபையின் தீயணைப்பு பிரிவினர் மற்றும் பொதுமக்கள் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நடவடிக்கை எடுத்ததுடன், சுமார் 3 மணித்தியாலத்தின் பின்னர் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

இந்நிலையில், சில வீடுகளில் இருந்த பெருமளவிலான வீட்டு உபகரணங்கள், பெறுமதியான ஆவணங்கள், தங்க நகைகள், பாடசாலை மாணவர்களின் உபகரணங்கள் தீக்கிரையாகியுள்ளன.


தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட 7 குடும்பங்களைச் சேர்ந்த 40 பேர் தற்காலிகமாக தோட்ட சிறுவர் பராமரிப்பு நிலையத்திலும், தோட்ட வைத்தியசாலையிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான நிவாரண உதவிகளை தோட்ட நிர்வாகமும், நோர்வூட் பிரதேச சபையும் வழங்குகின்றன. (ம)



கிழக்கு மாகாணத்தின் திருகோணமலையில் அமைந்துள்ளபோல்டேயஸ் இறையியல் கல்லூரி, தனது இருபதாவது வருட நிறைவுதினத்தில், மூன்றாவது பட்டமளிப்பு விழாவை புனித மரியாள் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் அண்மையில் நடத்தியது. இதில் 31 இளமாணிப் பட்டதாரிகளும், 20 டிப்ளோமாக் கற்கையாளர்களும் மற்றும் 22 போல்டேயஸ் சான்றிதழ் கற்கையாளர்களுமாக, மொத்தம் 73 மாணவர்கள் பட்டம் பெற்றனர். நிகழ்வில் பிரதான விருந்தினராக முன்னாள் அதிபர் ஜக்கி ஹூல் கலந்துகொண்டார். (க)

# ஏப்ரல் 25இல் பொதுத்தேர்தல் மார்ச் 11-17 வேட்பு மனுக்கள்

## 9ஆவது நாடாளுமன்றின் கன்னி அமர்வை மே 12ஆம் திகதியில் நடத்தவும் ஏற்பாடு



**கொழும்பு, பெப். 18**

**நாடாளுமன்றம் மார்ச் 2ஆம் திகதி கலைக்கப்பட்டு ஏப்ரல் 25ஆம் திகதி பொதுத்தேர்தல் நடத்தப் படவுள்ளது என தேர்தல் ஆணைக்குழு வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.**

இதன்படி பொதுத்தேர்தலுக்கான வேட்புமனுக்களைத் தாக்கல் செய்ய மார்ச் 11ஆம் திகதியிலிருந்து 17ஆம் திகதிவரை தேர்தல் ஆணைக்குழுவால் கால அவகாசம் வழங்கப்படலாம் எனவும் தெரியவருகின்றது.

அத்துடன், பொதுத்தேர்தலின் பின்னர் 9ஆவது நாடாளுமன்றத்தின் கன்னி அமர்வை மே மாதம் 12ஆம் திகதி நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நாடாளுமன்றம் மார்ச் 2ஆம் திகதி கலைக்கப்பட்டால் தேர்தலை நடத்தும் திகதி, வேட்பு மனுத் தாக்கல் செய்யும் திகதி ஆகியன தொடர்பில் தெளிவுபடுத்துமாறு கோரி தேர்தல் ஆணைக்குழுவுக்கு ஜனாதிபதியின் செயலர் கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

பதவிகாலம் முடிவடைவதற்கு முன்னர் ஜனாதிபதியால் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால், அது தொடர்பில்வெளியிடப்படும்விசேட வர்த்தமானியில் தேர்தல் திகதி, வேட்பு மனு ஏற்பு திகதி, புதிய நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டத் தொடர் எப்போது நடைபெறும் போன்ற விவரங்களை யும் குறிப்பிட வேண்டும்.

இதற்காகவே ஜனாதிபதி செயலரால், தேர்தல் ஆணைக்குழுவிடம் மேற்படி தகவல்கள் கோரப்பட்டுள்ளன. தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் தற்போது வெளிநாட்டில் இருக்கின்றமையால் நாடு திரும்பியதும் இது தொடர்பில் ஜனாதிபதியின் செயலருக்கு அறிவிக்கப்படும்.

அதேவேளை, நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கான கால எல்லை தொடர்பில் சட்டமா அதிபரிடமும் ஜனாதிபதியின் செயலர் விளக்கம் கோரியிருந்தார். அரசமைப்பின் 19ஆவது திருத்தச்சட்டத்தின் பிரகாரம் மார்ச் முதலாம் திகதிக்குப் பிறகு எந்நேரத்திலும் ஜனாதிபதியால் நாடாளுமன்றத்தைக் கலைக்க முடியும் என பதில் வழங்கப்பட்டுள்ளது. இதன்பிரகாரமே மார்ச் 2ஆம் திகதி நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு, ஏப்ரல் 25ஆம் திகதி பொதுத் தேர்தல் நடத்தப்படவுள்ளது என அறியமுடிகின்றது. (ம-44)

# புதிய தொழில் முயற்சிகளுக்கு வாய்ப்புக்களை விரிவுபடுத்துக

## ஜனாதிபதி பணிப்புரை

கொழும்பு, பெப். 18

உள்நாட்டு தொழில் முயற்சியாளர்களுக்கும், வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கும் நாட்டில் புதிய தொழில் முயற்சிகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புகளை விரிவுபடுத்த வேண்டியுள்ளதாக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக் ஷ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பி டப்பட்டுள்ளதாவது:

நீர்கொழும்பில் நேற்றுமுன்தினம் 'தேசிய சட்ட மாநாடு 2020' நடைபெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் உரையாற்றிய ஜனாதிபதி, துரித பொருளாதார அபிவிருத்தியை நோக்கி புதிய மாற்றங்களின் ஊடாக வழங்கப்படும் வாய்ப்புகளை பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று குறிப்பிட்டார்.

துரித தொழில்நுட்ப மாற்றங்களுடன் உலகின் மிக முக்கிய சந்தையாக, ஆசிய கேந்திர நிலையமாகத் திகழ்கிறது என்றும் ஆசியாவின் எழுச்சியை எமது நாட்டின் பொருளாதார அபிவிருத்தியை அடைந்துகொள்வதற்கு அதிகபட்சம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அதற்காக சிறிய நடுத்தர மற்றும் நீண்டகால அடிப்படையில் முறைமைகளை உருவாக்க வேண்டியதன் தேவையைச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இந்த நோக்கத்தை அடைந்துகொள்வதற்கு தனது அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளதாகவும் தெரிவித்தார்.

அதிக தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்துவதற்கு உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்களை ஊக்குவிப்பதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

தேசிய அபிவிருத்தியைத் துரிதப்படுத்துவதற்குப் பொருளாதாரத்தின் முழுமையான உள்ளாற்றலுக்கும் தேவையான சீர்திருத்தங்களைச் செய்வதற்கும் அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது என்றும் வர்த்தக சட்டத்திட்ட முறைமையை முன்னேற்றுவதன் ஊடாக முறைகேடுகள், துஷ்பிரயோகங்களைத் தடுக்க முடியும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அத்தோடு, இலங்கையின் சட்ட முறைமையை உலகில் சிறந்த நிலைக்கு மாற்றுவதற்கு நீதித்துறையும் அரசாங்கமும், சட்டத்துறையும் இணைந்து முழுமையான தீர்வை முன்வைக்க வேண்டிய காலம் உருவாகியுள்ளதென்றும் ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார்.

தொடர்ந்தும் உரையாற்றிய ஜனாதிபதி நீதித்துறையின் நடவடிக்கைகள் மற்றும் சட்ட நடைமுறைகளில் நிறைவேற்றுத்துறை அல்லது சட்டவாக்கத்துறை தலையிடுவது ஜனநாயகத்துக்குப் பாதிப்பானதாக அமையும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அதேபோன்று நிறைவேற்றுத்துறை மற்றும் சட்டவாக்கத்துறையின் நடவடிக்கைகளுக்கு நீதித்துறை தேவையற்ற தலையீட்டைச் செய்யாதிருப்பதும் முக்கியமானதாகும் எனவும் குறிப்பிட்டார்.

மக்களின் இருப்புக்காகவும், சுபீட்சத்துக்காகவும் நிறைவேற்றுத்துறை மேற்கொள்ளும் அபிவிருத்தி முயற்சிகளுக்கு நீதித்துறை தடைகளை ஏற்படுத்தாது இருப்பது முக்கியமானதாகும் என்றும் ஜனாதிபதி இங்கு குறிப்பிட்டார் - என்றுள்ளது. (ம)

# சீரான வானிலை

கொழும்பு, பெப். 18

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் பிரதானமாக சீரான வானிலை நிலவும் என எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

எனினும் சப்ரகமுவ மாகாணத்திலும், களுத்துறை, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் பி.ப. 2 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. மேல், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களில் சில இடங்களில் காலை வேளையில் பனிமூட்டமான நிலை எதிர்பார்க்கப்படுகின்றது.

ஹம்பாந்தோட்டை, மொனராகலை மற்றும் புத்தளம் மாவட்டங்களில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. (ம)



# கட்டுத்துப்பாக்கிகளுடன் இருவர் நேற்றுக் கைது!

மட்டக்களப்பு, பெப். 18

மட்டக்களப்பு கொக்குக்குஞ்சிமடு பிரதேசத்தில் இரண்டு கட்டுத் துப்பாக்கிகளுடன் இருவர் கரடியனாறு பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்பட்டமையை அடுத்து எதிர்வரும் 28ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டதாக கரடியனாறு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டி.எம்.ஏ.சமரகோன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்புப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலொன்றையடுத்து விசேட பொலிஸ் குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போதே இந்தத் துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. உள்ளூரில் தயாரிக்கப்பட்ட இந்தத் துப்பாக்கிகள் காட்டு விலங்குகளை வேட்டையாடுவதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கலாமென சந்தேகிக்கப்படுகிறது. (ம)

# தமிழ் முற்போக்கு கூட்டணியின் அரசியல் குழுக் கூட்டம் இன்று!

தமிழ் முற்போக்கு கூட்டணியின் அரசியல் குழுக் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது என்று கூட்டணியின் பொதுச்செயலர் சந்திரா சாப்டர் தெரிவித்தார்.

தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தலைமையில் கொழும்பில் இந்தக் கூட்டம் இடம்பெறவுள்ளது. இந்தக் கூட்டத்தின்போது, எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடுவது உள்ளிட்ட பல்வேறு அரசியல் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தக் கூட்டத்தில், உருவாக்கப்படவுள்ள புதிய கூட்டணியில் காணப்படும் சில முறுகல் நிலை தொடர்பாக கலந்துரையாடப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ம)


# மலக்கழிவுகளால் அச்சுறுத்தல்கள்!

யாழ்ப்பாணம், பெப். 18

ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரியிலிருந்து முறையற்ற விதத்தில் வெளியேற்றப்படும் மலக்கழிவுகள் காரணமாக தமது வாழ்வுக்குப் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டி பத்தனை, பெயித்திலி தோட்ட மக்கள் நேற்றுமுன்தினம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பாக தோட்ட நிர்வாகம், சுகாதாரப் பிரிவு, கல்லூரி நிர்வாகத்திற்கு என சம்பந்தப்பட்ட அனைத்து தரப்புகளுக்கும் பல தடவைகள் அறிவிக்கப்பட்டபோதிலும் உரிய நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என மக்கள் தெரிவித்துள்ளனர்.

பத்தனை பெயித்திலி தோட்டத்தில் 50க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்றன. ஸ்ரீபாதக் கல்வியியற் கல்லூரியிலிருந்து வெளியேற்றப்படும் மலக்கழிவுகள் இத்தோட்டத்திலுள்ள வடிகானுக்கு வந்த பின்னரே பிரதான ஆற்றை நோக்கிச்செல்கின்றன. இதனால் இந்தத் தோட்ட மக்கள் சுகாதார ரீதியில் பல அச்சுறுத்தல்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். தொற்று நோய்கள் ஏற்படும் அபாயம் இருப்பதுடன், சூழல் மற்றும் வளியும் மாசடைகின்றது. அதுமட்டுமல்லாது, சிறுவர் பராமரிப்பு நிலையமும் வடிகானை அண்டிய பகுதியிலேயே அமைந்துள்ளதால், சிறார்களும் அடிக்கடி நோய்வாய்ப்படுகின்றனர் என பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். (ம)



# குற்றங்களை கட்டுப்படுத்த காலஅவகாசம் தாருங்கள்

## கோருகிறார் கிளி., முல்லையின் டி.ஐ.ஜி.



**கிளிநொச்சி, பெப். 18**

**கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெறுகின்ற சட்டவிரோத செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த காலஅவகாசம் தருமாறு கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் எச்.ஏ.என்.கே. தமிந்த விஜயசிறி கோரியுள்ளார்.**

கிளிநொச்சி சிந்தனையாளர் வட்டத்தினர் அவரைக் கடந்த வெள்ளிக்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினர். அதன்போது குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துமாறு சிந்தனை வட்டத்தினர் கோரிக்கை விடுத்தனர்.

இரணைமடுவிலுள்ள பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தில் சந்திப்பு நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெற்று வருகின்ற சட்டவிரோத செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதில் சமீபகாலமாகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்ற செயற்பாடுகளுக்குப் பாராட்டுக்களைத் தெரிவித்த சிந்தனையாளர் வட்டத்தினர், மாவட்டத்தில் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்ற சட்ட விரோத செயற்பாடுகளான மணல் கடத்தல், மரம் வெட்டுதல், கசிப்புக் காய்ச்சுதல், கஞ்சா விற்பனை மற்றும் குழு மோதல்கள், பெண்களுக்கு எதிரான வன்முறைகள், இளைஞர்களின் விதிமுறைகளை மீறிய போக்குவரத்து செயற்பாடுகள் உள்ளிட்ட சட்டத்துக்குப் புறம்பான அனைத்துச் செயற்பாடுகளையும் கட்டுப்படுத்துவது மற்றும் பொதுமக்கள், இளைஞர்கள், மாணவர்களுக்கு விழிப்புணர்வுகளை ஏற்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வது பற்றியும் கலந்துரையாடினர்.

பொலிஸார் மற்றும் சிவில் சமூக அமைப்புகளுக்கிடையே சட்டவிரோத செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதில் பரஸ்பர ஒத்துழைப்புப் பற்றியும் பேசப்பட்டது. இதன்போதே மேற்கண்டவாறு காலஅவகாசம் கோரினார்.

தவிர, சுற்றுச்சூழல் பாதுகாப்பு விடயத்தில் தான் அதிகம் கவனம் செலுத்துகின்றேன் என்றும் தெரிவித்தார். (த-214)



# ஒன்றிய அலுவலகம் பாரதிபுரத்தில் திறப்பு

கிளிநொச்சி, பெப். 18

வன்னித் தமிழ் மக்கள் ஒன்றியத்தின் தலைமைச் செயலகம் கிளிநொச்சி பாரதிபுரத்தில் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

ஒன்றிய நிறுவுநரும் ஊடக பேச்சாளருமான எம்.ஏ.யோகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பலர் கலந்து கொண்டனர். இந்த அலுவலகத்தை கிராமமட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் இணைந்து திறந்துவைத்தனர். அதில் யோகேஸ்வரன் உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:

இந்த அமைப்பு சமூகத்துக்கு ஒவ்வாத செயற்பாடுகளில் ஈடுபடமாட்டாது. தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை போராட்டங்களின் ஊடாக வெளிக்கொண்டுவர முன்னின்று உழைக்கும். இளம் பராயத்தில் கட்சிகளை ஆரம்பித்த இன்றைய அரசியல் தலைவர்கள், வயது முதிர்ந்த நிலையிலும் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்கின்றனர். இந்த நிலையில் இளம் சமூகத்தினரிடத்தில் அதனை விட்டுக்கொடுப்பதற்குத் தயாராக இல்லை. இந்த நிலையில்தான் இந்த அமைப்பை உருவாக்க வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது. இலங்கையிலுள்ள அனைத்து இனங்களையும் மதித்தும் அனைவரையும் ஒன்றாகப் பயணிக்கக் கூடிய வகையிலும் எமது பயணம் தொடரும். இந்த அமைப்பில் முழுக்க இளைஞர் ...படுவார்கள். - என்றார். (த-6)

# சீரமைத்த கிணறுகளுக்கான கொடுப்பனவு இதுவரை இல்லை

## பெற்றுத் தருமாறு விவசாயிகள் கோரிக்கை

சாவகச்சேரி. பெப்.18

தென்மராட்சி, மட்டுவில் வடக்கு சந்திரபுரம் கிராமங்களில். விவசாயக் கிணறுகளை சீரமைக்க மேற்கொள்ளப்பட்ட வேலைத் திட்டத்துக்கு இதுவரை உரிய கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை என்று அந்தப் பகுதி விவசாயிகள் தெரிவித்தனர்.

நிலமட்டத்துடன் கிணறுகள் காணப்பட்டமையால். உயிராபத்துக்களைத் தடுக்க. விவசாயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் 24 விவசாயக் கிணறுகள் சீரமைப்புக்காகத் தெரிவு செய்யப்பட்டன. சீரமைப்புப் பணிகள் விவசாயிகளால் மேற்கொள்ளப்பட்டன . ஒவ்வொரு கிணறும் நிலமட்டத்திலிருந்து 3 அடி உயரத்துக்கு உயர்த்தப்பட்டன.

கடந்த மழைக்காலம் ஆரம்பிக்க முன்னர் விவசாயிகள் தமது கிணறுகளைச் சீரமைத்தனர். கடந்த டிசெம்பர் மாதம் அனைத்து விவசாயிகளிடமும் உறுதிச்சீட்டுக்களில் கையொப்பம் பெறப்பட்ட நிலையில் 9 விவசாயிகளுக்கு கொடுப்பனவு வழங்கப்பட்டது. ஏனைய 15 விவசாயிகளுக்கும், இதுவரை கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லையென விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

கடன் பெற்று கிணற்று வேலைகள் மேற்கொள்ளப்பட்டபோதும், பிரதேச செயலகமோ, விவசாயத் திணைக்களமோ அந்தக் கொடுப்பனவை வழங்குவதற்கு முன்வரவில்லை என்று விவசாயிகள் தமது ஆதங்கத்தை வெளியிட்டனர். (ஐ -9)

# நாய்க் கடிக்கு இலக்காகி முதியவர் ஆஸ்பத்திரியில்

சாவகச்சேரி.பெப்.18

ஊன்றுதடியுடன்கோயிலுக்குச் சென்ற 83 வயது முதியவரை நாய் கடித்துக் குதறியதில் கடிகாயங்களுக்கு இலக்கான முதியவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று கச்சாய் அம்மன் கோவிலடியில் இடம்பெற்றுள்ளது.

கச்சாய் தெற்கைச் சேர்ந்த முதியவர் பிரதி திங்கள் மற்றும் வெள்ளிக் கிழமைகளில் அயலில் உள்ள அம்மன் கோவிலுக்குச் சென்று வருகின்றமையை வாடிக்கையாகக் கொண்டுள்ளார். வயது முதிர்ச்சி காரணமாக ஊன்றுதடியுடன் நடந்து செல்வார் எனவும் நேற்று வழமை போல கோவிலுக்குச் சென்ற வேளையில் வளர்ப்பு நாயொன்று துரத்திவந்து தன்னைக் கடித்தது எனவும் அவர் தெரிவித்தார். (ஐ-9)

# நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம்,பெப்.18

யாழ்ப்பாணம் திருவள்ளுவர் சனசமூக நிலையத்தின் நிர்வாகத் தெரிவு கடந்த 2 ஆம் திகதி மாலை நிலைய முன்றிலில் நடைபெற்றது.

ஜே.74 முன்னாள் கிராம அலுவலரும் மாநகர சபை உறுப்பினருமான கே. நித்தியானந்தன், மாநகர சபை சனசமூக நிலையங்களின் மேற்பார்வை அதிகாரி கே. சத்தியலோகன், மாநகர சபை பிரதி முதல்வர் து.ஈசன் ஆகியோரின் இணைத் தலைமையில் நிர்வாகத் தெரிவு நடைபெற்றது.

தலைவர் சி.சுயாந், செயலாளர் மா.சங்கர்ராஜ், பொருளாளர் ச.ரவீந்திரன்,போஷகர் இ.குணசிங்கம், உப தலைவர் சா.பிரபாகரன், உபசெயலாளர் ச.சுவேந்திரன், ஆகியோருடன் நிர்வாக சபை உறுப்பின்ர்களாக சு.ஜோதிஸ், ம.நிரோசன், சி.தர்மராஜ்,ஆ. ராஜ்குமார், சி.றஞ்சித்குமார்,தெ.சஜீவன், சி.தர்மபாலா,த.மதன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (ஐ)

# பகிரங்க அறிவித்தல்

கிளிநொச்சி,பெப்.18

கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் வழக்குகளுடன் தொடர்புடைய சான்றுப் பொருள்கள் பாரப்படுத்தப்பட்டுள்ளன.

அதற்கமைவாக பூநகரி வனப்பரிபாலனதிணைக்களத்தின் வட்டார வன அதிகாரியால் (HONDA MATE) இயந்திர இலக்கம் (EN/50 7702446) செசி இலக்கம்) முதலிலக்கம் அழிந்த இறுதி இலக்கம் 2446 ஐ கொண்ட மோட்டார் சைக்கிள் பாரப்படுத்தப்பட்டுள்ளது.

இதனை உரிமை கோருபவர்கள் உரிய ஆவணங்களுடன் அலுவலக நாள்களில் எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு முன்னர் பதிவாளருடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

# வீதிகளுக்கு கிறிஸ்தவ பெயர்; இந்து மாமன்றம் கண்டனம்!

## மதம் கடந்த மக்கள் பிரதிநிதிகளாக செயற்படவேண்டும் என்றும் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், பெப். 18

**ஊர்காவற்றுறை பிரதேச சபைக்கு உட்பட்ட பழைமையான தமிழ் இந்துப் பெயர்களைக் கொண்ட வீதிகளின் பெயர்களை மாற்றுவதற்கு அகில இலங்கை இந்துமாமன்றம் கடும் ஆட்சேபனை தெரிவித்துள்ளது.**

ஆட்சேபனைக் கடிதங்களை அகில இலங்கை இந்துமாமன்றப் பொதுச் செயலாளர் வே. கந்தசாமி, ஊர்காவற்றுறைப்பிரதேசசெயலர், ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத் தவிசாளர், மாகாண ஆளுநர், யாழ்ப்பாண மாவட்டச் செயலர், உள்ளூராட்சி ஆணையாளர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு கடிதம் அனுப்பியுள்ளார் என்று மன்றத்தின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் ஊடகம் ஒன்றில் ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத்தவிசாளரின் ஒப்புகையுடன் பிரசுரிக்கப்பட்டிருந்த, வீதிப் பெயர் மாற்றம் தொடர்பான அறிவித்தல் கண்டுஅதிர்ச்சியடைந்துள்ளோம். வீதிப்பெயர் மாற்றத்துக்கு கடும் ஆட்சேபனை தெரிவிக்கின்றோம்.

இந்துக்கள் ஆண்டாண்டுகாலம் வாழ்ந்த இடங்களில் வந்து இடங்களைக் கைப்பற்றிய மேலைத்தேயத்தவர்கூட செய்யாத ஒரு செயலை ஊர்காவற்றுறைப் பிரதேச சபை ஏதோ பின்புலத்தில் செய்ய முயற்சிக்கின்றது. இது கடும் கண்டனத்துக்குரியது.

தங்கள் ஆட்சி எல்லைக்கு உட்பட்ட ஊர்காவற்றுறை, பருத்தியடைப்பு, கரம்பொன், கரம்பொன் தென்கிழக்கு, நாரந்தனை, நாரந்தனைதெற்கு, புளியங்கூடல் ஆகிய கிராமஅலுவலர் பிரிவுகளில் 21 வீதிகளின் பெயர்கள், சைவ ஆலயங்களின் பெயர்கொண்ட வீதிகளின் பெயர்கள் கிறிஸ்தவ பெயர்களையும் உள்ளடக்கி மாற்றுவதற்கான நடவடிக்கைகளை உடன் நிறுத்துமாறு கோரிக்கை விடுக்கிறோம். தர்மத்துக்கு விரோதமாக தமிழ் இந்துப் பாரம்பரியம்மிக்க இடங்களின் அடையாளங்களை அழிக்கவேண்டாம் என்றும் கேட்டுக்கொள்கின்றோம்.

தங்கள் இத்தகைய பொறுப்பற்ற பணிகள் மதங்களுக்கிடையிலான-மக்களுக்கிடையிலான வெறுப்புணர்வை மேலும் வளர்த்து சகவாழ்வை அச்சுறுத்தலுக்குள்ளாக்கி முரண்பாடுகளை அதிகரிக்கச் செய்யக்கூடியது என்பதை உணர்ந்து மதம் கடந்த மக்கள் பிரதிநிதிகளாகச் செயற்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம்-என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து)

## பாலங்கள் மீண்டும் சீரமைப்பு

யாழ்ப்பாணம், பெப்.18

யாழ். மாவட்டத்தில் கிராமங்களில் உள்ள பாலங்கள் இனங்காணப்பட்டு அவற்றில் சீரமைப்புச் செய்யவுள்ள பாலங்கள் விரைவில் சீரமைக்கப்படவுள்ளன.

இதற்காக வடக்கு மாகாணத்தில் உள்ள 34 உள்ளூராட்சி சபையூடாக புதிதாக இனங்காணப்பட்டுள்ள பாலங்கள் மற்றும் ஏற்கனவே அழிவடைந்து மீள்புனரமைப்புச் செய்யப்படவுள்ள பாலங்களின் விவரங்களைத் தொகுத்து வழங்குமாறு வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி திணைக்கள பிரதிப் பணிப்பாளர் எந்திரி வ.ஜெகானந்தன் கேட்டுள்ளார்.

இது சம்பந்தமாக வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் பிரதிப்பணிப்பாளர் தெரிவிக்கையில், உள்ளூராட்சி எல்லைக்குட்பட்ட பொருத்தப்பாடுடைய பாலங்களையும், மீள்புனரமைப்புச்செய்யப்படவுள்ள பொருத்தமான பாலங்களின் முழு விவரங்களையும் தொகுத்து வழங்குமாறு கோரப்பட்டுள்ளது - என்றார். (ம-ந,50)

## பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

யாழ்ப்பாணம்,பெப்.18

யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரியின்பெற்றோர் சங்கத்துக்கான பொதுக் கூட்டமும்,புதிய நிர்வாகத் தெரிவும் நேற்று முன்தினம் பாடசாலையில் நடைபெற்றன.

நிகழ்வில் கல்லூரி அதிபர் சேகு ராஜிதுவின் தலைமை உரை இடம் பெற்றது. அந்த உரையில் சங்கத்தின் செயற்பாடுகள், பாடசாலையின் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள், பாடசாலையின் தற்போதைய நிலை, கல்விச் செயற்பாடுகள் தொடர்பில் தனது விளக்கத்தை முன்வைத்தார்.

தொடர்ந்து புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது. தலைவர் அதிபர் ஜனாப் எம். சேகுராஜிது,செயலாளர் எஸ்.எம். நியாஸ்,பொருளாளர் என்.எம். நிஸ்வி (ஆசிரியர்), உப செயலாளர் எம்.கே.எம். ஜவ்ஸி ஆகியோருடன் உறுப்பினர்களாக ஜே.எம்.நில்வான் ஹசன்,ஐ. ஜிப்ரி, எம். நிஸ்லின், எஸ்.எம். நாஸர், எம்.எம்.எம். றமீஸ்,ஏ.ஏ. ஆஸாத், எம்.ஆர். நௌசாத், எச்.சுலைஸ்,எம்.எம்.எம். நிபாஹிர், எம். என். சியானா,ஐ.எல். நிம்ரூஸ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (ஐ)

## இந்துப் பெயர்கள் மாற்றம் தொடர்பில் நாளை கூட்டம்

யாழ்ப்பாணம், பெப். 18

வீதிகளின் சைவப் பெயர்களை கிறிஸ்தவ பெயர்களாக மாற்றுவதைத் தடுத்து நிறுத்தும் பொருட்டு சட்ட வரம்புகளுக்கு அமைய பொருத்தமான உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான ஆலோசனைக் கூட்டம் நாளை புதன் கிழமை நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் பலாலி வீதியிலுள்ள இந்து சமயப் பேரவைத் தலைமைச் செயலகத்தில் நாளை மாலை நான்கு மணிக்கு பேரவைத் தலைவர் ஈசான. சி.சக்திகிரீவன் தலைமையில் கூட்டம் நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாணத்தில் பல்வேறு இடங்களில் இந்து மதத்துக்கு எதிரான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று பலரும் எம்மிடம் முறைப்பாடு செய்துள்ளனர். அண்மையில் ஊர்காவற்றுறைப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் சைவாலயங்களின் பெயர்களில் அமைந்துள்ள வீதிகளின் பெயர்ப் பலகைகள் மாற்றப்பட்டுள்ளன என்று அறிவித்துள்ளனர்.

பெயர் மாற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களையும், சைவ நிறுவனங்களையும் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டு முறைப்பாடுகளையும், ஆலோசனைகளையும் வழங்குமாறு பேரவை கேட்டுக்கொண்டுள்ளது. (து)

## காணி அபகரிப்புப் பற்றி இன்று கலந்துரையாடல்

யாழ்ப்பாணம் , பெப். 18

வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் வனவளத் திணைக்கள அதிகாரிகள், வன உயிரிகள் திணைக்கள அதிகாரிகள் மற்றும் மாவட்ட அதிகாரிகளுக்கிடையிலான கலந்துரையாடல் வவுனியா மாவட்டச் செயலகத்தில் இன்று நடைபெறவுள்ளது.

கலந்துரையாடலில் தொடர்புடைய அமைச்சர், பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட அதிகாரிகளும், மாவட்டச் செயலர்கள், பிரதேச செயலர்கள் ஆகியோருடன் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்களும் கலந்துகொள்கின்றனர்.

மூன்று மாவட்டங்களிலும் மக்களின் நிலங்களை திணைக்களங்கள் அபகரிக்கின்றன என்றும், மக்களுக்குச் சொந்தமான நிலங்களை, மக்கள் உறுதிப் பத்திரங்கள் வைத்திருந்தும்கூட திணைக்களங்கள் அபகரிக்கின்றன என்றும் மக்கள் கூறுகின்றனர்.

பொதுத் தேவைகளுக்காகக் காணிகளை விடுவிக்குமாறு காணிப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் மூலம் கோரிக்கை விடுத்தும் காணிகள் விடுவிக்கப்படவில்லை. மாவட்டத்தில் மேய்ச்சல் தரைகள் இல்லை. நீண்டகாலப் பிரச்சினையாக இது உள்ளது.

மூன்று மாவட்டங்களிலும் நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயக் குளங்களை வனவளத் திணைக்களம் அபகரித்து வைத்திருப்பதால் விவசாயிகள் நெருக்கடியை எதிர்கொள்கின்றனர். இவை உள்ளிட்ட விடயங்கள் பற்றிப் பேசுவதற்காக இந்தக் கூட்டம் நடைபெறுகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது. (து-105)

# குடிதண்ணீருக்காக கவனவீர்ப்பு



பொருளாதார அபிவிருத்தி அதிகாரியின் தன்னிச்சையான செயற்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து அக்கரபத்தனை, மன்றாசி உட்லெக் தோட்ட மக்கள் அக்கரபத்தனை தலவாக்கலை வீதியில் உட்லெக் சந்தியில் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் எண்ணக்கருவில் உதயமான, கிராமிய அபிவிருத்தியை அடிப்படையாகக்கொண்ட 'சுபிரி கிராமம்' வேலைத்திட்டத்துக்காக ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவுக்கும் தலா 20 இலட்சம் ரூபா ஒதுக்கப்படும்.

பொருளாதார அபிவிருத்தி அதிகாரிகள் தலைமையில் முன்னெடுக்கப்படும் இவ்வேலைத்திட்டம், பிரதேச செயலரால் கண்காணிக்கப்படும்.

எனினும், குறித்த நிதியில் கிராமத்துக்கு எவ்வாறான அபிவிருத்தியை முன்னெடுக்க வேண்டும் என்பதை தீர்மானிக்கும் அதிகாரம் பிரதேச வாசிகளுக்கே வழங்கப்பட்டுள்ளது.

எனினும், பிரதேச வாசிகளின் தேவை அறியாது, அவர்களின் கோரிக்கைக்குச் செவிமடுக்காது, நுவரெலியா மாவட்ட, அக்கரபத்தனை மன்றாசி பகுதிக்கான பொருளாதார அபிவிருத்தி அதிகாரி தன்னிச்சையாகச் செயற்படுகிறார் என்றும், இதனால் தமக்கு அநீதி இழைக்கப்படுகின்றது எனச் சுட்டிக்காட்டி யுமே உட்லெக் தோட்ட மக்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

'உட்லெக் தோட்டத்தில் 106 குடும்பங்களைச் சேர்ந்த 500 பேர் வாழ்கின்றோம். நாங்கள் தண்ணீரை பெறுவதில் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றோம். எனவே, தண்ணீர் தாங்கியொன்றை அமைக்குமாறும், வீதி அபிவிருத்திக்கு எஞ்சிய தொகையைப் பயன்படுத்துமாறும் கோரினோம். ஆனால், வீதி மட்டுமே அமைக்கப்படும் என்பதில் பொருளாதார அபிவிருத்திகுறியாக இருக்கின்றார். இதனை ஏற்கமுடியாது' என போராட்டக்காரர்கள் தெரிவித்தனர். (ம)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், பெப்.18

யாழ்ப்பாணம், சைவ பரிபாலன சபை நடத்தும் புண்ணிய நாச்சியம்மையார் தினமும், பரிசளிப்பு விழாவும் நாளை புதன் கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் நீராவியடியில் உள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெறவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சைவ பரிபாலன சபையின் தலைவர் இ.வசந்தசேனன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் சுப்பிரமணியம் சுந்தரசிவமும், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் ச. முகுந்தனும் கலந்துகொள்ளவுள்ளனர். (ப)

# சிறு தானியச் செய்கையை சேதமாக்கும் கால்நடைகள்

## நடவடிக்கை எடுக்குமாறு விவசாயிகள் கோரிக்கை



சாவகச்சேரி, பெப்.18

தென்மராட்சி தெற்கு, தனங்களப்பு, மறவன் புலவு, கோவிலாக்கண்டி, கைதடி, நாவற் குழி ஆகிய இடங்களில் சிறுதானிய விதைப்பு தற் போது நடைபெற்று வருகின்றது.

அந்தப் பகுதியில் கட்டுப்பாடு இன்றி மேய்ச்சலில் ஈடுபடும் செம்மறி ஆடு களால் இழப்புக்கள் ஏற்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக கமக்கார அமைப்பு களுக்கு அறிவிக்கப்பட்டும் நடவ டிக்கை எடுக்கப்படவில்லை என்று அந்தப் பகுதிகளைச் சேர்ந்த விவசா யிகள் கூறுகின்றனர்.

செம்மறி ஆடுகள் மேய்ச்சலில் ஈடுப டுவதைக் கண்டு, ஏனையோரும் தங்களது கால்நடைகளை மேய்ச்ச லுக்கு விட்டுள்ளனர் என்றும், அறு வடை மேற்கொள்ளப்படாத வயல் களில் உள்ள பயிர்களை அவை அழிக்கின்றன என்றும் விவசாயிகள் குற்றஞ்சாட்டுகின்றனர். இந்த விட யத்தில் உரிய தரப்பினர் கவனம் செலுத்தி உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-9)

# சட்டவிரோத மணல் அகழ்வை தடுப்பதற்கு முயற்சிப்பேன்

## வடக்கு ஆளுநர் தெரிவிப்பு



முல்லைத்தீவு, பெப். 18

சட்டவிரோதமாக இடம்பெறும் மணல் அகழ்வு நடவடிக்கை களைத் தடுப்பதற்கு முயற்சி களை மேற்கொள்வார் என வடக்கு மாகாண ஆளுநர் பி.எச்.எம்.சாள்ஸ் தெரிவித் தார்.

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு நேற்று பயணத்தை மேற்கொண்ட ஆளுநர், முல் லைத்தீவு மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டார். நிகழ்வின் இறுதியில் விவசாயிகள் பலகோரிக்கைகளை முன்வைத்தனர், முல்லைத்தீவில் பரவலாக இடம்பெறும், சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பிலும் ஆளுநரிடம் சுட்டிக்காட்டப்பட்டது. இந்த மணல் அகழ்வால் விவசாயிகள் பாதிக்கப்படுகின்றமை தொடர்பிலும் அவர்கள் ஆளுநருக்கு நேரடியாகத் தெரியப்படுத்தினர்.

அனைவருடைய கருத்துக்களையும் கேட்டறிந்த ஆளு நர் ஊடகங்களுக்கு கருத்து வழங்கினார்.

"முல்லைத்தீவு மாவட்டத்தில் விவசாயிகளால் முன் வைக்கப்பட்ட கோரிக்கை மண் அகழ்வு ஊடாக அவர் களின் இயற்கை வளங்கள் பாதிக்கப்படுகின்றன என முன்வைத்துள்ளார்கள்.

இது தொடர்பிலான இடங்களை முல்லைத்தீவு மாவட்ட மேலதிக செயலரைப் பார்வையிடும் படியும் எதிர்வரும் தினங்களில் பொலிஸ் உள்ளிட்ட இது சம்பந்தப்பட்ட அனைத்து திணைக்களங்களையும் அழைத்து வடக்கு மாகாணத்தில் நடைபெறுகின்ற சட்டவிரோதமான மண் அகழ்வு போன்றவற்றை தடுப்பதற்கு சகல முயற்சிக ளையும் மேற்கொள்வோம்.

பொதுமக்கள் மணல் அகழ்வு தொடர்பான முறைப்பா டுகளை ஆளுநர் செயலகத்துக்கு அனுப்பிவைக்க முடியும்-என்றார். (ஐ-19)

# மின்தடை

யாழ்ப்பாணம்,பெப்.18

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் நாளை புதன்கிழமை மின் தடைப்படும் என்று அறிவிக் கப்பட்டது.

இதன்படி காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை **யாழ்ப்பாண மாவட்டத்தில்** அல்வாய், நாவலடி,ஸ்ரீலங்கா பாடசாலை, வியாபாரிமூலை, இன்பருட்டி, சுப்பர்மடம், சுப்பர்மடம் மரின்வெல்த் ஐஸ் தொழிற்சாலை, வராத்துப்பளை, புனிதநகர், கற்கோவளம்,தும்பளை, வெளிச்சவீடு, முதலாம் குறுக்குத்தெரு, இரண்டாம் குறுக்குத்தெரு, மூன் றாம் குறுக்குத்தெரு, **மரின்வெல்த் ஐஸ் தொழிற் சாலை**, ஜெயந்தா கைத்தொழிற்சாலை பிறைவேற் லிமிற்றெட் கற்கோவளம் ஆகிய இடங்களிலும் **வவுனியா மாவட்டத்தில்** மதவுவைத்தகுளம் கிராமம், பகல அளுத்வத்த கிராமம், இலுப்பைக்கு ளம், சாம்பல்தோட்டம் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலா ளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார். (ஐ)

# காதலர் தினத்தில் பாடல் வெளியீடு



வவுனியா,பெப்.18

காதலர் தினத்தை சிறப்பிக்கும் வகையில் வவுனியா நெளுக்குளம் பகுதியைச் சேர்ந்த அருள்நாதன் நிலா என்பவர் பாடல் ஒன்றை வெளியிட்டுள்ளார்.

வைரவப்புளியங்குளம் பகுதியில் அமைந்துள்ள தனி யார் கல்லூரி கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் மாலை 4 மணியளவில் இந்த நிகழ்வு நடைபெற்றது. பாடலின் இறுவட்டை பாடல் ஆசிரியர் நிலா வெளி யிட்டு வைத்தார்.

இந்தப் பாடல் நிலா மற்றும் நிரோசன் ஆகியோரின் குரலில் பிரதீபனின் கானொலி உருவாக்கத்தில் தயா ரிக்கப்பட்டுள்ளது. (ஐ-18)

# பொதுக் கூட்டம்

சண்டிலிப்பாய்,பெப்.18

வலி தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத் தால் இந்த வருடத்துக்கான கலாசாரப் பேரவை மற்றும் கலாசார அதிகார சபைகளுக்கான பொதுக்கூட்டம் நாளை புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் உ.யசோதா தலைமையில் நடைபெற வுள்ள கூட்டத்தில் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட கலைஞர்கள், கலை ஆர்வலர்கள் மற்றும் கலை மன்ற உறுப்பினர்கள் அனைவரையும் கலந்து கொள்ளு மாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ஐ)

# பெண்ணை அச்சுறுத்தி நகைகள் கொள்ளை

## புத்தூரில் சம்பவம்

கொடிகாமம், பெப். 18

வீதியில்சென்றபெண்ணைவழிமறித்தகொள்ளையர் கத்தியைக்காட்டிசங்கிலியைப்பறித்துச்சென்றுள்ளனர் என்று அந்தப் பெண் தெரிவிக்கிறார்.

சம்பவம் புத்தூர் வண்ணாத்திப் பாலத்தடியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

நெல்லியடியில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றில் பணிபுரியும் அவர் மட்டுவிலிலுள்ள தனது வீட்டுக்குச் சென்றுகொண்டிருந்தபோது சம்பவம் இடம்பெற்றது என்று தெரிவிக்கப்பட்டது.

கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலியை கொள்ளையர் அறுக்க முற்பட்ட போது வீதியோரமாக மோட்டார் சைக்கிளை நிறுத்தினார் என்றும் அதன்போது கொள்ளையர்கத்தியைக்காட்டிஅச்சுறுத்தினர்என்றும் அதனால்தனதுகழுத்திலிருந்தசங்கிலி, கைச்செயின் என்பனவற்றைக் கழற்றிக் கொடுத்துள்ளார் என்றும் அவற்றுடன்கொள்ளையர் பண்டித்தலைச்சிஅம்மன் கோயில் வீதியால் ஓடி மறைந்தனர் என்றும் தெரி விக்கப்பட்டது. (த-159)

# கதிரைகள் கையளிப்பு

வவுனியா,பெப்.18

வவுனியா புளியங்குளம் இராமனூர் தனிநாயகம் வித் தியாலயத்துக்கு 30 கதிரைகள் தமிழ்விருட்சம் அமைப் பால் அண்மையில் வழங்கப்பட்டன.

நயினாதீவு 4 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த மறைந்த திருமதி உமாபதிப்பிள்ளை சறோஜினியின் ஆண்டு நினைவை முன்னிட்டு இந்த உதவி வழங்கப்பட்டது.

நிகழ்வில் தமிழ்விருட்சம் அமைப்பின் தலைவர் சந்தி ரகுமார் பாடசாலையின் அதிபர், பாடசாலை ஆசிரியர் கள் மற்றும் மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண் டனர். (ஐ-402)



# வீதி சீரமைப்புக்கு அபிவிருத்தி நிதி

## நகரசபைத் தவிசாளர் தெரிவிப்பு

சாவகச்சேரி, பெப். 18

சாவகச்சேரி நகரசபை கடந்த வருடம் அபிவிருத்திக்கென்று ஒதுக்கிய நிதியில் மேலதிகமாகக் காணப்படும் நிதியை வேறு வீதி அபிவிருத்திக்குப் பயன்படுத்த சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

சபையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமர்வில் இது அங்கீகரிக்கப்பட்டது.

கடந்த வருடம் அபிவிருத்தி வேலைக ளுக்கு ஒதுக்கிய நிதியில் செலவழிக்கப்ப டாமல் காணப்படும் நிதியை வேறு வீதிக ளைச் சீரமைக்கப் பயன்படுத்துவது தொடர்பாக தவிசாளர் சபையின் கவனத் துக்குக் கொண்டுவந்தார்.

சபைக்குட்பட்ட பகுதிகளில் சீரமை க்கப் பட்டு முழுமைப்படுத்த ப்படாமல் உள்ள வீதிகளைச் சீரமைக்க வேண்டும் என்று உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்தனர்.


தொழில்நுட்ப அலுவலர் மூலமாக மதிப் பீடு தயாரித்து ஒதுக்கிய நிதிக்குட்பட்ட செலவில் செய்யவேண்டும் என்று தீர்மா னிக்கப்பட்டது என்று தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் தெரிவித்தார். (த-9)

# 3 வருடங்களில் காய்க்கும் உயர்ரக தென்னங்கன்றுகள்

## பயனாளிகளுக்கு வழங்க ஏற்பாடு

**யாழ்ப்பாணம்,பெப்.18**

**யாழ்.மாவட்டத்தில் முதற் தடவையாக 3 வருடங்களில் காய்க்கும் உயர் ரக தென்னம் கன்றுகள் பயனாளிக ளுக்கு வழங்கப்படவுள்ளன என்று யாழ்ப்பாணம் பிராந்திய தென் னைப் பயிர் செய்கை சபையின் முகாமையாளர் தே.வைகுந்தன் தெரிவித்தார்.**



தென்னை மரத்திலிருந்து ஏரா ளமான பயன்களைப் பெற் றுக்கொள்ளலாம். தென்னை மரங்களை உரிய முறையில், சபையின் அறிவுறுத்தலுக்கு ஏற்ப பராமரிப்பதன் மூலம் முழு மையான பயனைப் பெற்றுக் கொள்ள முடியும்.

யாழ். மாவட்டத்தில் முதற்தட வையாக இலவசமாக 20 ஆயி ரம் தென்னம் கன்றுகள் வழங் கப்படவுள்ளன. இந்தத் தென் னம் கன்றுகள் 3 வருடங்களில் பயனைத் தரும். சிறப்பு "கைபி ரிட்" தென்னை இனமாகும். ஒரு பயனாளிக்கு 2 தென்னம் கன்றுகள் வீதம் வழங்கப்படும். உரிய பராமரிப்பு மற்றும் நில வசதிகள் உள்ளவர்கள் பிரதே சத்தில் உள்ள கற்பக தரு சங் கங்களில் பதிவுகளை மேற் கொள்ள முடியும்.

சங்கங்களில் அங்கத்துவப் பதி வுகள் இல்லாதவர்கள் புதிதாக கற்பகதருச் சங்கங்களில் அங் கத்தவராக இணைந்து பயனா ளியாக முடியும். இந்தத் தென் னம் கன்றுகள் பயிரிடப்படும் முறை, பராமரிப்பு முறை என் பன தொடர்பாக பயனாளிக ளுக்குத் தெளிவு படுத்தப்படும். 26 அடி இடைவெளியில் தென் னம் கன்றுகளை நட வேண் டும்.

இதற்கான பதிவுகள் நிறைவ டைந்தவுடன், இரண்டு வாரங்க ளில்பயனாளிகளுக்கு தென்னம் கன்றுகள்வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (சு-7)

# வன்புணர்ந்தாரென உப அஞ்சல் நிலைய அதிபருக்கு மறியல்

பதுளை, பெப். 18

ஒன்பது வயதுடைய சிறுமியை வல் லுறவுக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் உப அஞ்சல் நிலைய அதிபரொருவர் 25ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள் ளார். சிறுமியை அரசினர் மருத்து வமனையில் சேர்த்து அறிக்கை பெற்று, நீதிமன்றில் சமர்ப்பிக்கும் படி நீதிவான், பதுளைப் பொலிஸா ருக்கு உத்தரவிட்டார்.

உப அஞ்சல் நிலையத்துக்கு அரு கில் காணப்பட்ட வீடொன்றிலிருந்த சிறுமியை அழைத்து குற்றம் புரிந் தார் என்று அவர் மீது குற்றஞ்சாட்டப் பட்டுள்ளது.

அது பற்றி சிறுமி தனது பெற்றோ ருக்குக் கூறவே பதுளைப் பொலி ஸில் முறையிடப்பட்டது. (த)

# சாரணர் விருதுக்கான நடைபவனி ஆரம்பம்

சாவகச்சேரி,பெப்.18

ஜனாதிபதி சாரணர் விருதுக்கான மூன்று நாள் 23 கிலோ மீற்றர் நடைபவனியை சாவகச்சேரி டிறி பேக் கல்லூரி மாணவன் சண்மு கம் மதுஷன் நேற்றுக் காலை ஆரம்பித்துள்ளார்.

இவருக்கு உதவியாக மேலும் இரு சாரண மாணவர்கள் இணைந்து நடைபவனியை ஆரம்பித்தனர் கல்லூரி அதிபர் செ.பேரின்பநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ் வில் தென்மராட்சிக் கல்வி வலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் அ.பிரே மதாஸ் கொடியசைத்து நடைபவ னியை ஆரம்பித்து வைத்தார்.

நிகழ்வில் கல்லூரியின் பிரதி அதிபர் திருமதி தே.சுதேஸ்கரன், சாரணர் பொறுப்பாசிரியர் சி.சிவகரன், துணைப் பொறுப்பாசிரியர் ந. கஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நேற்று புறப்பட்ட சாரண மாணவன், கச்சாய் ஊடாக கொடிகாமம் திருநா வுக்கரசு மத்திய கல்லூரியில் தங்கி இன்று செவ்வாய்க்கிழமை அங்கி ருந்து புறப்பட்டு, மீசாலை புத்தூர்ச் சந்தி ஊடாக. மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியால யத்தைச் சென்றடைந்து, நாளை காலை அங்கிருந்து புறப்பட்டு நுணாவில் ஊடாக கல்லூரியை வந்தடைவர் எனத் தெரிவிக்கப்பட் டது. (ஐ-9)

# பெண்களை ஊக்குவிக்க நீர்வள கைத்தொழில்கள்

யாழ்ப்பாணம், பெப். 18




கடற்றொழில் நீரியல்வளத் துறை தொழில் சார்பான விட யங்களில் ஈடுபடும் பெண் களை ஊக்குவிக்கும் நிகழ்ச் சித்திட்டம் நேற்று ஆரம்பிக்கப் பட்டது.

கடல் தொழில் அமைச்சு மற் றும் தேசிய நீர்வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபை ஆகியவற்றின் ஊடாக இந்த நிகழ்ச்சித் திட்டம் யாழ்ப் பாணம் வீரசிங்கம் மண்டபத் தில் ஆரம்பிக்கப்பட்டது.

கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பா ணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பெண்களுக்கு மீன் குஞ்சுகள் வளர்த்தல், கடற்சார் வளங்களைப் பேணுதல் மற் றும் செயற்கை முறையிலான நீர் உயிரின உற்பத்தியின் அவசியம் ஆகியவை தொடர் பில் கருத்துரைகள் வழங்கப்பட் டன.

நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், அமைச்சின் அதிகாரிகள் பிர தேச செயலர்கள், அரச அலுவ லர்கள், பயனாளிகள் பலர் கலந்துகொண்டனர். (து-7)



# பாடசாலைக்கு சமுகமளிக்கவும்

யாழ்ப்பாணம்,பெப்.18

யாழ்ப்பாணம் வேம்படி மக ளிர் உயர்தர பாடசாலையில் கல்வி கற்று 2019 ஆம் ஆண்டு க.பொ.த (உ/த) பரீட்சை எழுதிய மாணவர்க ளில், இரண்டாம் தடவை பாட சாலையூடாக உயர்தர பரீட் சைக்கு விண்ணப்பிக்கவுள்ள மாணவர்களை நாளைமறு தினம் வியாழக்கிழமைக்கு முன்னர் பாடசாலைக்கு சமூக மளிக்குமாறு கேட்டுக்கொள் ளப்பட்டுள்ளனர். (ஐ)

# வரி அறவீடும் விவசாயப் பதிவும்

கைதடி கமநல சேவை கள் நிலைய உத்தியோ கத்தர்களால், 2020 ஆம் ஆண்டுக்கான ஏக் கர் வரி அறவீடும், விவ சாய அடையாள அட்டை பதிவும் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

இன்று செவ்வாய்க்கி ழமை நாவற்குழி விவ சாய சம்மேளனத்துக்கு உட்பட்டவர்களுக்கான பதிவு அறநெறிப்பாடசா லையிலும், நாளை புதன்கிழமை கைதடி நாவற்குழி விவசாய சம் மேளனத்துக்கு உட்பட்ட வர்களுக்கான பதிவு பொதுநோக்கு மண்டபத் திலும், நாளை மறுதி னம் வியாழக்கிழமை கோயிலாக்கண்டி விவ சாய சம்மேளனத்துக்கு உட்பட்டவர்களுக்கான பதிவு செவ்வா சனசமூக நிலையத்திலும், எதிர்வ ரும் 24 ஆம் திகதி திங் கட்கிழமை தொடக்கம் 26 ஆம் திகதி புதன்கிழமை வரை மறவன்புலோ விவசாய சம்மேளனத் துக்கு உட்பட்டவர்களுக் கானபதிவு பொதுநோக்கு மண்டபத்திலும், எதிர்வ ரும் 27 ஆம் திகதி வியா ழக்கிழமை, மறுநாள் வெள்ளிக்கிழமை, எதிர்வ ரும் மார்ச் மாதம் 2 ஆம் திகதி திங்கட்கிழமை ஆகிய தினங்களில் தனங்களப்பு விவசாய சம்மேளனத்துக்கு உட் பட்டவர்களுக்கான பதிவு பொது நோக்கு மண்டபத் திலும், எதிர்வரும் மார்ச் மாதம் 3 ஆம் திகதி செவ் வாய்க்கிழமை தொடக் கம் 4 ஆம் திகதி புதன் கிழமை வரை கைதடி வடக்கு, கிழக்கு, தெற்கு விவசாய சம்மேளனத் துக்கு உட்பட்டவர்களுக் கான பதிவு கைதடி கம நல சேவைகள் நிலை யத்திலும் நடைபெறும்.

பதிவுகளை மேற்கொள் ளும் விவசாயிகள் கடந்த வருட ஏக்கர் வரி பற்றுச் சீட்டு அல்லது உறுதிப் பிரதி, 2020 ஆம் ஆண்டுக்கான அங்கத் துவப் பணப்பற்றுச்சீட்டு, விவசாய அடையாள அட்டைக்கு கடவுச்சீட்டு அளவுக்குரிய புகைப் படம், குடும்ப அட்டை, 250 ரூபா சம்மேளன பற்றுச் சீட்டு, கமநல வங்கிப்புத் தகம், வயற்காணிப்பதிவு பற்றுச்சீட்டு என்பவற்று டன் உரிய இடங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும் என்று அறிவிக் கப்பட்டுள்ளது. (க)





# மடு பிரதேச செயலரின் இடமாற்றம் நிறுத்தம்

மன்னார், பெப். 18
மன்னார் மடுப் பிரதேச செயலரின் இடமாற்றம் நிறுத் தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய அரசு பொறுப்பேற்றபின்னர் வடக்கு மாகாணத் திலுள்ள மாவட்டச் செயலர், பிரதேச செயலர்களை இடமாற்றம் செய்யும் நடவடிக்கைகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

அந்த வகையில், மன்னார் மடு பிரதேச செயலாளராக கடமையாற்றிய பி.ஜெயகரனை கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகத்துக்கு இடமாற்றம் செய்வதற்கு நட வடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அது பற்றிய அறிவித்த லும் விடுக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில், இடமாற் றம் நிறுத்தப்பட்டுள்ளது.

அதற்கான காரணத்தை வினவியபோது, பிரதேச செய லர் ஜெயகரன் இடமாற்றலாகினால் மடு பிரதேச செய லகத்துக்குச் செயலராகக் கடமையாற்ற தகுதி வாய்ந்த அதிகாரிகள் எவரும் இல்லை என்று தகவல்கள் தெரி விக்கின்றன. (த-213)

# சின்னம் சூட்டும் நிகழ்வு



கிளிநொச்சி,பெப்.18
முல்லைத்தீவு குமுழமுனை அரசினர் தமிழ் கல வன் பாடசாலையின் மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு நேற்று வித்தியாலய மைதா னத்தில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் ம.ரகுதீபன் தலைமையில் நடை பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக முழங்காவில் பங்குத்தந்தை அருட்பணியாளர் பத்திநாதர் அடிக ளார் கலந்துகொண்டார்.

நிகழ்வில் 20 மாணவத் தலைவர்களுக்கு சின்னங் கள் சூட்டப்பட்டன. (ஐ-222)

## வவுனியா வளாகம்

# இனி பல்கலையாக மாறும் ஏற்பாடுகள் யாவும் பூர்த்தி

## மஸ்தான் எம்.பி. தெரிவிப்பு



வவுனியா, பெப். 18
வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டால் யாழ்ப் பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாகம் பல் கலைக் கழகமாக மாறிவிடும். ஏனைய அனைத்துப் பணி களும் நிறைவு ற்றுள்ளன. அமைச்சரவையும் அனுமதித் துள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே. மஸ்தான் தெரிவித்தார்.

அந்த வளாகத்தில் பாரம்பரிய உணவகமான அம்மாச்சி உணவ கத்தை நேற்றுத் திறந்து வைத்து உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

வவுனியா பல்கலைக்கழகம் தொடர் பாக வன்னி மக்களுக்கு விரைவில் ஒரு நற்செய்தி கிடைக்கவுள்ளது. வளாகத்தைப் பல்கலைக்கழகமாக மாற்றுவதற்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது. இது தொடர்பாக இனி வர்த்தமானியில் அறிவிக்கவேண்டியது மட்டுமே.


அரசுகள் மாறும்போது ஆட்சி அதி காரம் மாறும்போது இந்தத் திட்டங் கள் கிடப்பில் போடப்படும். ஆனால் அவ்வாறு இல்லாமல் இந்த ஆட்சியிலும் இது தொடர்பில் தொடர் நடவடிக்கைகள் இடம்பெ றும். சுதந்திரக் கட்சி மற்றும் பொது ஜன பெரமுன ஆகிய இரண்டும் எதிர்வரும் தேர்தலில் இணைந்தே போட்டியிடவுள்ளன. அதற்கான உயர்மட்ட கலந்துரையாடல்கள் தற்போது இடம்பெற்றுவருகின் றன. வருகின்ற தேர்தலில் வன்னி மாவட்டத்தில் பொதுஜன பெரமுன வின் ஊடாகவே போட்டியிடுவேன். என்று மேலும் அவர் தெரிவித்தார். (த-110)

# இணுவிலில் பெருஞ்சிவனிரவு

யாழ்ப்பாணம்,பெப்.18
யாழ்ப்பாணம், இணுவில் அருள் மிகு ஞான லிங்கேச்சுரர் திருக்கோவிலில் பெருஞ்சிவனிரவு எனும், மகா சிவராத்திரி தின நிகழ்வுகள் சிறப் பாக இடம்பெறவுள்ளன.

ஞானலிங்கேச்சுரர் திருக்கோவிலில் வரும் வெள் ளிக்கிழமை முழுவதும் அடியவர்கள் தங்கள் கரங் களால் பெருமானுக்கு திருமஞ்சனம் செய்து வழிபாடு ஆற்றலாம். இரண்டாம் கால வழிபாட்டைத் தொடர்ந்து ஆபிரத்துஎட்டுசிவனடியார்கள் பாற்செம்பு கொண்டுதிருமஞ்சனம் ஆற்றலாம், நான்கு காலங் களிலும் நான்மை வகை வழிபாடுகள் இடம் பெற்று, நால்வகை அருளமுது வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் வாத் திய இசை அரங்கம், பரதநாட்டியம், வீணை யிசை அரங்கம், தெய்வீகஇசை அரங்கம், இசை நாடகம் ஆகிய நிகழ்வுகளும் இடம்பெற வுள்ள என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ப)

# வவுனியா வளாகத்தில் அம்மாச்சி உணவகம்



வவுனியா,பெப்.18
யாழ்ப்பாணப் பலகக்லைகழக வவுனியா வளாகத் தில் பாரம்பரிய உணவகமான அம்மாச்சி உணவகம் நேற்றுக் காலை திறந்துவைக்கப்பட்டது. பிரதிமாகாண விவசாய பணிப்பாளர் சகிலா பாணு தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் உணவகத்தைத் திறந்து வைத்தார்.

சுமார் 50 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இந்த உணவகத்தால் வளாகத்தில் கல்வி பயிலும் ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட மாணவர்களும், அதனை அண்டிய கிராமங்களை சேர்ந்த பொதுமக் களும் பயனடைவர்.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினருடன் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஜி.ரி.லிங்க நாதன்,வவுனியா மாவட்டச் செயலர் சமன் பந்துல சேன,வளாக முதல்வர் ரி.மங்களேஸ்வரன் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (ஐ-110)

# வீரசிங்கம் மத்தியின் மெய்வன்மை



யாழ்ப்பாணம், பெப். 18
யாழ்ப்பாணம் மீசாலை வீரசிங்கம் மத் திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி கடந்த சனிக் கிழமை பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் த.அம்பலவாணர் தலை[illegible]வில் நடைபெற்ற போட்டியில் பி[illegible]ராக யாழ்ப்பாண மாவட்ட மேலதிக செயலர் (காணி அபி விருத்தி) சு. முரளீதரன், சிறப்பு விருந்தி னராக சாவகச்சேரி கோட்டக்கல்விப் பணிப்பாளர் வ. நடராசா ஆகியோர் கலந்துகொண்டனர்.

இங்கு புலியின் முகத்தை ஒத்த வடிவத் தில் அலங்கரிக்கப்பட்ட இல்லமானது முதலிடத்தைப் பெற்றதுடன், பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளது. (ஐ)

# பெருந்திருவிழா

யாழ்ப்பாணம், பெப். 18
யாழ்ப்பாணம், கீரிமலை திருவருள்மிகு ஸ்ரீ மகா முத்துமாரி அம்பாளின் வருடாந்தப் பெருந்திரு விழா வரும் 26ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. காலை 11.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொ டர்ந்து 15 நாள்கள் இடம்பெ றும் இந்தப் பெருந்திரு விழாவில் 10ஆம் நாள் சம்பறத் திருவிழாவும், 11ஆம் நாள் தேர்த் திருவிழாவும், 12ஆம் நாள் தீ ர்த்தோற்சவ மும், 13ஆம் நாள் பூங்கா வனத் திருவிழா வும், 14ஆம் நாள் கப் பல் திருவிழாவும் நடை பெறும். (ப)

# வண்ணை வைத்தீஸ்வரர் வருடாந்த பெருந்திருவிழா

யாழ்ப்பாணம், பெப். 18
யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை, வண்ணை வைத்தீஸ்வரன் பரிவாரத் திருக்கோவிலின் வருடாந் தப் பெருந் திருவிழா வரும் 23ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 15 தினங்கள் திரு விழா இடம்பெற்று பங்குனி மாதம் 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்தோற்சவத்துடன் நிறைவு பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது (ப)

# மணல் கடத்திய நால்வருக்கு ரூ.மூன்றரை லட்சம் தண்டம்



கிளிநொச்சி, பெப். 18
அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிய நான்கு சாரதிகளுக்கு 3லட்சத்து 50 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது கிளிநொச்சி நீதிமன்று.

கிளிநொச்சி மாவட்டத்தின் பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிய இரு டிப்பர் வாகனங்களும் இரு உழவு இயந்திரங்களும் கடந்த வியாழக்கிழமை கைப்பற்றப்பட்டன. அவற்றின் சாரதிகளுக்கு எதிராக மறுநாள் நீதிமன்றில் குற்றப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

சாரதிகள் குற்றங்களை ஏற்றுக்கொண்டனர்.

அதன்படி டிப்பர் வாகன சாரதிக்கு இரண்டு லட்சம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. மூன்று குற்றங்களுக்காக ஒரு லட்சத்து 50ஆயிரம் ரூபா வீதமும் நான்காவது முறைக்கு 50 ஆயிரம் ரூபாவுமாக 2 லட்சம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

அதேபோல் உழவு இயந்திர சாரதிகள் இருவருக்கும் மற்றைய டிப்பர் வாகன சாரதிக்கும் தலா 50ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது கிளிநொச்சி நீதிமன்று. (கு-6)

# சவேந்திரவை அமெரிக்கா இலக்கு வைத்தது எதற்கு?

## கம்மன்பில கூறும் புது விளக்கம்



கொழும்பு, பெப். 18
அழிக்கவே முடியாத அமைப்பு என அமெரிக்காவால் அறிவிக்கப்பட்ட புலிகள் அமைப்பை இலங்கை இராணுவம் தோற்கடித்ததன் காரணமாகவே, போருக்கு பெரும் பங்களிப்பை வழங்கிய இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவுக்கு எதிராக அமெரிக்கா பயணத் தடை விதித்துள்ளது என்று பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

'முன்கூட்டியே திட்டமிட்ட அடிப்படையில் வேண்டுமென்றே தயாரிக்கப்பட்ட தருஷ்மன் அறிக்கையை அடிப்படையாகக்கொண்டே இலங்கை இராணுவத் தளபதிக்கு எதிராக அமெரிக்காவால் பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளது. சாட்சியங்களோ அல்லது உறுதியான தகவல்களோ இல்லை.

இந்த நிலையில் அமெரிக்கா வருவதற்கு யார் முயற்சித்தது. அங்கு வரவேண்டிய தேவை தனக்கு இல்லை என இராணுவத் தளபதி சிறப்பானதொரு அறிவிப்பைவிடுத்துள்ளார். அதனை நாமும் வரவேற்கின்றோம்.

போர்க்குற்றம் இழைத்துள்ளார் என எந்த நீதிமன்றத்தால் சவேந்திர சில்வா குற்றவாளியாக அறிவிக்கப்பட்டுள்ளார். அதேபோல் இராணுவத் தளபதிக்கு மட்டும் தனிப்பட்ட ரீதியில் தடை விதிப்பதற்கு அவர் பிரத்தியேகமாக செய்த போர்க்குற்றம் என்ன? இக்கேள்விகளுக்கு அமெரிக்கா பதில்களை வழங்க வேண்டும்.

அமெரிக்காவால் அழிக்கவே முடியாது என அறிவிக்கப்பட்ட புலிகள் அமைப்புக்கு சமாதி கட்டுவதற்கான போருக்கு சவேந்திர சில்வாவும் பெரும் பங்களிப்பை வழங்கினார். அமெரிக்காவில் முடியாது என கூறப்பட்ட ஒரு விடயத்தை செய்துகாட்டியதால் அமெரிக்காவுக்கு களங்கம் ஏற்பட்டது. இதுவே சவேந்திர சில்வா இலக்குவைக்கப்பட காரணமாக இருக்கலாம்' - என்றார். (ம-44)

# வெளிநாட்டு தம்பதிகளை பதம்பார்த்தன குளவிகள்

## தீவிர சிகிச்சையில் அவர்கள்



கொழும்பு, பெப். 18
வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளான இரு தம்பதிகள் குளவிகளால் தாக்கப்பட்டு தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப் பட்டனர். ஆஸ்திரேலியா வைச் சேர்ந்த தம்பதிகளே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர். எல்ல நகரின் புதிய பாலத்திற்கு அருகாமையில் நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றது. எல்ல பாலத்தைப் பார்வையிட்டுக் கொண்டிருந்த வேளையிலேயே அங்கிருந்த குளவிக்கூடு கலைந்து குளவிகள் இவர்களைத் தாக்கின என்று பொலிஸார் தெரிவித்தனர். (ம)

# சிறப்பாக நடைபெற்ற வயல் விழா நிகழ்வு



வவுனியா,பெப்.18
வவுனியா அட்டமஸ்கட பகுதியில் வயல்விழா நிகழ்வு நேற்று சிறப்பாக நடைபெற்றது.

அட்டமஸ்கட விகாரையின் விகாராதிபதி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வவுனியா மாவட்ட செயலர் சமன் பந்துலசேன, வவுனியா தெற்கு சிங்கள பிரதேச செயலாளர் ஜானக்க, நகரசபை உறுப்பினர் ரி.கே.ராஜலிங்கம், பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் சகிலா பானு, விவசாயிகள் உட்பட பலர் கலந்து கொண்டு அறுவடை நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர். (ஐ-110)

# மாணவர்கள் பலர் மருத்துவமனையில்

மாணவர்களின் உடல் நிலையில் திடீரென்று மாற்றமேற்பட்டு, உடம்பெங்கும் அரிப்பு ஏற்பட்டு, நோய்வாய்ப்பட்டமையால் அவர்கள் கந்தகெட்டிய அரசினர் மருத்துவமனையில் நேற்றுச் சேர்க்கப்பட்டு சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

கந்தகெட்டியபகுதியின் உல்பத்த கனிஷ்ட வித்தியாலயத்தில் மூன்று மாணவிகளும் 12 மாணவர்களுமாக 15 பேருக்கே இந்த நிலை ஏற்பட்டது. மேற்படி வித்தியாலயத்தின் ஒரு வகுப்பறை நீண்ட நாள்களாக மூடப்பட்டிருந்தது. நேற்று அது சுத்தம் செய்யப்பட்டு வகுப்புகள் இடம்பெற்றன. இதன்போதே மேற்படி அசம்பாவிதம் ஏற்பட்டது. (ம)

# மரபுரிமைகளைத் தேடி சனியன்று கண்காட்சி

யாழ்ப்பாணம், பெப்.18
"மரபுரிமைகளைத் தேடி" எனும் தொனிப்பொருளில் இடம்பெறும், நூலக நிறுவன ஆவணப்படுத்தல், ஓலைச்சுவடிகள் கண்காட்சியும், கலந்துரையாடல்களும், வரும் 22ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

இந்த நிகழ்வுகள் காலை 10 மணிமுதல் மாலை 4.30 மணிவரை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி நூற்றாண்டு மரபுரிமை பிரார்த்தனை மண்டப மேல்மாடியில் இடம்பெறவுள்ளன. சனிக்கிழமை, காலை 10 மணிமுதல் 11.30 மணிவரை ஆரம்ப நிகழ்வுகள் இடம்பெறும். இதன்போது கண்காட்சித் தொடக்கமும், ஆவணப்படுத்தல்களுக்கான மதிப்பளிப்பும் இடம்பெறும். பகல் 1.30 மணி முதல் 3.30 மணிவரை கலந்துரையாடல் இடம்பெறும். மறைந்த ஈழத்து ஆவணங்களை நோக்கி எனும் தொனிப்பொருளில் அந்தக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வரும் 23ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பகல் 1.30 மணி முதல், 3.30 மணிவரை கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. மறைந்து செல்லும் மரபுரிமைகளை ஆவணப்படுத்தல் எனும் தொனிப்பொருளில் அந்தக் கலந்துரையாடல் திட்டமிடப் பட்டுள்ளது என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ப)

# ஜிம்பிறவுண் ஞாபகார்த்த மண்டபம் ஆயரால் திறப்பு

கொழும்புத்துறை, பெப். 18
அல்லைப்பிட்டி புனித பிலிப்பு நேரியார் ஆலய வளாகத்தில் அமைக்கப்பட்ட ஜிம்பிறவுண் அடிகளார் ஞாபகார்த்த மண்டபம் கடந்த வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை புதிய மண்டபத்தை திறந்து வைத்தார். மக்களுக்கான மனிதாபிமானப் பணிகளை முன்னெடுக்க நெருக்கடியான சூழலில் அந்தப் பகுதிக்குச் சென்றவேளை காணாமலாக்கப்பட்ட ஜிம்பிறவுண் அடிகளாரின் நினைவாக அமைக்கப்பட்ட கட்டடத்துக்கான நிதியுதவியாக 10 லட்சம் ரூபாவை நாடாளுமன்ற உறுப்பினர் ச.சிறீதரன் ஒதுக்கியிருந்தார். நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் ச.சிறிதரன் வேலணைபிரதேச சபை உறுப்பினர்கள் பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டனர். (ம-135)

# விளையாட்டு நிகழ்வு

கைதடி மக்கள் நலன் பேணும் நட்புறவுக் கழகத்துடன் இணைந்த சனசமூக நிலையங்களின் முன்பள்ளி விளையாட்டு நிகழ்வு நாளை புதன்கிழமை 2 மணிக்கு கைதடி மேற்கு சரஸ்வதி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. (ஐ-288)

# திருக்கணித சனிப்பெயர்ச்சி பலன்கள்

## மீனம்



மீன ராசிக்காரர்களுக்கு ஒரு வசந்த காலமாக இந்த சனிப் பெயர்ச்சி அமையப்போகிறது. பொதுவாக, பாவ கிரகங்கள் 3, 6, 11ம் இடங்களில் வரும்போதுதான் சனி லாபத்தை ஒருவருக்கு வாரி வழங்குவார். சனி பகவான் உங்களுக்கு லாபஸ்தானத்தில் அதாவது 11ம் இடத்துக்கு வருகிறார். அதனால், உங்களுக்குப் பொருள், தனலாபம், உடல் ஆரோக்கியம், மனத்தெளிவு இவற்றையெல்லாம் வழங்குவார்.

சனி பகவான் ஆட்சி நிலையுடன் வலிமையாக இருக்கின்றமையால், இன்னும் மூன்று ஆண்டுகளுக்கு நல்ல தன லாபத்தை வழங்குவார். மீனராசிக்காரர்களுக்குப் பொற்காலத்தின் கதவுகள் திறக்கப் போகின்றன என்றால் அது மிகையல்ல.

ராசிநாதன் குரு பகவான் தனுசு ராசியில், சொந்த வீட்டில் ஆட்சி பெற்று இருக்கிறார். இதனால்தான் கொடுக்கின்ற பெரிய பலனையும் அதைப் பெறுவதற்குரிய பக்குவத்தையும் உங்களுக்கு வழங்குவார். இன்னும் ஓராண்டுக்குப் பிறகு அவர் 11ம் இடமான லாபஸ்தானத்துக்கு வந்து அமர்கிறார். அப்போது சுபத்துவ சூட்சுமப் பலனாக மேலும் பல நல்ல பலன்களை மீன ராசிக்கு வழங்குவார்.

மீன ராசிக்காரர்கள் தொட்டது துலங்கும் சனிப்பெயர்ச்சியாகவும் எதையும் சாதிக்கும் வல்லமையைத் தரக்கூடியதாகவும் இந்தப் பெயர்ச்சி அமையும். உங்களின் பிறந்த ஜாதகம் வலிமையானதாகவும் அதற்குரிய தசா புத்திகள் நடப்பதாக இருந்தால், உங்களின் வாழ்க்கைக்குத் தேவையான அத்தனை செல்வங்களையும் இப்போது ஈட்டுவீர்கள்.

எதிலும் தயங்காமல் ஈடுபட்டு வெற்றி கொள்ளுங்கள். இதுவரை இருந்த தடைகள், தாமதங்கள் யாவும் விலகும். கலைத்துறையைச் சார்ந்தவர், தொழில்துறையினர், வியாபாரத் துறையினர், சமூகத்தின் கீழ்த்தட்டு நிலையில் இருப்போர் என அனைத்துத் தரப்பினருக்கும் இந்தச் சனிப்பெயர்ச்சி மேலான பலன்களை வழங்கும்.



மீன ராசிக்காரர்கள் தன்னம்பிக்கையோடும் துணிச்சலுடனும் மன உறுதியோடும் எந்தச் செயலிலும் ஈடுபட்டு வெற்றி பெறக்கூடிய ஒரு காலகட்டம். மனதிலிருக்கும் தயக்கத்தையும் பயத்தையும் விட்டொழித்துவிட்டு எல்லாம் வல்ல பரம்பொருளின் மீது உங்களை ஒப்படைத்து முயற்சி செய்தீர்களென்றால், உங்களுக்குப் புகழின் உச்சிக்குச் செல்லக்கூடிய வாய்ப்பு அமையும். அதற்காக 'எல்லா யோகமும் நமக்கு இருக்கிறது', என்று வீட்டுப் பிள்ளையாக நீங்கள் இருந்தீர்களென்றால், அப்போது எந்த யோகமும் உங்களுக்கு வேலை செய்யாது. உங்களின் உழைப்பைவிட அதிர்ஷ்டமும் இணைந்து கூடுதலான பலன்கள் இப்போது கிடைக்கும்.

### எதையும் சாதிக்கும் வல்லமையைத் தரும்

சுபச்செலவும் பணவரவும் பெறப்போகும் மீன ராசியினரின் திருக்கணித சனிப்பெயர்ச்சி பலன்கள்.


குறிப்பாகப் பெண்களுக்கு, இவ்வளவு காலமாகக் கல்வி, கேள்விகளிலும் வேலைவாய்ப்பிலும் ஒதுங்கியிருந்த நிலை இப்போது மாறிவிடும். அதற்கு இந்த சனிப்பெயர்ச்சி உறுதுணை அளிக்கும் விதமாக இருக்கும்.

25 வயது முதல் 30 வயது வரை உள்ளவர்களுக்கு எதிர்காலம் எப்படி இருக்கும், வாழ்க்கைத் துணை எப்படி இருப்பார் என்ற பயமெல்லாம் நீங்கி உங்களுக்குச் சாதகமாக மனதுக்குப் பிடித்தவிதமாக அமைவார். திருமண விஷயத்தில் தாய் தந்தைக்கு மனம் மகிழ்ச்சி அடையும் வண்ணம் நடந்துகொள்வீர்கள்.

ஒரு வீட்டில் மீன ராசிக்காரர் ஒருவர் இருந்தாலே அந்த வீட்டில் சுபிட்சம் நிலவக்கூடிய அளவு இந்த சனிப்பெயர்ச்சி பலன்கள் இருக்கும். மீன ராசிக்காரர்கள் உழைப்பையும் அறிவையும் ஆற்றலையும் முழுமூச்சாகச் செலுத்தி செயல்பட்டால், இம்முறை வானம் வசப்படும். வாழ்க்கையின் முன்னேற்றப் பாதைக்கு இருந்த தடைகள், தாமதங்கள் யாவும் இப்போது விலகும். மீன ராசிக்காரர்கள் சகல விஷயத்திலும் மேன்மையாக இருக்கக் கூடிய ஒரு காலகட்டம் இது. உங்களின் சொந்த உழைப்பை மட்டுமே நீங்கள் முதலீடாக்கி முன்னேறுவீர்கள்.

4 ஆம் இடத்திலிருக்கும் ராகு, உங்களுக்குச் சில தொழில்களைக் கொடுத்திருந்தாலும், அவர் செப்டெம்பர் மாதத்தில் மூன்றாம் இடத்துக்கு வரப்போகிறார். அப்படி வரும்போது மேலும் சிறப்பான பலன்கள் உங்களுக்குக் கிடைக்கும்.

**திருக்கணிதப்படி கடந்த 24.1.2020 சனிப்பெயர்ச்சி நடந்துள்ளது. வாக்கிய பஞ்சாங்கப்படி 26 டிசெம்பர் 2020 அன்றே சனிப்பெயர்ச்சி நடைபெறும் எனக் கூறப்பட்டுள்ளது**



தினம் ஒரு சிந்தனை

## எதற்காக ஒரு “குறிக்கோள்”?

வாழ்க்கையைப் பல்வேறு விதங்களில் துன்பமாக உணர்வதால்தான், மனிதர்கள் வாழ்க்கையின் குறிக்கோள்தான் என்ன என்று கேட்கிறார்கள். இதெல்லாம் தேவைதானா என்ற சந்தேகம் வந்துவிடுகிறது. வாழ்க்கையை முழுமையாக அனுபவித்து வாழ்ந்து வந்திருந்தால், வாழ்க்கையின் குறிக்கோளைப் பற்றி நினைக்கமாட்டீர்கள். ஏனெனில், வாழ்க்கை என்பதே உங்களை முழுமையாக ஆக்கிரமித்துக்கொள்ளும் வகையிலான பிரம்மாண்டமான ஒன்றுதான். உங்களுக்கு வேறு ஒரு இலட்சியம் தேவை இல்லை. எல்லா எல்லைகளையும், எல்லாக் கட்டுப்பாடுகளையும் கடந்து, நான் யார்? இந்த வாழ்க்கை எதற்காக? என்பதைப்பற்றி உணர்வதுதான் வாழ்க்கையின் இறுதி இலட்சியம். இதுவே ஆன்மிகச் செயல்முறை. இதைத்தான் அனைவருமே செய்கின்றனர். ஆனால், தங்களுக்குத் தெரிந்த வழிகளில் வெவ்வேறு விதமாகச் செய்கின்றனர்.

பணத்தைப் பற்றி அறிந்திருந்தால், அதை இன்னும் சிறிது அதிகமாகச் சம்பாதிக்க நினைக்கின்றனர். அதிகாரம் இருந்தால், மேலும் அதிக அதிகாரம் பெற நினைக்கின்றனர். எதை நன்றாக அறிவார்களோ, அதில் தற்போது இருப்பதைவிட மேலும் சிறிது அதிகம் பெற முயற்சிக்கின்றனர். அப்படியானால், ஒவ்வொருவருக்குமே ஆவல் இருக்கிறது. இந்த ஆவல் எந்நிலையிலும் நின்று போகாது. இது விரிவடைய வேண்டும் என்பதற்கான முடிவில்லாத ஏக்கம். எல்லையில்லாத நிலைக்குப் போக உங்களை அறியாமலேயே முயற்சிக்கிறீர்கள். அதுதான் ஆன்மிக இலட்சியம். ஆன்மிக இலட்சியம் என்பதே எல்லையில்லாத நிலையை அடைவதுதான். அந்த எல்லையில்லாத நிலையை அடைய இரண்டே வாய்ப்புகள்தான். ஒன்று, விழிப்பு உணர்வுடன் அடையலாம் அல்லது விழிப்பு உணர்வில்லாமல் அடையலாம். அந்த எல்லையில்லாத நிலையை அடைய 1, 2, 3, 4 என்று எண்ணிக்கொண்டே சென்றால், அங்கு சென்றடைய முடியுமா? ஆனால் நீங்கள் விழிப்பு உணர்வில்லாமல் அதை அடைய நினைக்கும்போது இப்படித்தான் எண்ணிக்கொண்டே செல்கிறீர்கள். இப்படிச் செல்லும்போது ஒரு காலத்திலும் நீங்கள் அங்கு சென்றடைய முடியாது.

## நாளை

**19.02.2020**
புதன்கிழமை

**விகாரி - மாசி 7**

திதி: ஏகாதசி மா.06.07
நட்சத்திரம்– மூலம் மு.ப. 9.17



ஏகாதசி விரதம்

**ராகுகாலம்- 12.32 - 02.02 வரை**
**சுப நேரம்- 05.02 -06.32 வரை**
**எமகண்டம்- 08.02 - 09.32 வரை**

## இலங்கை...

கொழும்பு வந்துள்ள அமெரிக்க காங்கிரஸ் சபை உறுப்பினரும் ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியங்களின் வெளிவிவகார உபகுழுவின் தலைவருமான அமி பேரா தலைமையிலான குழுவினர் நேற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனைச் சந்தித்துக் கலந்துரையாடினர். இதன்போதே அமி பேரா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பின் ஆரம்பத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் இலங்கையின் தற்டோதைய அரசியல் நிலவரம் குறித்து மேற்படி குழுவினரிடம் தெளிவுபடுத்தினார்கள்.

தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கில் கடந்த அரசால் புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. ஆனால், தற்போதைய அரசு வேறுவிதமான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது. பெரும்பான்மை மக்கள் அதிகாரப் பரவலாக்கத்துக்கு அங்கீகாரம் அளிக்கவில்லை எனவும், அத்தகைய சந்தர்ப்பத்தில் மாற்று வழிகளை யோசிக்க வேண்டும் எனவும் உண்மைக்குப் புறம்பான அறிக்கைகளை தற்போதைய அரசு வெளியிட்டு வருகின்றது.

இலங்கையில் தொடர்ச்சியாக ஆட்சிக்கு வந்த அரசுகள் தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயம் தொடர்பில் பல்வேறு வாக்குறுதிகளை வழங்கியுள்ளன. அவை அனைத்தும் பதியப்பட்டவையாகவே உள்ளன. எனவே இத்தகைய நிலையில் சர்வதேச சமூகத்துக்கு வழங்கிய வாக்குறுதிகளை இலங்கை அரசு நிறைவேற்றுவதை உறுதி செய்ய வேண்டும்என்றுதமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் சுட்டிக்காட்டினார்.

இந்த வாக்குறுதிகள் அனைத்தும் தமிழீழ விடுதலைப்புலிகளின் காலத்தில் கொடுக்கப்பட்டவை எனவும், தற்போது தமிழீழ விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்டுவிட்டார்கள் எனவும் காரணம் கூறி இலங்கை அரசு பின்வாங்க முடியாது. வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமல் இருக்க முடியாது.

உலகின் பல்வேறு பகுதிகளில் உள்ளவாறு ஓர் அதிகாரப் பரவலாக்கத்தின் மூலமான அரசியல் தீர்வொன்றை நாம் எதிர்பார்க்கின்றோம்.

இலங்கை எமது நாடு. இங்கே சம உரிமையுள்ள பிரஜைகளாக நாம் மதிக்கப்பட வேண்டும். அண்மையில் இலங்கைப் பிரதமர் மஹிந்த ராஜபக்சவுடனான சந்திப்பில் இந்தியப் பிரமர் நரேந்திர மோடி இலங்கையில் தமிழ் மக்கள் நீதியுடனும் சமத்துவத்துடனும் அமைதியுடனும் வாழ்வதற்கான சூழல் அமைய வேண்டும் என்பதை வலியுறுத்தி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

நியாயமுள்ள அரசியல் தீர்வொன்றை அடைய முடியாதுபோனால் அது பாரிய பின்விளைவுகளைக் கொண்டுவரும். தமிழ்த் தலைவர்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை சிங்களத் தலைவர்கள் மதிக்காததன்விளைவேதமிழீழவிடுதலைப்புலிகளின் உருவாக்கத்துக்குக் காரணம்.

சர்வதேச சமூகத்தின் குரல் இலங்கை விடயம் தொடர்பில் பல்வேறு மட்டங்களில் ஒலிக்க வேண்டும். தமிழ் மக்களுக்கான ஓர் அரசியல் தீர்வு எட்டப்படும் பணியில் சர்வதேசத்தின் பங்களிப்பு அத்தியாவசியமானது என்றும் இரா.சம்பந்தன் சந்திப்பில் குறிப்பிட்டுள்ளார்.

**சந்திப்பில் கருத்துத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான** எம்.ஏ.சுமந்திரன், 2012ஆம் ஆண்டு அமெரிக்க ஐக்கிய இராஜ்ஜியம் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் முன்வைத்த தீர்மானத்தை இலங்கை அரசு நடைமுறைப்படுத்துவது மிகவும் அவசியம்.

நிலையான அரசியல் தீர்வு மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றை நிலைநாட்ட வேண்டுமெனில் ஐ.நா. தீர்மானத்தில் உள்ள விடயங்கள் நடைமுறைப்படுத்த வேண்டும். அதேவேளை, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நிலைமை தொடர்பில் உண்மைகள் கண்டறியப்பட்டே ஆகவேண்டும்.

தம் அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறிந்துகொள்ளாமல் எந்தவொரு நட்டஈட்டுக்கும் எம் மக்கள் அனுமதிக்கமாட்டார்கள். அரச படைகளிடம் கையளிக்கப்பட்டவர்கள் இருந்திருப்பின் அவர்கள் எவ்வாறு இறந்தார்கள் என்ற உண்மை வெளிக்கொணரப்பட வேண்டும்.

உண்மையைக் கண்டறிந்து நட்டஈடு வழங்குவதில் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலம் மற்றும் நட்டஈடு அலுவலகம் என்பன சேர்ந்து இயங்க வேண்டும் என நாம் எதிர்பார்த்தோம். அது தற்போது நிகழ்வதற்கான சாத்தியங்கள் குறைவு. எம்மால் இயலுமான அனைத்தையும் நாம் செய்து விட்டோம்; இனிமேல் இலங்கை அரசு தனது வாக்குறுதிகளை நிறைவேற்றுவதை சர்வதேச சமூகம் உறுதி செய்ய வேண்டும்.

வேலைவாய்ப்பின்மையைக் குறைக்கும் முகமாக புதிய அபிவிருத்தித் திட்டங்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குத் தேவை. வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு ஒரு விசேட வேலைத்திட்டம் கட்டாயம் தேவை. வடக்கு, கிழக்கில் மீன்பிடித் துறை, விவசாயம், பண்ணை வளர்ப்பு போன்ற துறைகள் நவீனமயப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறு செய்யப்படுகின்றபோது உச்ச பயன்பாட்டை அடைய முடியும் என்று சுட்டிக்காட்டினார்.

இவற்றைக் கேட்டறிந்த அமெரிக்க காங்கிரஸ் சபை உறுப்பினரும் ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியங்களின் வெளிவிவகார உபகுழுவின் தலைவருமான அமி பேரா, "இலங்கை அரசானது சர்வதேச சமூகத்துக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றியே ஆக வேண்டும். இந்தக் கடப்பாட்டிலிருந்து இலங்கை அரசு விலக முடியாது. இதை உறுதிசெய்யும் வகையில்ஐக்கிய அமெரிக்கா அனைத்து முயற்சிகளையும் எடுக்கும்" - என்றார். (எ-22)

## மின்சாரத்தால்...

சங்கானை, தேவாலய வீதியைச் சேர்ந்த நல்லகுமார் நிசாந்தன் (வயது-17) என்ற சிறுவனே உயிரிழந்துள்ளான்.

குளிர்பான நிலையத்தின் 4ஆம் மாடியில் மின்சார இயந்திரத்தின் மூலம் உருளைக்கிழங்கு சீவும் பணியில் ஈடுபட்டிருந்தபோதே சிறுவன் மின் தாக்கத்துக்கு இலக்காகியுள்ளான். ஏனைய பணியாளர்கள் சிறுவனை மீட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டு சென்றுள்ளனர். எனினும் சிகிச்சை பயனின்றிச் சிறுவன் உயிரிழந்துள்ளான்.

இவர் கடந்த இரு ஆண்டுகளாக அங்கு பணியாற்றுகின்றார் என்று விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் மேற்கொண்டார்.

**அந்த இயந்திரத்தின் மின்வயர் ஏற்கனவே சேதப்பட்டிருந்தது என்றும், அது** "சலோரேப்" மூலம் ஒட்டப்பட்டிருந்த நிலையில் மின் கசிவு ஏற்பட்டிருந்தது என்றும் விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, மின்சாரத் தாக்கத்துக்கு இலக்காகி உயிரிழந்தவர் 17 வயதுச் சிறுவன் என்பதையடுத்துச் சிறுவர் திணைக்களம் மற்றும் தொழில் திணைக்களம் என்பவையும் இந்தச் சம்பவம் தொடர்பாகக் கவனம் செலுத்தியுள்ளன.

உயிரிழந்தவர் 17 வயதுடையவர் என்று மருத்துவமனைப் பதிவுகள் தெரிவிக்கின்றன. சிறுவன் 2002ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் பிறந்துள்ளார் என்று அடையாள அட்டையின் மூலம் தெரியவந்துள்ளது என்று பொலிஸாரும் தெரிவித்துள்ளனர். இதனடிப்படையில் குறித்த சிறுவன் 17 வயதும் 6 மாதங்களும் நிரம்பியவராவார். ஆயினும் 18 வயதுக்குக் குறைந்தோரை கடினமான வேலைக்கும், 17 வயதுக்கு உட்பட்டோரை ஆபத்தான வேலைக்கும் அமர்த்தக் கூடாது என்ற அடிப்படையிலேயே இந்தச் சம்பவம் தொடர்பாகக் குறித்த திணைக்களங்கள் கவனம் செலுத்தியுள்ளன என்று அறியமுடிகின்றது.

உயிரிழந்த சிறுவன் எவ்வளவு காலம் பணியாற்றியுள்ளார்?, போதிய அனுபவம் இல்லாத நிலையில் சிறுவன் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டாரா? என்பது தொடர்பான ஆராய்வுகளில் இரு திணைக்களங்களும் ஈடுபட்டுள்ளன. சிறுவனின் பிறப்புச் சான்றிதழ், ஏனைய ஆவணங்களைத் திரட்டும் பணியில் இந்தத் திணைக்களங்கள் ஈடுபட்டுள்ளன என்றும் கூறப்படுகின்றது. (அ-எ-105,26)

## யாழ்ப்...

யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து உருக்கப்பட்ட நிலையிலும், நகைகளாகவும் சுமார் 20 பவுணும், மண்ணில் புதைக்கப்பட்டு மறைக்கப்பட்டிருந்த 4 லட்சத்து 10-ஆயிரம் ரூபா பணமும் மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரசாத் பெர்ணான்டோவின் வழிகாட்டலில், சிறப்புக் குற்றத் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி முனசிங்க தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட சிறப்பு நடவடிக்கையிலேயே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

**யாழ்ப்பாணம் அரியாலைப் பகு**தியில் நடத்தப்பட்ட திடீர் சுற்றிவளைப்புத் தேடுதலில் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும், கைது செய்யப்பட்டவர்கள் அரியாலைப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் கூறுகின்றனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 20 தொடக்கம் 25 வயதுடையவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் யாழ்ப்பாணம் நீதிவான் மன்ற நீதிபதி வாசஸ்தலத்தில் முற்படுத்தப்பட்டு எதிர்வரும் 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். (எ-26,106,111,20,7)

## மகளை...

தந்தை என்று தெரிவிக்கப்படுகின்றது. இவர் தனது மகளான பதின்ம வயதுச் சிறுமியைப் பல நாள்களாக பாலியல் துன்புறுத்தல்களுக்கு உட்படுத்தி வந்தார் என்றும், அயலவர்கள் ஊடாக இந்தத் தகவல் பொலிஸாருக்குக் கிடைத்ததை அடுத்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு சந்தேகநபரைக் கைது செய்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர் முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் இல்லத்தில் முற்படுத்தப்பட்டுநேற்றுவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரண்ணகள் நடைபெற்று வருகின்றன என்றும், மருத்துவ சோதனைகளின் பின்னர் சிறுவர் நன்னடத்தைப் பிரிவினரிடம் சிறுமி ஒப்படைக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ப-19)

கொட்டிபதி கப்ருக
சீட்டிழுப்பு வாரம்: 560
திகதி: 2020 பெப்ரவரி 16
வர்ணம்: மஞ்சள் ஞாயிறு
S 09 36 59 78
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 78,055,895/-
மஞ்சள், இளஞ்சிவப்பு மற்றும் பச்சை நிற டிக்கட்டுகள் முறையே ஞாயிற்றுக்கிழமை, செவ்வாய்க்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றிபெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>KK என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1128
சீட்டிழுப்பு திகதி 2020.02.16 ஞாயிற்றுக்கிழமை
B 33 48 73 74
2 சான்ஸ் 1 4 9 8
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
ஊதா, பச்சை, நீலம், சிவப்பு நிற டிக்கட்டுகள் முறையே திங்கட்கிழமை, வியாழக்கிழமை, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 886
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2020.02.17
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 53,515,905/-
வெற்றி இலக்கங்கள் 21 22 37 42 J

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு இல.: 3302 திகதி: 2020.02.17
நீலம் திங்கட்கிழமை
வெற்றி இலக்கங்கள் 10 34 60 63 Y
அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட் 33,677,150/-
Web: www.dlb.lk
அல்லது நூரித் அழைப்பு - 0114 824 824, 0112 333 778

ராசி அதிர்ஷ்டம்
திகதி 17.02.2020 வெற்றி வாரம் 2772 வர்ணம் மஞ்சள்
மகரம்
வெற்றி இலக்கங்கள் 22 24 38 59
செவ்வாய்க் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2.547.334/=
டபள் சான்ஸ் விசேட இல.
ரூ.500 பரிசுக்காக 9303
ரூ.100 பரிசுக்காக 746
18.02.2020 ம் திகதி செவ்வாய்க் கிழமை சிகப்பு நிற டிக்கட்டுக்களுக்கும்
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்



# இன்றைய நாள்

**மேடம்:** சிந்தனைகள் வெற்றி பெற வழி பாட்டை மேற்கொள்ள வேண்டிய நாள். செலவுகள் அதிகரிக்கும். சொத்துக்களாலும், சொந்தங்களாலும் பிரச்சினை உண்டு. மாமன், மைத்துனர் வழியில் மனஸ்தாபங்கள் ஏற்படலாம்.

**இடபம்:** பிரிந்துசென்றவர்கள் பிரியமுடன் வந்திணையும் நாள். கனிவாகப் பேசிக் காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள். வருமானம் திருப்தி தரும். அந்நிய தேசத் தொடர்பால் அனுகூலம் காண்பீர்கள்.

**மிதுனம்:** கடன்சுமை குறையும் நாள். கனவு பலிதமுண்டு. நல்லவர்களின் தொடர்பு கிடைத்து மகிழ்வீர்கள். பொது வாழ்வில் புகழ் கூடும். பிள்ளைகளால் உதிரிவருமானங்கள் உண்டு.

**கடகம்:** இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரும் நாள். பிள்ளைகள் வழியில் உதிரி வருமானங்கள் உண்டு. இடம், பூமி வாங்கிச் சேர்க்க அனுபவமிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள். நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறும்.

**சிம்மம்:** வழக்குகளில் வெற்றி கிடைக்கும் நாள். வரவு திருப்தி தரும். உன்னதமான வாழ்விற்கு உடன்பிறப்புகள் உதவிக்கரம் நீட்டுவர். வருங்கால நலன் கருதி சேமிக்கத் தொடங்குவீர்கள்.

**கன்னி:** நண்பர்கள் மூலம் நல்ல தகவல் கிடைக்கும் நாள். வீண் செலவுகள் குறையும். தொழில் ரீதியாக எடுத்த முயற்சி வெற்றி பெறும். தொல்லை தந்த எதிரிகள் விலகுவர்.

**துலாம்:** நேற்றைய பிரச்சினை இன்று நல்ல முடிவிற்கு வரும் நாள். நினைத்தது நிறைவேறும். பணப்புழக்கம் அதிகரிக்கும். உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள். வீடு, இடம் வாங்கப் போட்ட திட்டங்கள் நிறைவேறும்.

**விருச்சிகம்:** பணவரவு திருப்தி தரும் நாள். பயணங்களால் மகிழ்ச்சி இரட்டிப்பாகும். தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். சொத்து சேர்க்கை சம்பந்தப்பட்ட வகையில் நல்ல முடிவு எடுப்பீர்கள்.

**தனுசு:** இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள். திடீர் செலவுகள் அதிகரிக்கும். தொழில் கூட்டாளிகளிடம் சில குழப்பங்கள் ஏற்பட்டு அகலும்.

**மகரம்:** உள்ளம் மகிழும் தகவல் கிடைக்கும் நாள். உற்சாகத்துடன் செயல்படுவீர்கள். பணத்தேவைகள் எதிர்பார்த்ததை விட இருமடங்காக வந்து சேரலாம். தொழிலை விரிவுபடுத்தலாமா என்ற சிந்தனை மேலோங்கும்.

**கும்பம்:** வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்து கொள்வீர்கள். குடும்பத்தினர்கள் உங்கள் சொல்லுக்கு மதிப்புக் கொடுப்பர். உங்களின் நிர்வாகத் திறமைக்கு பாராட்டுக்கள் கிடைக்கும்.

**மீனம்:** செல்வ வளம் பெருகும் நாள். திடீர் பயணங்கள் ஏற்படும். உறவினர்களின் வருகை உண்டு. உத்தியோகத்தில் உயர் பதவி வருவதற்கான அறிகுறிகள் தோன்றும்.



# ஐ.நா. பொதுச்செயலர் பாகிஸ்தானில் முகாம்

## பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஆய்வு

இஸ்லாமபாத், பெப். 18

ஆப்கன் அகதிகள் பிரச்சினை, காஷ்மீர் பிரச்சினை, கர்த்தார்பூர் குருத்வாரா தர்பார் சாஹிப் கலவரங்கள் உள்ளிட்ட பல்வேறு விவாதங்களில் பங்கேற்பதற்காக நேற்றுக் காலை ஐ.நா சபையின் பொதுச் செயலர் அன்டோனியோ குத்தேரஸ் பாகிஸ்தானுக்கு வந்தார்.

இது தொடர்பில் பாகிஸ்தான் வெளியுறவுத்துறை தெரிவித்ததாவது:

ஐ.நா பொதுச்செயலர் அன்டோனியோ குத்தேரஸ் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நான்கு நாள் பயணமாக பாகிஸ்தான் வந்துள்ளார். இந்தப் பயணத்தின் போது பாகிஸ்தான் அதிபர் ஆரிப் ஆல்வி, பிரதமர் இம்ரான் கான் மற்றும் வெளியுறவு அமைச்சர் ஷா மஹ்மூத் குரேஷி ஆகியோருடன் குத்தேரஸ் பேச்சு நடத்துவார். இந்த சந்திப்புகளின் போது, காஷ்மீர் பிரச்சினை குறித்து பாகிஸ்தான் தனது கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளும்.

பாகிஸ்தான் மற்றும் ஐக்கிய நாடுகளின் அகதிகள் அமைப்பு (யு.என்.எச்.சி.ஆர்) ஏற்பாடு செய்துள்ள "பாகிஸ்தானில் 40 ஆண்டுகளாக உள்ள ஆப்கானிஸ்தான் அகதிகள்" என்ற தொனிப்பொருளில் இரண்டு நாள் சர்வதேச மாநாட்டில் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றுவார். இரண்டு நாள் நடைபெறும் மாநாட்டை திங்கட்கிழமை பிரதமர் இம்ரான்கான் தொடங்கி வைக்கிறார்.

மேலும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாகிஸ்தான் இளைஞர்களையும் குத்தேரஸ் சந்தித்துப் பேச உள்ளார். இந்தப் பயணத்தில் லாகூர் உள்ளிட்ட பல்வேறு இடங்களுக்குச் சென்று பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் அன்டோனியோ குத்தேரஸ் நாட்டின் நிலையான வளர்ச்சி, காலநிலை மாற்றம் மற்றும் அமைதி காத்தல் ஆகிய கருப்பொருள்கள் குறித்து சிறப்பு பேச்சுக்களை ஆற்றவுள்ளார்.

இது தவிர, கர்த்தார்பூரில் உள்ள சீக்கிய மத நிறுவுநர் குரு நானக் தேவின் இறுதி ஓய்வு இடமான குருத்வாரா தர்பார் சாஹிப்பையும் அவர் பார்வையிடுகிவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)



# மசூத் அசாரை காணவில்லை!

இஸ்லாமபாத், பெப். 18

மசூத் அசாரையும் அவரது குடும்பத்தினரையும் காணவில்லை என்று சர்வதேச தீவிரவாத நிதி தடுப்பு கண்காணிப்பு அமைப்பிடம் பாகிஸ்தான் தெரிவித்துள்ளதாக தகவல் தற்போது வெளியாகி உள்ளது.

ஜம்மு காஷ்மீர், புல்வாமாவில் கடந்த வருடம் இந்தியச் சிப்பாய்கள் மீது நடத்தப்பட்ட தீவிரவாதத் தாக்குதலில் 40 பேர் கொல்லப்பட்டனர். இந்தத் தாக்குதலுக்கு பாகிஸ்தானில் செயல்படும் ஜெய்ஷ் இ முகமது அமைப்பு பொறுப்பேற்றது. இந்தத் தாக்குதலுக்குப் பதிலடியாக பாகிஸ்தானில் பாலகோட் பகுதியில் செயல்பட்டுவரும் ஜெய்ஷ் இ முகமது முகாம்களை இந்திய விமானப்படை குண்டுவீசி அழித்தது.

இந்த நிலையில் கடந்த மே மாதம் முதலாம் திகதி நடந்த ஐ.நா பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் மசூத் அசாரை சர்வதேச தீவிரவாதியாக ஐ.நா பாதுகாப்புச் சபை அறிவித்தது.

இந்த நிலையில் சர்வதேச தீவிரவாத நிதி தடுப்பு அமைப்பின் சார்பில் கடந்த ஒக்டோபர் மாதம் நடந்த கூட்டத்தில் பங்கேற்ற பாகிஸ்தான் மசூத் அசாரையும் அவரது குடும்பத்தினரையும் காணவில்லை என்று தெரிவித்துள்ளதாக தகவல் தற்போது வெளியாகி உள்ளது. (ம)

# நைஜீரியாவில் 30பேர் கொலை

## கிராமங்களுக்குள் புகுந்த ஆயுதக்குழு வெறியாட்டம்

அபுஜா, பெப். 18

நைஜீரியாவில் 2 கிராமங்களுக்குள் பயங்கரவாதிகள் ஒரே சமயத்தில் புகுந்து தாக்குதல் நடத்தியதில் 30 பேர் கொன்று குவிக்கப்பட்டனர்.

நைஜீரியாவில் ஆதிக்கம் செலுத்தி வரும் போகோஹரம் பயங்கரவாதிகள் அங்குள்ள கிராமங்களுக்குள் நள்ளிரவில் புகுந்து, கொடூரத் தாக்குதல் நடத்தி அப்பாவி மக்களை கொன்று குவிப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். இதனால் அங்குள்ள பல்வேறு கிராமங்களுக்கு ராணுவம் மற்றும் பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அந்த நாட்டின் வடக்கு மாகாணமான காட்சினாவில் உள்ள 2 கிராமங்களுக்குள் பயங்கரவாதிகள் ஒரே சமயத்தில் புகுந்து தாக்குதல் நடத்தினர். சிறுவர்கள் மற்றும் முதியவர்களை குறிவைத்து நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் 30 பேர் கொல்லப்பட்டனர். (ம)





# அரசகட்டுப்பாட்டில் அலெப்போ

டமஸ்கஸ், பெப். 18

சிரியாவில் கிளர்ச்சியாளர்களின் அலெப்போ பகுதியின் பெரும்பாலான இடங்களை அரசபடைகள் கைப்பற்றியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து சிரிய அரசு ஊடகங்கள் தரப்பில், 'சிரியாவின் வடமேற்குப் பகுதியில் உள்ள அலேப்போ பகுதியில் கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டுப் பகுதியில் கடந்த சில நாள்களாக அரச படைகள் தாக்குதல் நடத்தி வருகின்றன. இதில் போர் விமானங்களைக் கொண்டு கடுமையான தாக்குதல்கள் நேற்று முன்தினம் நடத்தப்பட்டன. கிளர்ச்சியாளர்கள் வசம் இருந்த பெரும்பாலான பகுதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அதிபர் ஆசாத் படைகள் குடியிருப்புப் பகுதிகளில் தாக்குதல் நடத்துகின்றன எனவும், இதன் காரணமாக பெண்கள், குழந்தைகள் எனப் பலரும் காயமடைந்தனர் எனவும் சிரியாவில் இயங்கும் போர் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது. முன்னதாக, சிரியாவில் அதிபர் ஆசாத்துக்கும் ஐ.எஸ் பயங்கரவாதிகளுக்கும் இடையே கடந்த ஆறு ஆண்டுகளாக உள்நாட்டுப் போர் நடந்து வருகிறது. இதில் ஐ.எஸ். பயங்கரவாதிகளின் கட்டுப்பாட்டில் இருந்த சிரியாவின் பல்வேறு பகுதிகள் அரச கூட்டுப் படைகளால் மீட்கப்பட்டுவிட்டன. போர் காரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். மேலும், உள்நாட்டுப் போர் காரணமாக லட்சக்கணக்கான மக்கள் அகதிகளாக அண்டை நாடுகளுக்கு இடம் பெயர்ந்துள்ளனர். (ம)

# கொரோனா சாவு 1,800

பீஜிங், பெப். 18

சீனாவில் கொரோனா வைரஸ் பாதிப்புக்கு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 1,800ஆக அதிகரித்தது.

சீனாவின் ஹூபே மாகாண தலைநகர் வுகானில் கடந்த டிசெம்பர் மாத இறுதியில் கொரோனா வைரஸ் கண்டறியப்பட்டது. இதன் பின்னர் சீனாவின் பிற பகுதிகளுக்கும், வெளிநாடுகளுக்கும் பரவி மிகப்பெரிய பாதிப்பை அது ஏற்படுத்தியுள்ளது. வுகானில் எதிர்பாராத அளவுக்கு மிகையான பாதிப்பை கொரோனா ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலையில், ஹூபே மாகாணத்தில் நேற்று மேலும் 100 நபர்கள் கொரோனாவால் உயிரிழந்துள்ளனர். இதன்மூலம் சீனாவில், கொரோனா வைரஸ் பாதிப்பால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 1,800ஆக உயர்ந்துள்ளது. சுமார் 72,000 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் சுமார் 12,000 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. (ம)





## இங்கிலாந்தை
# தாக்கியது 'டென்னிஸ்' இதுவரை இருவர் பலி

லண்டன், பெப். 18

இங்கிலாந்தில் டென்னிஸ் புயல் நேற்றுத் தாக்கியது. இதில் இருவர் உயிரிழந்தனர். மேலும் பலர் புயலால் நேரடிப் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர். இங்கிலாந்தை கடந்த வார இறுதியில் சியாரா புயல் தாக்கியது. இதில் கடும் வெள்ளம் ஏற்பட்டது. இதையடுத்து மிகக் குறுகிய காலத்தில் டென்னிஸ் என்ற புயல் நேற்று இங்கிலாந்தைத் தாக்கியது.

இதுபற்றி இங்கிலாந்து நாட்டின் அரசு வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள எச்சரிக்கை அறிவிப்பில், கடுமையான பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் டென்னிஸ் புயல் இருக்கும். குறிப்பிடும்படியாக, சவுத் வேல்ஸ் நகரில் வசிப்போரின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் இதன் தாக்கம் இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## அமெரிக்கத் தூதரகத்தை
# இலக்குவைத்து 4 ஏவுகணைகள்

பக்தாத், பெப். 18

ஈராக் தலைநகர் பக்தாத்தில் உள்ள அமெரிக்கத் தூதரகத்துக்கு அருகே நேற்றும் ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. மூன்றாவது தடவையாக இவ்வாறு அமெரிக்கத் தூதரகம் இலக்கு வைக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஈராக் அதிகாரிகள் தரப்பில், 'ஈராக் தலைநகர் பக்தாத் அருகே அமைந்துள்ள அமெரிக்கத் தூதரகத்தில் ஞாயிற்றுக்கிழமை 5 ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தத் தாக்குதல் காரணமாக எவருக்கும் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. எனினும் ஈரானால் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்பட்டுள்ளது. (ம)




## மரண அறிவித்தல்



# சிவலிங்கம் புலேந்திரன்

யாழ்ப்பாணம் சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவையும் லண்டனையும் வசிப்பிடமாகக் கொண்ட சிவலிங்கம் புலேந்திரன் கடந்த 13.02.2020 வியாழக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவலிங்கம் - பத்மாவதி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற ஜெயமோகன் மற்றும் சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மருமகனும், சர்மிளாவின் (லண்டன்) அன்புக் கணவரும், ஜெஷாந்த், ஜெஷானா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான குலேந்திரன், துர்க்கதாஸ் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், பிரசாந், பிரகாஸ் (நோர்வே) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

Chapel Ridge Funeral home locates at 8911 woodbine Avenue, Markham, on Tuesday the 18th Feb from 5 pm to 9 pm and Wednesday the 19th Feb from 8 am to 9.30 am and service on 19th Feb from 9.30 am to 11.30am and followed by cremation at 12pm at Highland Hills Crematorium locates at 12491 woodbine Avenue Gormley on

தகவல்:- குடும்பத்தினர்.

பிரதீப் (கனடா) - +164 74 70 8052, கோமதி (கனடா) - +164 77 85 5009, சதீஸ் (கனடா) - +164 379 92 6290, பிரபா (லண்டன்) - +44 78 900 83 611, பிரசாந் (இலங்கை) - +94 76 300 1969, + 94 7742 89 732

## பூப்பந்தாட்ட போட்டி முடிவு



ஈஸ் ஈகிள் ஸ்மாஷர்ஸ் (யூ.கே), மற்றும் எம்.எஸ்.ஆர் நிறுவனங்கள், 3ஆவது வருடமாக யாழ்ப்பாணம் பூப்பந்தாட்டச் சங்கத்துடன் இணைந்து நடத்திய பூப்பந்தாட்டத் தொடரின் திறந்த பிரிவு பெண்களுக்கான ஒற்றையர்ஆட்டத்தில் ராகவி கிண்ணம் வென்றார்.

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய உள்ளக விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற திறந்த பிரிவு பெண்களுக்கான ஒற்றையர்ஆட்டத்தில் ராகவியை எதிர்த்து தமிழினி மோதினார்.

முதலாவது செற் ஆட்டத்தை ராகவி 21:17 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றார். இரண்டாவது செற் ஆட்டத்தை தமிழினி 21:18 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றார். மூன்றாவது செற் ஆட்டத்தை ராகவி 21:16 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றார். ஆட்ட நேர முடிவில் 3:1 என்ற செற் கணக்கில் ராகவி வெற்றி பெற்று கிண்ணம் வென்றார்.



மற்றுமொரு ஆண்களுக்கான ஒற்றையர் ஆட்டத்தில் துஷந்தன் கிண்ணம் வென்றது. அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய உள்ளக விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் இடம் பெற்ற திறந்த பிரிவு ஆண்களுக்கான ஒற்றையர்ஆட்டத்தில் துஷாந்தனை எதிர்த்து றெமின்சன் மோதினார்.

முதலாவது செற் ஆட்டத்தை துஷாந்தன் 21:6 என்ற புள்ளிகள் அடிப்படையிலும், இரண்டாவது செற் ஆட்டத்தை றெமின்சன் 21:19 என்ற புள்ளிகள் அடிப்படையிலும், மூன்றாவது செற் ஆட்டத்தை துஷாந்தன் 21:16 என்ற புள்ளிகள் அடிப்படையிலும் வெற்றி பெற்று கிண்ணம் வென்றார்.

ஆண்களுக்கான இரட்டையர் ஆட்டத்தில் துஷாந் தன்- றெமின்சன் இணை கிண்ணம் வென்றனர்.

துஷந்தன்- றெமின்சன் இணையை எதிர்த்து காண்டீபன்- கீர்த்தனன் இணை மோதினர். முதலாவது செற் ஆட்டத்தை காண்டீபன்- கீர்த்தனன் இணை 22:19 என்ற புள்ளிகள் அடிப்படையிலும், இரண்டாவது, மூன்றாவது செற் ஆட்டத்தை துஷாந்தன்- றெமின்சன் இணை 21:18, 21:17 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று கிண்ணம் வென்றனர்.

மற்றுமொரு ஆண்களுக்கான 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான இட்டையர் ஆட்டத்தில் குகதாஸ் - காண்டீபன் இணை கிண்ணம் வென்றனர்.

அன்ரன் - சுகுமார்



இணையை எதிர்த்து காண்டீபன்- குகதாஸ் இணை மோதியது. முதலாவது செற் ஆட்டத்தினை காண்டீபன்- குகதாஸ் இணை 21:07 என்ற புள்ளிகள் அடிப்படையிலும், இரண்டாவது செற் ஆட்டத்தை அன்ரன்- சுகுமார் இணை 22:20 என்ற புள்ளிகள் அடிப்படையிலும், மூன்றாவது செற் ஆட்டத்தை காண்டீபன்- குகதாஸ் இணை 21:9 என்ற புள்ளிகள் அடிப்படையிலும் கைப்பற்றி கிண்ணத்தைக் கைப்பற்றினர்.

கலப்பு இரட்டையர் ஆட்டத்தில் துஷாந்தன், சந்திரமதி இணை கிண்ணம் வென்றது.

அரியாலை- சரஸ்வதி சனசமூக நிலைய உள்ளக விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலப்பு இரட்டையர் ஆட்டத்தில் துஷாந்தன்- சந்திரமதி இணையை எதிர்த்து றெமின்சன்- தமிழினி இணை மோதினர்.

முதலாவது, இரண்டாவது செற் ஆட்டத்தை துஷாந்தன்- சந்திரமதி இணை 21:17, 21:19 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றி கிண்ணத்தைச் சுவீகரித்தனர். (23)





'மன்னார் பிறீமியர் லீக்'

# முதல் போட்டியில் பள்ளிமுனை வெற்றி

மன்னார் மாவட்ட கால்பந்தாட்ட லீக்கினால் ஏற்பாடு செய்யப்பட்ட 'மன்னார் பிறீமியர் லீக்' கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் ஆரம்ப நிகழ்வும், முதல் சுற்றுப் போட்டியும் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு மின் ஒளியில் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் 'மன்னார் பிரீமியர் லீக்' தலைவரும், இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் உப தலைவரும், மன்னார் நகர முதல்வருமான ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வின் முதல் சுற்றுப் போட்டி இரவு 8 மணிக்கு ஆரம்பமானது. இதில் பள்ளிமுனை கால்பந்தாட்ட அணியை எதிர்த்து பிரதர் ஸ்ரனி ஐக்கிய கால்பந்தாட்ட அணி மோதியது. இதில் பள்ளிமுனை கால்பந்தாட்ட அணி 3:1 என்ற கணக்கில் வெற்றி பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் அனுரடி சில்வா, மற்றும் விருந்தினர்களாக இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் நிதிக் குழுவின் தலைவரும், மாவட்ட லீக்குகளின் அபிவிருத்திக் குழு தலைவருமான ஆர். புலேந்திரன், மன்னாரின் உதைபந்தாட்ட தந்தை என அழைக்கப்படும் அருட்சகோதரர் ஸ்ரனிஸ்லஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். (56)



## இறுதிக்குத் தகுதி பெற்றது ஏபி விளையாட்டுக்கழகம்

கொக்குவில் வளர்மதி முன்னேற்ற கழகமும் சனசமூக நிலையமும் வருடந்தோறும் நடத்தும் அணிக்கு 30 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட விக்கிரம், ராஜன், கங்கு ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான துடுப்பாட்டத் தொடரில் ஏபி விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் மதியம் இடம் பெற்ற ஆட்டத்தில் ஏபி விளையாட்டுக்கழகஅணியை எதிர்த்து திருநெல்வேலி துடுப்பாட்டக்கழக அணி மோதியது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற திருநெல்வேலி துடுப்பாட்டக்கழக அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. அதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய ஏபி விளையாட்டுக்கழக அணி 28.2 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 172 ஓட்டங்களை பெற்றது. அணி சார்பில் சிலோயன் 33 ஓட்டங்களையும், கஜீபராஜ் 29 ஓட்டங்களையும், ஆதித்தன் 28 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்துவீச்சில் சுயன் 3 இலக்குகளையும், சுரேஸ் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத்துடுப்பெடுத்தாடிய திருநெல்வேலி துடுப்பாட்டக் கழக அணி 27.2 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 140 ஓட்டங்களை மாத்திரமே பெற்று 32 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அணி சார்பில் சிவராஜ் 33 ஓட்டங்களையும், சுயன் 30 ஓட்டங்களையும், பிரபவன் 12ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்துவீச்சில ராகுலன், ஞானா ஆகியோர் தலா 3 இலக்குகளையும், பார்த்தீபன் 2 இலக்குகளையும் சரித்தனர். (23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், பெப்.18

சிவராத்திரி தினத்தை முன்னிட்டு கரவெட்டி வாலிபர் வட்டம் விளையாட்டுக் கழகம் நடத்தும் அமரர் க.சிவநேசன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் இன்று செவ்வாய்க்கிழமை கழக மைதானத்தில் மின்ஒளியில் ஆரம்பமாகின்றது.

இதில் இரவு 7மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் தொண்டைமானாறு விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மோகனதாஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

இரவு 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம், பெப்.18

யாழ்ப்பாண மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுடன் சங்கானை கிங்ஸ் விளையாட்டுக் கழக அணி மின் ஒளியில் நடத்தும் தாச்சி சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் சங்கானை கிங்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதில் இன்று செவ்வாய்க்கிழமை இடம் பெறும் இரவு7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் திருக்குடும்பம் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உதயசூரியன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)

# யூனியன் அரையிறுதிக்குள்

யாழ்ப்பாணம், பெப்.18

இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தினால் நடத்தப்படும் பிரிவு 2க்கான கால்பந்தாட்டத் தொடரில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழக அணி அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிமை பிற்பகல் 3 மணிக்கு மன்சூர் மௌலானா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டத்தில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சன்னிமவுண்ட் விளையாட்டுக் கழக அணி மோதியது.

இதில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழக அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்துக்கு முன்னேறியது. அணி சார்பில் தனுசன், இறைமியா, டிலான், பிரசாந் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலிலைப் பதிவு செய்தனர். (23)





# மானிப்பாய் ஏஞ்சல் இறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம்,பெப்.18

252ஆவது இராணுவ படைப் பிரிவினாரால் பாடசாலைகளுக்கு இடையில் நடத்தப்படும் 20 வயதுப் பிரிவினருக்கான கூடைப்பந்தாட்டத் தொடரில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

பழைய பூங்காவில் அமைந்துள்ள கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி மோதியது. இதில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணி 68:50 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று இறுதிக்கு முன்னேறியது. (23)

## வில்லியர்ஸுக்கு வாய்ப்பு உண்டு

ஆஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள ரி-20 உலக கோப்பைக்கான தென்னாபிரிக்கா அணியில் டி வில்லியர்ஸ் இடம் பிடிப்பதில் எந்த கருத்து வேறுபாடும் இல்லை என்கிறார் மார்க் பவுச்சர்.

தென்னாபிரிக்கா அணியின் தலைசிறந்த வீரராக திகழ்ந்த வர் ஏபி டி வில்லியர்ஸ். இங்கிலாந்தில் கடந்த ஆண்டு நடைபெற்ற 50 ஓவர் உலக கோப்பை தொடருக்கு தென்னாபிரிக்கா அணி தயாராகி வந்த போது திடீரென அனைத்து வகை கிரிக்கெட்டிலும் இருந்து ஓய்வு பெறுவதாக டி வில்லியர்ஸ் அறிவித்தார். முன்னணி வீரர்கள் ஓய்வு பெற்று வெளியேற தென்னாபிரிக்கா அணி பலமிழந்தது. அணியை மீண்டும் சிறந்த நிலைக்கு கொண்டு வர மாற்றங்கள் செய்யப்பட்டது. ஸ்மித் இயக்குனராகவும், மார்க் பவுச்சர் பயிற்சியாளராகவும் நியமிக்கப்பட்டனர்.

ஆஸ்திரேலியாவில் நடைபெற இருக்கும் டி20 உலக கோப்பைக்கு சிறந்த அணியை தயார்படுத்த தென்னாபிரிக்கா அணி விரும்புகிறது. இதற்கிடையில் ரி-20 அணிக்கு திரும்ப தயார் என்று டி வில்லியர்ஸ் விருப்பம் தெரிவித்திருந்தார். மார்க் பவுச்சர் வில்லியர்ஸ் திரும்புவதற்கு ஆதரவு தெரிவித்தார்.

இந்த நிலையில் டி வில்லியர்ஸ்க்காக கதவு திறந்தே இருக்கும் என மார்க் பவுச்சர் மீண்டும் ஒருமுறை தெளிவுப்படுத்தியுள்ளார்.

இதுகுறித்து மார்க் பவுச்சர் தெரிவிக்கையில்; உலக கோப்பை தொடருக்கு சிறந்த அணியை அனுப்ப விரும்புவோம் என்பதை நான் பதவி ஏற்ற முதல் நாளில் இருந்தே கூறி வருகிறேன். வில்லியர்ஸ் சிறந்த பார்மில் இருந்து அணிக்கு திரும்ப அவர் விரும்பினால், நாங்கள் கேட்டுக்கொண்ட காலத்துக்குள் அவராகவே இடம் பிடிப்பார். அணிக்கு அவர் சிறந்த வீரராக இருப்பார் என்றால், அவருக்கு கட்டாயம் இடமுண்டு-என்றார்.

மாற்றுவலுவுடைய சிறார்களுக்கான போட்டியில்

# புதுவாழ்வு பூங்கா விசேட பாடசாலை மாணவர்கள் பதக்கங்கள் குவிப்பு

கொழும்பு றோட்டரி கழகம் மற்றும் மெட்ரோ பொலிட்டன் நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய ரீதியிலான மாற்றுவலுவுடையோர் சிறார்களுக்கான "2020" விளையாட்டுப் போட்டி கடந்த சனிக்கிழமை கொழும்பிலுள்ள கம்பெல் பூங்கா மைதானத்தில் நடைபெற்றது.

இந்தப்போட்டியில் வவுனியா மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஓஹான்(வவுனியா மாவட்ட வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம்) புதுவாழ்வு பூங்கா விசேட பாடசாலையின் சார்பில் 34 சிறார்கள் பங்குபற்றி 26 பதக்கங்களையும், சான்றிதழ்களையும் பெற்றனர். (222)



# மெய்வன்மைப் போட்டி விண்ணப்பம் கோரல்

கொடிகாமம், பெப்.17

யாழ்.மாவட்ட மெய்வன்மை சங்கத்தின் ஏற்பாட்டில் நடப்பு ஆண்டுக்கான சிரேஷ்ட, கனிஷ்ட மெய்வன்மைப் போட்டிகள் எதிர்வரும் சனி,ஞாயிற்றுக்கிழமைகளில் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

மேற்படி போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள பாடசாலைகள் மற்றும் அங்கத்துவ கழகங்கள் தமது விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து நாளை புதன்கிழமைக்கு முன்னர் யாழ். மாவட்ட மெய்வன்மை சங்கத்துக்கு அனுப்பி வைக்குமாறு யாழ். மாவட்டச் செயலக விளையாட்டு உத்தியோகத்தர் விஜிதரன் அறிவித்துள்ளார்.

விண்ணப்பப் படிவங்களை யாழ்.மாவட்ட மெய்வன்மை சங்க செயலர் எஸ்.சுபாஸ்கரனிடம் பெற்றுக் கொள்ளலாம். (159)

பெண்கள் ரி-20 உலக கோப்பை

# இந்தியா - பாக். பயிற்சி ஆட்டம் மழையால் கைவிடப்பட்டது



பெண்கள் ரி-20 உலக கோப்பை தொடருக்கான பயிற்சி ஆட்டத்தில் இந்தியா - பாகிஸ்தான் அணிகள் மோத இருந்த ஆட்டம் மழையால் கைவிடப்பட்டது.

பெண்களுக்கான ரி-20 உலக கோப்பை ஆஸ்திரேலியாவில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின்றது. அதற்கான பயிற்சி ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன. பிரிஸ்பேனில் உள்ள ஆலன் பார்டர் பீல்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்தியா - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையில் பயிற்சி ஆட்டம் நடைபெறுவதாக இருந்தது.

ஆனால் அங்கு கன மழை பெய்ததால் போட்டி ஒரு பந்து கூட வீசப்படாமல் கைவிடப்பட்டது. இந்திய அணி இன்று இறுதிப் பயிற்சி ஆட்டத்தில் வெஸ்ட் இண்டீஸை எதிர்கொள்கிறது.

# டெஸ்ட் போட்டியில் ஆஸி. வெல்லும்



## ஸ்டீவ் வாக் கணிப்பு

ஆஸ்திரேலியா - இந்திய அணிகளுக்கு இடையிலான 2020-21 டெஸ்ட் தொடரை வெல்ல ஆஸ்திரேலிய அணிக்கே வாய்ப்பு உள்ளதாக ஸ்டீவ் வாக் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியா மண்ணில் விராட் கோக்லி தலைமையிலான இந்திய அணி 2018-19 டெஸ்ட் தொடரை கைப்பற்றியிருந்தது. இதற்கு எப்படியாவது பதிலடி கொடுக்க வேண்டும் என ஆஸ்திரேலியா துடித்துக் கொண்டிருக்கிறது.

இந்த வருடம் இறுதியில் இந்திய அணி ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது. இதில் ஒரு போட்டியை டேநைட் டெஸ்டாக நடத்த விரும்பியது. இதற்கு இந்திய கிரிக்கெட் சபை சம்மதம் தெரிவித்துள்ளது. ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற டேநைட் டெஸ்டில் ஆஸ்திரேலியா ஆதிக்கம் செலுத்தியுள்ளது. மேலும் டேவிட் வோர்னர், ஸ்மித் அணிக்கு திரும்பியுள்ளனர். லபுஸ்சேன் அணிக்குப் பெரும் பலம். இதனால் இந்திய அணியை இலகுவாக வீழ்த்தலாம் என்று ஆஸ்திரேலியா ஊகிக்கின்றது.

இந்த நிலையில் ஆஸ்திரேலியா - இந்தியா இடையிலான டெஸ்ட் தொடரை ஆஸ்திரேலிய அணி வெல்ல வாய்ப்புள்ளது என்று ஸ்டீவ் வாக் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

ஆஸ்திரேலிய அணிக்கு வாய்ப்பு இருப்பதாக நான் நினைக்கிறேன். எங்களுக்கு ஆடுகளம் குறித்து நன்றாகத் தெரியும். டேநைட் டெஸ்டை பொறுத்த வரையில் இந்தியாவுக்கு அது புதிதாகும். விராட் கோக்லி அந்த சவாலை எடுக்கும் விதம் எனக்கு பிடித்திருக்கிறது. நீங்கள் உலகின் சிறந்த அணியாக இருக்க வேண்டும் என்று விரும்பினால், முடிந்த அளவுக்கு வெளிநாட்டு மண்ணில் தொடர்களை வெல்ல வேண்டும்- என்றார்.



# அணியில் இடம்பிடிக்க நம்பகத் தன்மையை உருவாக்க வேண்டும்

## அலெக்ஸுக்கு மோர்கன் அறிவுரை

இங்கிலாந்தின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான அலெக்ஸ் ஹேல்ஸ், அணிக்கு திரும்ப வேண்டுமென்றால் காத்திருந்தே ஆக வேண்டும் என மோர்கன் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து அணியில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராகக் களம் இறங்கி விளையாடியவர் அலெக்ஸ் ஹேல்ஸ். கடந்த ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற உலக கோப்பைக்கான அணியில் இடம் பிடித்திருந்தார். அவர் தடை செய்யப்பட்ட ஊக்க மருந்து உட்கொண்டதாக செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் அணியில் இருந்து நீக்கப்பட்டார்.

அதில் இருந்து தற்போது வரை இங்கிலாந்து அணியில் இடம் பிடிக்காமல் உள்ளார். சமீபத்தில் முடிவடைந்த பிக் பாஷ் ரி-20 லீக்கில் 576 ரன்கள் குவித்தார். சூப்பர் பார்மில் இருக்கும் அலெக்ஸ் ஹேல்ஸ்க்கு மீண்டும் இங்கிலாந்து அணியில் இடம் பிடிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் அலெக்ஸ் ஹேல்ஸ் காத்திருந்தே ஆக வேண்டும் என இங்கிலாந்து அணித் தலைவர் மோர்கன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

அணிக்கும் அலெக்ஸ் ஹேல்ஸ்க்கும் இடையிலான நம்பகத்தன்மை உடைந்து விட்டது. அவர் அணியில் இருந்து நீக்கப்பட்டபோது, அவருடைய ஆட்டத்திறன் மோசமாக இருக்கவில்லை. அவர் உலகின் தலைசிறந்த வீரர்களில் ஒருவர். அதில் இருந்து நகர்ந்து, அணியுடன் நம்பகத் தன்மையை உருவாக்குவது அவசியமானது. அதற்கு போதுமான நேரம் தேவையானது- என்றார்.

# ரி-20 அணியில் பிளாசிஸ், ரபாடா



இங்கிலாந்து தொடருக்காக ஓய்வு கொடுக்கப்பட்ட பிளாசிஸ், ரபாடா ஆஸ்திரேலியா தொடருக்கான தென்னாபிரிக்கா அணியில் இணைக்கப்பட்டுள்ளனர்.

தென்னாபிரிக்கா அணி இங்கிலாந்துக்கு எதிராக மூன்று போட்டிகள் கொண்ட ரி-20 கிரிக்கெட் தொடரில் விளையாடியது. இந்தத் தொடரில் பிளாசிஸ், ரபாடா ஆகியோருக்கு ஓய்வு வழங்கப்பட்டிருந்தது. தற்போது ஆஸ்திரேலியா அணி தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு மூன்று போட்டிகள் கொண்ட ரி-20 தொடரில் விளையாடுகிறது. இதற்கான தென்னாபிரிக்கா அணியில் டு பிளாசிஸ், ரபாடா ஆகியோர் இணைக்கப்பட்டுள்ளனர். பிளாசிஸ் ரி-20 அணிக்கான கப்டன் பதவியிலிருந்து நேற்று விலகியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

போட்டிப்பரீட்சை
மாலை நேர வகுப்புக்கள்
ஆரம்பம் - இன்று
செவ்வாய் [18/02]
IQ 4.45pm - 6.45pm
செவ், புதன், வியா
4.45pm - 6.45pm
SLTES (open/limited)
பதிவாளர், சட்டமானி
T.P:- 0766883394
யாழ்ப்பாணக்கல்லூரி
பட்டப்படிப்புகள் பிரிவு
[யாழ் ஆஸ்பத்திரி வீதியில் ...]

வேலையாள்கள் தேவை
பரந்தனுக்கும் புதுக்குடியிருப்புக்கும் இடைப்பட்ட Hotel ஒன்றுக்கு வேலையாள்கள் தேவை.
Rice, கொத்து, பரோட்டா உணவு தயாரிக்கத் தெரிந்த முன்னனுபவமுள்ளவர்கள் உடன் தேவை. உணவு.
தங்குமிட வசதி இலவசம்.
சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.
076 981 9241, 076 85 22 913

## உபுல் தரங்கவின் அதிரடியில்

# இலங்கைக்கு முதல் வெற்றி



மேற்கிந்தியத்தீவுகள் அணியுடனான பயிற்சிப் போட்டியில் இலங்கை அணி 2 விக்கெட்டுக்களினால் வெற்றிபெற்றது.

இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத்தீவுகள் அணி ஒரு ஒருநாள் பயிற்சிப் போட்டி, 3 ஒருநாள் போட்டி மற்றும் 3 ரி-20 போட்டிகளில் விளையாடி வருகின்றது.

இதில் நேற்று இடம்பெற்ற பயிற்சிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி 49.4 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 282 ஓட்டங்களைப் பெற்றது.

அணி சார்பில் டரன் பிராவோ 88 பந்துகளில் 14 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக 100 ஓட்டங்களையும், சுனில் அம்ரிஸ் 41 ஓட்டங்களையும், நிகோலஷ் பூரண் 41 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் தில்ஷான் மதுசங்க 3 விக்கெட்டுக்களையும், அசித பெர்னாண்டோ 2 விக்கெட்டுக்களையும், டிசில்வா, கவிந்து நதீஷன், புலின தரங்க ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இலங்கை அணி 47.3 ஓவரில் 8 விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

அணி சார்பில் உபுல் தரங்க 124 பந்துகளில் ஒரு சிக்ஸர், 16 பவுண்டரிகள் அடங்கலாக 120 ஓட்டங்களையும், அசேல குணரத்ன 64 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் ஷெல்டன் கொர்ட்ரல், ஹெய்டன் வேல்ஸ் மற்றும் பேபியன் அலென் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும், கீமோ பவுல் ஓர் விக்கெட்டையும் கைப்பற்றினர்.

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : .news@uthayan.com விளம்பரம்: advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.02.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.